Registered as a News Paper
பக்கம் - 24

www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 21 | 15 - 21 - யூலை - 2005

## உலக வங்கியை ஏமாற்றிய சிறிலங்கா அரசு



## அரசு விரிக்கும் போர் வலயம்

## ஜி–08

# எல்லோரும் வாருங்கள் சூழலைப் பாதுகாப்போம்



''Environmentaly friendly" எங்கேயோ பார்த்த ஞாபகம் அல்லது வாசித்த ஞாபகம் என்று யோசிக்கிறீகளா? ஆம் அதுவேதான் நீங்கள் அன்றாடம் பாவிக்கின்ற சில பொருட்கள் அல்லது பல பொருட்களில் இந்த வசனத்தை நிச்சயம் நீங்கள் வாசித்திருப்பீர்கள். இதன் அர்த்தம் "சூழலோடு நட்பாகுங்கள்"

ஏன் இதை நாம் கூறுகின்றோம் என நீங்கள் யோசிக்கலாம் அவ்வாறு யோசித்தால் காரணம் இதுதான்.



இன்று சுற்றுச் சூழல் மாசுப்படுதல் என்பது மிகப்பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. எதிர் கால உலகத்தைப் பற்றி சிந்திக்கின்ற அனைவரும் இதற்கு எதிராகத்தான் குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். இதைவிட இம்முறை மங்காரி மாதாய் என்பவருக்கு சூழலியலுக்கே நோபல் பரிசு வழங்கப் பட்டுள்ளது என்றால் பாருங்களேன். சுற்றுப்புறச் சூழலை பாதுகாப்பதற்கு உலகத்தவர்கள் எந்தளவுக்கு கவனம் செலுத்துகின்றார்கள் என

அத்தோடு விஞ்ஞானிகளும் இப்போது அடிக்கடி சூழலியல பற்றியே குரல் கொடுத்து வருகிறார்கள். குறிப்பாக அண்மைக்காலமாக இவர்களின் கருத்துப்படி இன்னும் சில நூறு ஆண்டுகளுக்குப்பின் லண்டன் நகர் கடலில் மூழ்கிவிடும் என்றும் ஐஸ்லாந்து அதன் தன்மையை இழந்துவிடும் என்றும் அதாவது இன்று பனிப்படலமாகக் காணப்படும் ஐஸ்லாந்தில் அவை காணப்படமாட்டாது. என்றும் அவை உருகிக்கடலுக்குள் செல்வதனால் கடல் மட்டம் உயரும் என்றும் இதே போன்றே உலகில் பல பனிப்பிரதேசங்களின் நிலைமையும் காணப்படும் எனவும் கூறுகின்றார்கள்.

மனிதன் தான் எந்தளவுக்கு நவீனத்தோடு ஒன்றிச் செல்கின்றானோ அதன் பல மடங்கு அளவுக்கு இயற்கையை விட்டு விலகிச்செல்கின்றான். பச்சை வீட்டு விளைவு என்பது உலகத்தினைப்பற்றி சிந்திக்கின்ற அனைவருக்கும் பெரும் தலையிடியை கொடுக்கின்ற பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இதனைவிட அன்றாட நடவடிக்கை மூலம் வெளியேறுகின்ற கழிவுகளும் பெரும் விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. குறிப்பாக பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகள்; இதில் ஆபத்தானவை. மேலும் சூழலை இன்று மனிதனின் பல்வேறு நடவடிக்கைகள் பாதிக்கின்றன. இதன் விளைவுதான் சூழல் தொடர்பாக உலகத்தவர்களின் அககறை அதிகரித்து வருகிறது.

எங்கு ஒரு இயற்கை சூழல் தனது சமநிலையை இழக்கின்றதோ அங்கு சூழல் தன்னுடைய நிலையை இழக்கின்றது. சூழலை முற்று முழுதாக அசாதாரணமாக்கப் படுவதனை தவிர்க்கமுடியாது. ஏனெனில் இன்றைய நவீன உலகம் அவ்வாறுதான் இருக்கிறது.

எனவேதான் இயன்றளவு சூழலை சுகாதாரச் சூழலாக பேணலாம். அதற்கான நடவடிக்கைகளை நாம் அனைவரும் மனம் வைத்தால் செய்யலாம்; செய்யவும் முடியும். பொதுவான சூழலைப் பற்றியே கூறிக் கொண்டிருக்கின்றோம் எமது சூழலை பாதுகாப்பதற்கு யார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று கூறவில்லையே எனக்கேட்கின்றீர்களா? தொடர்ந்து வாசியுங்கள்.

"இவ்வருடத்திற்குள் கிளிநொச்சி நகரின் சூழலை முற்று முழுதாக சுகாதாரச் சூழலாக மாற்றப் போவதாக கூறுகிறார். தமிழீழ சுகாதாரச் சேவைப் பணிப்பாளர் டாக்ர் ச.விக்கினேஸ்வரன் அவர்கள்.

சந்தோசமான விடயம் என்று தனியே மகிழ்ச்சியோடு நின்று விடாதீர்கள் நீங்களும் தமிழீழ சுகாதார சேவையினரோடு தொடர்ந்து ஒத்துழையுங்கள் இவ்வருடம் அல்ல ஒரு சில மாதத்திற்குள்ளே வென்று விடலாம்.

கிளிநொச்சி நகர் என்றால் எங்களது நகர்களுக்கு எப்போது என்று ஏக்கம் ஏனைய நகரில உள்ளவர்களுக்கு வந்தால் கவலையை விடுங்கள் அடுத்தடுத்த நடவடிக்கைகள் உங்கள் உங்கள் நகரங்களுக்குத்தான். முதலில் மிக வேகமாக வளர்ந்துவரும் கிளிநொச்சி நகருக்குப் பின் தொடர்ந்து எல்லா நகரங்களும் தங்களின் நடவடிக்கை மேற்கொள்ளப் படும்என கூறுகின்றார்கள் தமிழீழ சுகாதார சேவையினர். அந்த வகையில் தமிழீழ சுகாதார சேவை பணிப்பாளர் ச.விக்கினேஸ்வரன் கூறுவதைக் கேளுங்கள்.

சூழலை பொறுத்தவரை பல்வேறு காரணங்களால் மாசுபடுகின்றது. அவற்றுள் திண்ம, திரவ வயுக் கழிவுகள் பெரும்பங்கு வகிக்கின்றன. அதாவது மனித நடவடிக்கையின் நிமிர்த்தம் தொழிற்சாலைகள், உணவகங்கள், மற்றும் மலம் போன்ற கழிவுகளோடு எமது மக்களிடம் காணப்படுகின்ற ஒரு சில பழக்க வழக்கங்கள்.

அதாவது, அவர்கள் நாளாந்தம் பாவிக்கின்ற பொலித்தீன் பைகள், கடதாசிகள் என்பவற்றை அந்தந்த இடங்களிலேயே எறிந்து விட்டுச் செல்வது போன்ற எமது நடவடிக்கைகளாலேயே எமது சுற்றுச் சூழல் மாசுபடுகின்றது. இதனை கட்டுப்படுத்தவே நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அந்த வகையில் அண்மைக் கால கிளிநொச்சி நகரில் முதலில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அதன்படி தென்னிலங்கையில் எமது பகுதிக்கு வருகின்ற உக்கும் தன்மையற்ற பொலித்தீன் வகைகளை முற்று முழுதாக தடை செய்வது எமது பிரதேசத்தில் உக்கக் கூடிய பொலித்தீன் வகைளை உற்பத்தி செய்து பாவனைக்கு விட்டு வருகின்றோம். மேலும் இந் நகரத்தில் பெறப்படுகின்ற கழிவுகளில் உக்கக்கூடிய கழிவுகளை கறுப்பு நிறப் பைகளிலும், உக்கமுடியாத பிளாஸ்ரிக் போன்ற கழிவுகளை நீல


-சுழியன்-

நிறப் பைகளிலும், கிருமிகள் தொற்றக்கூடிய வைத்தியசாலைக் கழிவுகளை மஞ்சள் நிற பைகளிலும் சேகரிக்கவைத்து அவற்றை தெரிவுசெய்யப்பட்ட பிரதேசத்தில் அப்புறப்படுத்தி விடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இம்மாதம் 15ஆம் திகதி முதல் நகரில் இருக்கின்ற அனைத்து வியாபார மற்றும் நிறுவனங்கள் தங்கள் கழிவுகளை இதன்படி சேகரித்து வைக்க பிரதேசசபை ஊழியர்கள் அவற்றை எடுத்துச்செல்வார்கள்.

எனவே இந்நடைமுறையில் இனிவரும் காலங்களில் நாம் கடுமையாக இருப் போம். இதனை உதாசீனப்படுத்தி செயற்படுபவர்கள் மீது கடும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

அத்தோடு வனவள பாதுகாப்புப் பிரிவினரின மீள் வனமாக்கல் திட்டம் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கு மிகப் பெரும் உதவியாக இருக்கிறது. மேலும் உணவகங்கள் மற்றும்



தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு கருத்தரங்குகளை வைப்பதன்மூலம் விழிப்புணர்வுகளை ஏற்படுத் துவது போன்ற பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

அத்தோடு பெறப்படுகின்ற உக்கக் கூடிய கழிவுப்பொருட்களை மீள பசளையாக மாற்றவும். பிளாஸ்ரிக் கழிவுகளை உருக்கி மீள் பிளாஸ்ரிக் பொருட்களாக மாற்றுவதுமே எமது நோக்கம். இதற்கெல்லாம் பெருமளவு நிதி தேவையாக உள்ளது. எனவே தற்போது இல்லையென்றாலும் எமது நீண்ட கால நோக்கம் அதுதான்.

இதைவிட கழிவுநீரை பொறுத்தவரை அவற்றை உரியமுறையில் சுத்திகரிப்புச் செய்வதன் மூலம் அதனை மீண்டும் பயன்படுத்துவது தான் நல்லது. அதற்கான ஆலோசனைகளை நாம் வழங்கி வருகிறோம்.

மேலும் எமது சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கு எமது மக்களுக்கு நாம் விடுக்கும் வேண்டுகோள் என்னவெனில் எம்மோடும் எமது செயற்பாடோடும் ஒத்துவருமாறு சுற்றுச்சூழல் அசுத்தமாகும்போது அதன் பாதகமான தாக்கம் அனைவருக்குமே என்பதனை மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

அத்தோடு புலம்பெயர்ந்து வாழ்கின்ற எமது மக்களிடம் அதை தாங்கோ இதைத்தாங்கோ என கேட்கவரவில்லை. அவர்களிடம் நாம் கேட்பது எம்முடன் வந்து சிலகாலம் துறைசார்ந்தவர்கள் வேலைசெய்யுங்கள் அப்போதுதான் அவர்கள் இங்குள்ள சூழலை புரிந்துகொண்டு அதற்கான நல்ல ஆலோசனைகளை தருவார்கள்.

மேலும் மேற்குலகத்தினரை போன்று நவீன வசதிகளோடு எமது சுற்றுச்சூழலை பாதுகாக்க தற்போது எம்மால் முடியாது. ஏனெனில் அதற்கான அதிகளவு பணச்செலவுகள் மேற்கொள்ளவேண்டும். எனவே எமது எதிர்கால நோக்கம் அதுவாக இருந்தாலும் தற்போது எம்மால் இயன்றவரை எமது சூழலை எமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம் என்றார் தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ச.விக்கினேஸ்வரன் அவர்கள்.

எனவே எமது மக்களிடம் நாமும் கேட்டுக்கொள்வது சூழலிலிருந்து விலகிச் செல்லாதீர் கள். அவற்றோடு ஒத்துப்போக பழகிக் கொள்ளுங்கள். சூழல் எமது உடலின் ஒரு பகுதி போன்றது. எனவே அதனையும் சுத்தமாகப் பேணுவது எம்மை நாம் சுத்தமாகப் பேணுவதற்குச் சமனாகும்.



# உலக வங்கியை ஏமாற்றிய சிறிலங்கா அரசு

வறுமை என்பது அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு இயலாத தன்மை என்று வரையறை செய்யப்பட்டுள்ளது. தனி நபருக்கும் அரசுக்கும் இந்த வரையறை பொருத்தமாக இருக்கிறது. மூன்றாம் உலக நாடுகளை வறிய நாடுகள் என்று சொல்லப்படுவதற்கு அவற்றின் மேற்கூறிய இயலாத் தன்மைதான் காரணமாகிறது. மூன்றாம் உலக நாடுகளின் வறுமைக்குக் கூறப்படும் காரணங்களில் தலைமைத்துவத் திறனின்மை, நிதி ஊழல்கள், பொதுமக்கள் நலன் பற்றிய அக்கறையின்மை முதலிடம் வகிக்கின்றன. வெளிநாடுகள் வழங்கும் நிதி உதவிகள் எக்காரணத்திற்காகப் பெறப்பட்டனவோ அத்தேவைக்காகச் செலவிடப்படுவதில்லை. நிதி மோசடிகள் நிறைந்த ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் இந்த நிலவரம் இன்றும் தொடர்கின்றது. 1948 இல் சுதந்திரம் பெறும்போது கணிசமானளவு அந்நியச் செலாவணி அப்போது சிலோன் என்று அழைக்கப்பட்ட இப்போதைய சிறிலங்காவிடம் இருந்தது. அதன் பொருளாதாரம் வலுவான நிலையில் இருந்தது. நாட்டு மக்களில் பெரும்பாலானோர் கல்வி அறிவிற் சிறந்து விளங்கினர். சுகாதார சேவைகள் உன்னத நிலையில் இருந்தன. பிற ஆசிய நாடுகளுக்கு ஒரு முன்னுதாரணமாக சிலோன் விளங்கியது. செழிப்புற்ற சிங்கப்பூரை பின்தள்ளும் நிலையில் அது இருந்தது. ஆனால் எல்லாம் படிப்படியாகச் சரிவுற்று வீழ்ச்சி நிலை அடைந்தது.

தெற்கு ஆசியாவின் நோயாளி என்றும் தென்கிழக்கு ஆசியாவின் தவறான பாதையில் செல்லும் நாடு என்றும் விமர்சிக்கப்படும் நாடாக அது எண்பதுகளில் இடம்பெறத் தொடங்கியது. எப்படி ஒரு நாட்டை ஆட்சி செய்யக் கூடாது என்பதற்கு சிறிலங்கா சிறந்த உதாரணம் என்று சிங்கப்பூர் பிரதமர் லீகுவான்யூ ஒரு முறை கூறுமளவுக்கு சிறிலங்கா வீழ்ச்சி கண்டது. தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்காமல் அவர்களை இராணுவ ரீதியாக அடிமைப்படுத்த எடுத்த முயற்சிகள் வீழ்ச்சிக்கு அடிப்படைக்காரணமாக அமைந்தன.

சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியின்போது இரு வருடம் தொடர்ச்சியாக தமிழ்ப் பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவம் பல அப்பாவி இளைஞர்களைப் படுகொலை செய்தது. சமஷ்டி கட்சி உறுப்பினர்கள் ஆறுமாதங்களாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். 1961 இல் தொடங்கிய சிறிமாவோ ஆட்சி பொருளாதார வீழ்ச்சியின் ஆரம்ப கட்டமாகக் கணிப்பிடப்படுகிறது. 1956 தொடக்கம் தொடர்ச்சியாக 1958,1961,1974,1977,1979,1981,1983 வருடங்களில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் அரசாதரவுடன் நடைபெற் றன. இதன் காரணமாக ஒரு சிறுபான்மை யினராக இல்லாமல் தமிழ் மக்கள் தமது வாழ்விடத்தை ஒரு வலுவான நாடாகப் பார்க்கும் கருத்து வடிவெடுக்கத் தொடங் கியது.

1977 இல் ஜெயவர்த்தனா ஆட்சி தொடங்கியபின் நாடு முழு அளவில் இராணுவமயப்படுத்தப்பட்டது. "பிசாசின் உதவியை நாடுவதற்கும் தயங்கமாட்டேன்" என்ற அவருடைய கோட்பாட்டின் அடிப்படையில் சர்வதேச நாடுகளின் உதவிகளை அவர் தேடிப் பெற்றார். தமிழர்கள் மீது விமானத்தாக்குதல் நடத்தும் போர் உத்தி லலித் அத்துலத்முதலி தேசிய பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றபின் ஆரம்பிக்கப்பட்டது. அப்பாவிப் பொதுமக்கள் மீதும் அவர்களுடைய கட்டடங்கள் மீதும் விமானத்தாக்குதல் நடத்தும் படி இவர் கட்டளையிட்டார். போர் தாங்கிகள், கவச வாகனங்கள் என்பனவும் இவர் காலத்தில் கொள்வனவு செய்யப்பட்டன. கடற்படைப் பாவனைக்காக அதிவேகத் தாக்குதல் படகுகளும் பீரங்கி பொருத்தப்பட்ட கப்பல்களும் இஸ்ரேலிடம் இருந்து பெறப்பட்டன. சில காலம் இஸ்ரேலின் தெல் அவிவ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக லலித் அத்துலத் முதலி பதவி வகித்த காரணத்தால் அந்த நாட்டில் பல்வேறு உதவிகளை அவரால் பெறமுடிந்தது. இஸ்ரேலின் உளவுப்படையான மொசாட் சிறிலங்கா விவகாரங்களில் தலையிடத்தொடங்கியது. இதற்கு அமெரிக்காவின் ஊக்குவிப்பும் இருந்தது.

தமிழ்க்கிராமங்களை ஒட்டுமொத்தமாக அழிக்கும்போது அங்கு மறைந்து வாழும் புலிகளும் அழிக்கப்படுவர் என்ற ஆலோசனையை மொசாட் வழங்கியது. ஆயுதம் வாங்குவதற்கு சிறிலங்கா அரசிற்குப் பண நெருக்கடி ஏற்பட்டபோது அதற்கான யோசனையையும் மொசாட் வழங்கியது. 'ஏமாற்று வழி' என்ற கருத்துப்பட முன்னாள் மொசாட் உளவுப்படை அதிகாரி விக்ரர் ஒஸ்திரோவிஸ்கி எழுதிய நூலில் உலக வங்கியை ஏமாற்றிப் பணம் பெறுவதற்கு சிறிலங்காவுக்கு இஸ்ரேலின் உளவுப்படை உதவிய சூழ்ச்சி விவரங்கள் அடங்கியுள்ளன. (BY WAY OF DECEPTION BY VICTOR OSTROVSKY) மகாவலி சம்பந்தமான விரிவான நீர்ப்பாசனத் திட்டமொன்றை தயாரிக் கும்படியும் அதற்காக நிதி உதவி கோரும் உலக வங்கிக்கான மனு வொன்றைச் செய்யும்படியும் மொசாட் ஆலோசனை வழங்கியது. அப்படியான தொரு நீர்ப்பாசனத்திட்டம் அப்போது இருக்கவில்லை. பணம் பெறுவதற்காகவே ஒரு போலித்திட்டம் உருவாக்கப்பட்டது.







சிறிலங்காவின் புகழ்பூத்த நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் இப்போலித் திட்ட உருவாக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டனர். திட்டத்தின் சிறப்பில் ஏமாந்த உலக வங்கி நிதி வழங்கலைச் செய்தது. இந்த வகை மோசடியைச் செய்த முதலாவது உலக நாடு என்ற இழிசொல் சிறிலங்காவில் இன்றுவரை ஒட்டிக்கொண்டிருக்கிறது. உலக வங்கியின் பணத்தில் சிறிலங்கா இஸ்ரேலிடமிருந்து ஆயுதம் வாங்கியது ஒரு அப்பட்டமான மோசடி.

இந்த நூலில் இன்னும் பல சுவையான செய்திகள் தரப்பட்டுள்ளன. விக்ரர். ஒஸ்திரோவிஸ்கி பின்வருமாறு அதில் கூறுகிறார். "சனாதிபதி ஜெயவர்த்தனாவின் மகனின் மனைவியை பாதுகாப்பாகக் கூட்டித்திரியும் பொறுப்பை நான் வகித்தேன். அவர் இஸ்ரேயிலுக்கு ஒரு இரகசியப் பயணம் மேற்கொண்டிருந்தார். தன்னுடைய பெயர் 'பென்னி' (PENNY) என்று அவர் கூறிக்கொண்டார். எனது பங்கிற்கு நான் என்னுடைய பெயர் 'சைமன்' (SIMON) என்று கூறினேன். இஸ்ரேயிலிடமிருந்து சிறிலங்கா இராணுவத்திற்கு பல்வேறு ஆயுதம் வாங்குவதற்கு மகாவலித் திட்டத்தை எவ்வாறு பயன்படுத்துகின்றோம் என்று எனக்கு அவர் கதையோடு கதையாக விபரித்தார். ஒன்றும் தெரியாதவன்போல நான் கேட்டுக்கொண்டிருந்தேன். ஆயுதங்களை விரைவாக தனது நாட்டிற்கு அனுப்பும்படி அவர் என்னை வற்புறுத்தினார்" இந்த மோசடியைவிட வேறு ஒரு சுவையான சம்பவமும் இந்த நூலில் தரப்பட்டுள்ளது. இஸ்ரேயிலின் ஆயுதப்படையினர் சிறிலங்கா ஆயுதப் படையினருக்கு பயிற்சி வழங்கிய அதே காலப்பகுதியில் விடுதலைப்புலி போராளிகளுக்கும் ஆயுதப் பயிற்சி வழங்கினார்களாம். வியப்பு என்னவென்றால் இரு பகுதியினருக்கும் ஒருவரை ஒருவர் அறியாமல் ஒரே பயிற்சி முகாமில்தான் பயிற்சி கள் வழங்கப்பட்டனவாம்.

1990 இல் இந்த நூல் வெளியிடப்பட்ட பின் சர்வதேச மட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. நல்ல பெயர் எடுப்பதற்காக 1991 இல் மொசாட் விசாரணை ஆணை யத்தை இஸ்ரேலிய அரசு நியமித்தது. இந்த நூலை இயன்றளவு பொய்யாக்கு வதற்கு மொசாட் ஆணையகம் தனது அறிக்கைமூலம்

**-அன்பரசு-**

முயற்சி செய்தது. ஆனால் முயற்சி கைகூடவில்லை. இதன் பின் ஒரு தொலைக்காட்சி விசாரணைக்கு வரும்படி ஒஸ்திரோவிஸ்கிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. மொசாட்டின் அதியுயர் அதிகாரிகள் அவரைத் தொலைக்காட்சி யில் விசாரணை செய்தனர். ஆனால் அவரை அவர்களால் உடைக்கமுடியவில்லை.

இந்த நூலில் குறிப்பிடப்பட்டவை உண்மை என்று இன்றைய உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. 1990 ஆம் ஆண்டிற்குப் பின்பு உலகவங்கி சுய பரிசோதனை செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. உலக வங்கி பணி யில் ஈடுபடுவோர் சிறந்த மூளைசாலிகள். நிதி பராமரிப்பு பட்டமும் பட்டறிவும் பெற்றவர்கள் என்றாலும் சிறிலங்கா போன்ற சுண்டைக்காய் நாடு அதை ஏமாற்றிவிட்டது.

குதிரை தப்பியோடிய பின்பு லயத்தை இழுத்துப் பூட்டுவதுபோல் சிறிலங்கா செய்யும் கடன் மனுக்களை மிகவும் கூர்மையாக பரிசீலிக்கும் நடைமுறையை உலக வங்கி மேற்கொள்கின்றது. சிறிலங்கா குறிப்பிடும் வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய உண்மையை அறிவதற்கு இங்கு பணியாற்றும் என்ஜியோக்களிடம் உலக வங்கி வினவுவதுண்டு. வங்கியின் சந்தேகம் இன்னும் நீங்கவில்லை.

கனேடிய அரசையும் சிறிலங்கா ஏமாற்றியுள்ளது. 1982 இல் கூட மகாவலி அதிகாரசபை அதிகாரிகள் மகாவலித் திட்டம் துரிதகதியில் முன்னெடுக்கப் படுவதால் தமிழ்-சிங்கள இனங்களுக்கிடையில் சமாதானமும் சகவாழ்வும் ஏற்படும் என்று சர்வதேச மட்டத்தில் பிரசாரம் செய்தார்கள். நிதி உதவியை இந்த நோக்கத்திற்காகவே கேட்கிறோம் என்று அவர்கள் வழியுறுத்தினார்கள்.

கிழக்கு மாகாணத்தில் மாதுறு ஓயா திட்டத்தை முன்னெடுப்பதற்கு இந்த அடிப்படையில் கனேடிய அரசு முன்வந்தது. உண்மையில் வடக்கு கிழக்கு நிலத்தொடர்ச்சியை பிரிப்பதற்காகவே இத்திட்டம் போடப்பட்டது. கனேடிய அரசு ஏமாற்றப்படவில்லை, எது மாதுறு ஓயா திட்டத்தின்உள்நோக்கத்தை நன்கு புரிந்துகொண்டுதான் உதவியை வழங்கியது என்று கூறுபவர்களும் உள். இது பற்றிய உண்மை விக்டர் ஒஸ்திரோவிஸ்கி போன் றோரின் புத்தகம் வெளிவரும் போது அம்பலமாகும். மகாவலி நீர் அந்தப் பக்கம் வர முன்பே திட்டம் நிறை வேறப் போவதாகவும் சிங்கள மக்களை அப்பகுதியில் கூடியேற்றப் போவதாகவும் கூறிக்கொண்டு மணலாற்றி லிருந்து தமிழ் மக்கள் விரட்டப்பட்டனர். நீர் திருப்பிவிடாத போதும் தமிழர்களை விரட்ட வேண்டும் என்ற தீர்மானம் அப் போதைய யூ.என்.பி அரசால் எடுக்கப்பட்டது. இத் திட்டமும் உஷ்ண வலய மேம்பாட்டுத் திட்டம் என்ற போர்வையில் வெளிநாட்டு நிதி உதவியுடன் நிறைவேற்றப்பட்டது.

கல்லோயா, மகாவலித் திட்டங்கள் தமிழ் மக்களின் பாரம் பரிய தாயகத்தை பறிக்கும் நோக்கில் விரிவுபடுத்தப்பட்டன.

உலக நாடுகள் இதற்கு தகுந்த விசாரணை இன்றி நிதி வழங்கியதை பொறுப்பற்ற செயலாகக் கருதவேண்டும். இப்போது ஓரளவுக்கு சிறிலங்காவின் போக்கை உலக சமுதாயம் விளங்கிக் கொண்டுள்ளதுபோல் தெரிகிறது. உலக வங்கியின் தெற்கு ஆசியாவுக்கான பிரதித்தலைவர் மீக்கோ நிசிமிசூ அம்மையார் 2001ஆம் ஆண்டு நடைபெற்ற சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகள் அமர்வுக்கு தலைமை தாங்கினார்.

சிறிலங்காவின் தூதுக்குழுவுக்கு சனாதிபதி சந்திரிகா தலைமைதாங்கினார். சிறலங்கா நடைமுறைப்படுத்தும் வறுமை ஒழிப்புத்திட்டங்களில் மண்டிக் கிடக்கும் நிதிமோசடிகளை மீக்கோ நிசிமிசூ கடுமையாகக் கண்டித்தார். இன்று கூட சிறிலங்கா அரசிடம் சுனாமி நிவாரண நிதியை உலக வங்கியும் பிறகொடையாளி நாடுகளும் மொத்தமாக வழங்கத் தயாரில்லை. மீள்கட்டமைப்புத் திட்டங்களைத் தாருங்கள், பரிசீலனை செய்து பார்த்தபின் அதற்கான நிதியைக் கட்டம் கட்டமாக வழங்குகிறோம் என்று கூறுவதின் அர்த்தத்தை விளங்கிக்கொள்ள வேண்டும். அவர்கள் இனிமேலும் சிறிலங்காவை நம்பத் தயாரில்லை என்பதுதான் பொருள்.



# எண்ணும் - மொழியும் கண்ணென விழிப்போம்

வலி சேர்ந்த நம் வரலாறு வார்த்தை வலியது; கொடியது; இனியது. நெஞ்சத்தின் நீண்ட குரல் பேசியும், எழுதியும் பெரிய சரித்திரங்களையே படைத்ததாக வரலாறு சான்று பகர்கின்றது. சிரிப்பும், அழுகையும், சிந்தனையும், இன்னும் பலவும் சேர்ந்து நவரசங்களையே வார்த்தைகளில் வார்த்தெடுக்கும். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்கள்.

ஆனாலும், அந்த முகத்தின் தரிசனம் இல்லாமல் வார்த்தைகளும், அகத்தின் அழகையும், அசிங்கத்தையும் வெளிப்படுத்த வல்லவையே! உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிடவே முடியுமென்றால், எழுதுவதற்குச் சொல்லிடவா வேண்டும் என சிலர் வாதிட முனைந்தாலும், உயிர்ப்பைத் தேடும் விழிகள் உண்மையை நிச்சயம் உணர்ந்து கொள்ளும்.

ஆமாம் வார்த்தை வலியது; கொடியது; இனியது! எழுதப்படும்போது வாக்கியமாகவும், நெஞ்சக்கூட்டில் காற்றுச் சேர்த்து உள்ளொடுக்கி ஒலிக்கும் போது வார்த்தையாகவும் வெளிவரும் மொழியும்.

மண்ணுக்கு வந்து தாய் மடியில் கிடக்கும் மழலை முதன் முதலாய் ஒலிகுவிக்கும் 'அம்மா' தொடங்கி, ஒருநாள் காற்றாகி ஆவி பிரியும் கணத்தில் 'ஆ...!' என்று வாய் திறந்து உயிர் துறக்கும் காலம்வரை, வார்த்தைகள் எம் ஒவ்வொருவருடனும் வாழ்வு செய்கின்றன.

எம் உள்ளத்தின் உச்சரிப்புகளை எழுத்தும், ஒலியும் உரக்கப்பேசுகின்றன. என்றோ ஒரு நாள் எங்கள் மூதாதையரில் ஒருவன் எழுப்பிய முதல் ஒலியுடனும், உணர்த்திய முதலாவது வரியனுடனும் தோற்றம் பெற்ற மொழி மானிடத்தின் முகவரியாயும், முதுகெலும்பாயும் இன்று பரிணமித்துவிட்டது. இவ்வாறு பரிணமித்துவிட்ட மொழிக்கு வளமும், வாழ்வும் சேர்ப்பன இலக்கியங்கள்.

காலம் கடந்தும் வாழும் கர்ண பரம்பரைக்கதைகளும், இன்னமும் எடுத்துக்காட்டப்படும் இதிகாசப்புராணங்களும் அமைந்திருக்கும். நீண்டு செல்லும் நெடுஞ் செய்யுட்கள் தான் இலக்கியமா? .

இல்லையே பூமியின் கடைசித்துளி ஈரமும் காய்ந்து வரண்டு போனதொரு காலத்தில் வானத்திலிருந்து வீழும் ஒற்றைத்துளியை நா சுவைக்க மீளும் உயிர் போல, உன்னதம் உணரப்படும்போது ஒவ்வொரு சொல்லும் இலக்கியமே! அந்த வகையில் குழந்தையின் அன்பு குழையும் 'அம்மா !' என்ற அழைப்பிலிருந்து நம் ஆவி துறக்கும் வரையிலான அனைத்தும் இலக்கியத்துக்கான அடையாளங்களைக் கொண்டே விளங்குகின்றன. அதற்காக வார்த்தைகள் அனைத்துமே இலக்கியமாக வசப்பட்டு விடுமா?

அழுகையின்போது அதன் காரணமறிதலும், சிரிப்பின்போது மற்றவர்களுடன் அதைப் பகிர்ந்து கொள்ளுதலும், மௌனத்தின் போதான சிந்தனையும் என்று இன்னோரன்னவும் மொழியாய் எழும்போது கவிதையாகாதா ? . . அவையே பாத்திரங்களையும் ஏற்று உரைநடையில் உலாவரும்போது கதையாகாதா?...

கனவுகளைப் புதைத்து. ஏக்கங்களால் கட்டும்போது கட்டுரையாகாதா ?... உரிமையோடு உறவொன்றிற்கு எழுதும் போது கடிதமாகாதா?... முகங்கள் பல முன்னால் பார்த்திருக்க உண்மையை விளித்து நிற்கும்போது பேச்சாகாதா ?... இசையோடு கலந்து இதயம் உருக்கும்போது இசைப் பாடல் ஆகாதா ?... முகங்கள் சில வந்து முன்னணியில் உள்ளாம்சத்தை அரங்கேற்றும் போது நாடகமாகாதா ? . . .. கூடவே ஹைக்கூவும், பழமொழியும், விளம்பரமும், விளிப்பும் என எத்தனை எத்தனையாய் இவை விரியும்...!

வானில் வெட்டிக் கிழித்து மின்னல் போல் உள்ளிருந்த இருள் போக்கி உதித்திடும் வரிகளைப் பதியுங்கள் ! கட்டுக்கள் அற்ற வசனங்கள் அல்ல கவிதைகள் இதயத்தின் இறுக்கமான பதிப்புகள் அவை கூடவே இளகிய பதிப்புகளும் தான் ! இருந்தும் இது வியாபார உலகமல்லவா...?

அதுதானே வியாபார உலகத்தில் விற்பனைக்குரியவை தானே விலைபோகும் ! அன்றாட வாழ்வின் அத்தியாவசியங்கள் மட்டுமன்றி, உருப்படாத உற்பத்திகள் கூட சாயம் தீட்டப்பட்டு மற்றவைகளுடன் சரிக்குச் சமனாக விற்பனைச்சாலைகளை அலங்கரிக்கும் இக்காலத்தில், இதயத்தின் இருப்புக்களாலான இலக்கியங்கள் எந்தமட்டும் எடுபடும்? அதுவும் 'ஓய்வின்றிச் சுழலும் மின்விசிறியின் கீழே, ஒன்றுமே செய்யாத சோம்பேறியின் சுகமான தூக்கத்தைப் போல', தேவைக்காக மட்டுமே பார்க்கும் மட்டுப்படுத்தப்பட்ட பார்வையைக்கொண்டிருக்கும்.

நாம்... மின்சார விளக்குகளுக்குள் மின்னலின் அழகை, அரூபமான அதன் ஆற்றலை ஆய்ந்திட முயல்வோமா?... அல்லது 'வேலையில்லாத வெட்டிக் கூட்டம் பண்ணிய கடதாசிக் கனவுகள் உண்டாக்கிய குப்பைகள்' என கண்/கைபடாமலேயே கண்டிக்கப்படுமா?

கண்ணீர் இருக்கும்வரை கைக்குட்டையின் தேவை இருக்கத்தான் செய்யும். விழி கசியும் ஈரத்தை வெறுமனே துடைப்பது மட்டுமல்ல கைக்குட்டை ஆற்றும் செயல்.

கூடவே அது ஆற்றுதலும் செய்கிறது. தேற்றுதல் இல்லாமல் தெளிவது எங்கனம் ? அதேபோல இதயம் இருக்கும் வரை இலக்கியங்களின் மீதான நேசமும் வாழத்தான் செய்யும்.

அதுவும் சோடிக்கப்பட்ட சொற்கூட்டங்களின் நீட்சிகள் அல்ல குறுகத்தறித்த ஒற்றை வாக்கியம் கூட ஓர்மமாய் உள்ளெழுந்து, உயிர் வலிந்து எண்ணவோட்டம் எங்கும் ஏறும் வண்ணமும் உள்ளன.

சொற்களைப் பின்னிய எழுத்துகளுக்கிடையில் உயிராய் உள்நிறைந்திருக்கும் அவ்வுயிரே அந்தந்த மொழிசார் இனக்குழுமங்களுக்கு உத்வேகம் அளிப்பனவாயும் இருந்திருக்கின்றன.

இன்னும் இருந்து வருகின்றன. இந்திய சுதந்திர விடுதலைப்போராட்டத்தில் 'வந்தே மாதரம்', 'ஜெய்ஹிந்த்', ஆங்கிலேயருக்கு முன்னாளில் 'God save the queen', ஜேர்மனியருககு 'Heil Hitler', சோவியத்திற்கு 'sulushu sovetskamusaushu, அரேபியர்களுக்கு 'அல்லாஹ் அக்பர்' , எரித்தியர்களுக்கு 'never kneel down', எல்லாவற்றுக்கும் மேலாக தமிழீழத் தேசத்தவர்களாகிய நமக்கு 'புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்' உம், பொங்குதமிழின் போது 'எங்கள் நிலம் எமக்கு வேண்டும்' உம் என இவை நீள்கின்றன அல்லவா !

'எண்ணும், எழுத்தும் கண்ணெனத்தகும் !'... மூத்தோர் சொன்ன முதுமொழிகள் மூச்சுக்கு மூச்சு உச்சரிக்கப்படுகின்றன. இருந்தும் வெறுமனே சொல்லிக் கிடப்பதே பெருமையாகாது. எண்ணிச்செயற்பட்டு எழுவோமா? தேர்ந்தெடுத்தவற்றிலிருந்து தெரிந்தறிந்து கொள்வதற்காய் எண்ணையும், எழுத்தையும் கண்களெனக் கொண்டு திறப்போமா? விழிகள்! தெரிந்துகொள்வதும், தெரியப்படுத்துவதும் இன்றைய எமது அவசரமான அவசியங்கள்! இன்னும் முதுகுசொறியும் பேனாக்கள் ஒளிபடைத்தெழுத்த கண்ணினாய் உணர்ந்து திருந்திட வேண்டும்.

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே...' சத்தியமாகத் தமிழினம் வாழ்ந்திருக்கவில்லை. அப்போது தோன்றிய முற்காலக் குரங்குகளின் பின்வழித் தோன்றல்களே மனிதகுலம் முழுவதும்.

அதுவே பரிணாமம் தந்த யதார்த்த உண்மை. அடுக்கு மொழிகளை ஏப்பம் விட்டு நேற்று வரை அரையில் கிடந்ததையும் இழந்தோம், இனியும் அந்நிலை வேண்டாமென எழுந்த இக்காலத்தே, முன்னை ஒருநாளில் நம் மூத்ததமிழர் வித்திட்டு வளர்த்த எம் மொழியை, இருப்பின் முகவரியை, அது கடந்து வந்த வலி சேர்ந்த வரலாற்றை நாம் அனைவரும் உணர்வோம்.. உழைப்போம் !!

**சு.ஞாலவன்**

---


# விமர்சனப் பார்வையின் அவசியம்

இன்றைய ஈழத்தின் கலை-இலக்கியத் தளத்தில் விமர்சனம் தொடர்பான பல்வேறு கருத்து வெளிப்பாடுகள் பல்வேறு கோணங்களில் வெளிப்பட்டு வருவதைக் காண முடிகின்றது. அரசியல் விடுதலை சார்ந்த போராட்ட முனைப்புக்கள் ஒரு புறம் வீச்சுப் பெற்று வரும் அதேவேளை உலகமயமாதலின் உள்வாங்கலோடு சுயத்தைப் பற்றிய உணர்வுகள் சுருங்கி மாயைக்குள் மயங்கிச் செல்லும் பண்பாட்டு அவலமும் தமிழர்களிடத்தில் பாரிய "தொற்று நோயாக" உள்ள சூழலில் விமர்சனத்தின் பரந்த செயற்பாடு வீச்சுப் பெறவேண்டும் என்ற யதார்த்தம் அனைவராலும் உணரப்பட்டு வருகின்றது.

சமூக அசைவியக்கத்தின் ஆரோக்கியக் குறிகாட்டிகளில் ஒன்றாக விமர்சனத்தைக் கொள்ளமுடியும். சமுதாய வளர்ச்சியின் அனைத்துக்கட்டங்களிலும் விமர்சனம் பிரதான சக்தியாக இயங்கவல்லதாகும். ஆனால் இன்றைய ஈழத்தின் விமர்சனமானது காத்திரமானதாக இல்லை என்பதைக் கசப்புடன் ஒத்துக் கொண்டே ஆகவேண்டும். யுத்தத்தின் பாதிப்புக்கள் சாதாரண மக்[illegible] வாழ்வியலை பல்வேறு வழிகளில் தாக்கமடையச் செய்துள்ள சூழலில் சமுதாய விம[illegible] கணிசமான பாதிப்பினை எதிர்நோக்கிய[illegible]து. இதனால் தனிமனித, குழுசார்ந்த [illegible]களின் வளர்ச்சியில் இது பாரிய [illegible] ஏற்படுத்தி வருகின்றது.

இன்றைய கலை இலக்கியத் தளத்தில் விமர்சனம் தன் அடிப்படை முகவரியைத் தொலைத்துவிட்டு 'முதுகுசொறியும்' பாணியில் 'பாராட்டி வாழ்த்துவதும்' சிலவேளைகளில் 'காழ்ப்புணர்ச்சியை' வெளிப்படுத்துவதுமாக தொடர்கின்றது. பேராசிரியர் கைலாசபதி அவர்கள் வாழ்ந்த காலத்தில் இலக்கிய விமர்சனமானது படைப்பாளிகளுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுத்தரும் அளவிற்கு செயற்பட்டது. அக்காலத்தில் காத்திரமான கருத்தாடல்களும், புதிய கோட்பாடுகளும் கூட முன்வைக்கப்பட்டன. 'படைப்பைப் படைப்பால் எதிர்கொள்ளட்டும்' 'படைப்பில் மலடர்களாக உள்ளவர்களே விமர்சனம் செய்கின்றனர், போன்ற எதிர் நிலைக் கருத்துக்களும் கூட வெளிப்பட்டன.

உண்மையில் படைப்பில் உள்ள விடயத்தை விமர்சனத்திற்கு உட்படுத்தும்போது அதில் யாதேனும் மாற்றுக் கருத்து விமர்சகனால் முன்வைக்கப்படும்போது விமர்சகன் படைப்பாளியை மிஞ்சி விட்டான் என்று பொருளாகாது. மேலும் விமர்சகன் தான் ஏற்கனவே வரித்துக்கொண்ட கோட்பாட்டினை முன்னிறுத்தி வெளிவரும் படைப்புக்கள் அனைத்தையும் விமர்சனத்திற்கு உட்படுத்துவதும் அபத்தமானது. படைப்பைப் பிரசவிக்கும் படைப்பாளியும் தன் கருப்பொருள் தொடர்பான விமர்சனப் பார்வையினூடாகவே படைப்பை வெளிப்படுத்துகின்றான். உண்மையில் படைப்பின் பொருள் நிலையின் முதலாவது விமர்சனம் படைப்பாளியாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் இன்றைய இலக்கிய யதார்த்தம் இதற்கு அப்பால் வறுமைப்பட்டு உள்ளதே வேதனைக்குரியதாகும்.



இன்று நடைபெறும் பெரும்பாலான கலை-இலக்கிய ஒன்றுகூடல்கள் பாரதியாரின் இறுதி ஊர்வலத்தை நினைவுபடுத்தும் வகையில் அமைவது கலை இலக்கியத்தின் ஆரோக்கியத்தை விளக்கிக் கொள்ளப் போதுமானதாகும். படைப்பாளரும் படிப்பாளரும் பாதிக்கப்பட்டுச் செல்லும் சூழலில் அதனைக் கட்டியெழுப்ப காத்திரமான விமர்சன செயற்பாடு அனைத்து மட்டத்திலும் விரைவுபடுத்த வேண்டியது அவசியமாகும். கல்வித்தளத்தில் இளைய தலைமுறையினர் மத்தியில் வாசிப்பார்வத்தைத் தூண்டல், பொது அமைப்புக்கள், கருத்தமர்வுகளை ஒழுங்கு செய்தல், பண்பாட்டு விழிப்புணர்வை ஊட்டல் என்பவற்றோடு கலை இலக்கிய ரீதியாக படைப்பின் உண்மையினை உள்வாங்கி காய்தல், உவத்தல் இன்றி வாசகர்களுக்கு ஒரு வகையில் வழிகாட்டியாக 'தெளிந்த தரிசனத்தை' விமர்சகன் வெளிப்படுத்தும் போதே சமுதாய மறுமலர்ச்சி ஏற்பட முடியும் என்பதோடு ஈழத்தமிழ் இலக்கியத்தின் தனித்தன்மையை பேணிக் கொள்ளவும் வழிபிறக்கும் என்பதே உண்மை யாகும்.

நன்றி-புலரி

# போர் வலையும் புலிகளும்

யூலை 14ஆம் திகதி தென்தமிழீழத்துக்கான போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டுமென்ற 14நாள் காலக்கெடு முடிவடைந்த கையோடு, புலிகள் அடுத்ததொரு முக்கியமான அறிவிப்பை வெளியிடலாமெனவும்; அது போர் நிறுத்தத்தைப் பேணுகின்ற புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்து புலிகள் விலகிக்கொள்வதான அறிவிப்பாக இருக்கலாமெனவும் கடந்த ஞாயிறு இதழ்களில் பல ஆய்வாளர்கள் எழுதியிருந்தனர்.

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்குச் செல்லுகின்ற புலிகள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளூடாகச் செல்லவேண்டியிருக்கிறது. இந்தப் பகுதிகளில் வைத்து இவ்வாறு பயணிக்கின்ற புலிகள் மீது பல தாக்குதல்கள் நடத்தப்பட்டு உயிரிழப்புகளும் ஏற்பட்டபின்னர்;

அதிலும் குறிப்பாக இராணுவப் பாதுகாப்புடனும் கண்காணிப்புக்குழுவின் வழித்துணையுடனும் மட்டக்களப்புக்குப் பயணித்த 40 புலிகள் கிளைமோர்க்குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான பின்னர் புலிகள் தமது நிலைப்பாட்டில் இறுக்கத்தைக் காண்பிக்கத்தொடங்கினர்.

"பாதுகாப்பான போக்குவரத்து ஏற்பாடுகளை அரசு செய்யவேண்டும். இல்லையேல் எமக்கான பாதுகாப்பினை நாமே தேடிக்கொள்ளநேரிடும்" என்பதான செய்தியையும்; பயணிக்கும் புலிகளுக்கான பாதுகாப்பு உறுதிமொழியை வழங்க 14 நாள் காலக்கெடுவையும் புலிகள் சிறிலங்கா அரசுக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஊடாக அனுப்பினர்.

அத்தோடு பாதுகாப்பான பயணத்துக்கான சிலயோசனைகளையும் தமது தரப்பிலிருந்து முன்மொழிந்துமிருந்தனர். இவ்வாறு சொல்லப்பட்டவைகூட அப்படி ஒன்றும் கஸ்ரமானவை அல்ல. பயணிக்கும் புலிகள் சிறு குழுக்களாகப் பல வாகனங்களில் பயணிக்கும் அதே நேரம்; அவ்வாறான ஒவ்வொரு வாகனத்திலும் சில படையினரும் பயணிக்கவேண்டும் என்பதே புலிகள் முன்வைத்த யோசனை. இதனை நிறைவேற்றுவதில் படைத்தரப்புக்கு என்ன கஸ்ரம் நேர்ந்துவிடப்போகிறது?

ஆனால், அரசோ தனது பங்குக்கு இந்த யோசனைகளை மாற்றியமைத்து "படைவீரர்களுக்குப் பதிலாக கண்காணிப்புக்குழுவினரே போராளிகளின் வாகனங்களில் பயணிப்பர்" எனத் தெரிவித்துப் பதிலனுப்பியிருக்கிறது. அத்தோடு மாதமொன்றுக்கு புலிகள் கோரியிருந்த இரண்டு பயணங்களை ஒன்றாக வெட்டிக்குறைத்திருந்தது.

இது சந்தேகத்தையா புரிந்துணர்வையா ஏற்படுத்தவல்லது? ஏற்கனவே காலக்கெடுவை விதித்துவிட்டுக் காத்திருப்பவர்களுக்கு இது ஆத்திரத்தையா? அல்லது ஆறுதலையா தரும்?

படைவீரர்கள் சிலர் புலிகளின் வாகனத்தில் பயணிப்பதன்மூலம் தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்தலாம் எனப் புலிகள் கருதுகையில்; புலிகள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் எவற்றுக்கும் படையினருக்கும் எதுவித சம்பந்தமும் கிடையவே கிடையாது எனச் சாதிக்கும் அரசு, ஏன் படைவீரர்களை புலிகளின் வாகனத்தில் அனுப்ப மறுக்கிறது? "கண்காணிப்புக்குழுவினர்தான் அதில் பயணம் செய்வார்கள்" என்று ஏன் அது கூறுகின்றது?

(இதற்குக் கண்காணிப்புக்குழு சம்மதம் தெரிவித்துள்ளதா என்பது இன்னமும் தெளிவுபடுத்தப்படாத விடயம் என்பது வேறுகதை) உண்மையிலேயே நிலைமையின் சூட்டைத் தணித்து, பதற்றத்தைக் குறைத்து புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டுமென அரசு எதிர்பார்க்குமாயின் இந்தச் சிறு யோசனையினை ஏன் நடைமுறைப்படுத்தக்கூடாது?

ஆனால், அரச படைகளின் தரப்பிலிருந்தோ இதற்கு முற்றிலும் எதிரிடையான பதில் புலிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது? இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளூடாகப் பயணிக்கும் புலிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது பற்றிப் புலிகள் பேசிக்கொண்டும் காலக்கெடுவை விதித்துக்கொண்டுமிருக்கையில்; இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் நிராயுதபாணிகளாகப் பணியாற்றிக்கொண்டிருந்த உயர்நிலைப் போராளி டிக்கான் உட்பட நால்வர் திருமலை செல்வநாயகபுரத்தில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். எரிகின்ற நெருப்பில் எண்ணெய் சொரியப்பட்டுள்ளது. விரிசல் கண்டுவரும் நிலைமைக்குள் மேலும் ஆப்பு செருகப்பட்டுள்ளது.

இப்போது ஏற்பட்டுள்ள நிலையினைக் கூர்ந்து நோக்கும் ஒருவருக்குப் புரிந்துணர்வு உடன்படிக்கை என்பது 'சேடமிழுத்துக்' கொண்டிருப்பது புலப்படும். ஏனெனில் இன்று புலிகளின் முன்னுள்ள மிகக் குறைந்த மாற்றுத் தெரிவுகளுள் எதை அவர்கள் தெரிவு செய்தாலும் அது புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஆயுளை நிறைவுசெய்வதாகவே அமையப்போகிறது.

உண்மையில் சிறிலங்கா அரசு விரும்புவதும் அதுதான். ஏனெனில் இன்று சந்திரிகா அம்மையார் தனது சொந்தக் கட்சிக்குள்ளும் ஆளும் கூட்டணிக்குள்ளும் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குகிறார். அதே வேளை உள்நாட்டரசியலில் இவ்வருட இறுதிக்குள் சனாதிபதித் தேர்தலை நடாத்தும்படி ரணில் விக்கிரமசிங்க சனாதிபதி சந்திரிகாவின் கடப்படியில் நின்று கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறார். வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு வெட்டுக்காட்டுவதற்காகக் கைச்சாத்திட்ட பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கையை அமுல்படுத்துவது அடுத்த சிக்கலாகிக்கொண்டிருக்கிறது. அதனால் ஏற்கனவே சிறுபான்மையாகிவிட்ட அரசாங்கம் மேலும் சிதிலமாகிப்போக நேரிடலாம். அதை அமுல்படுத்தாது விடிலோ வெளிநாட்டு உதவிகளை நினைத்துப் பார்க்கமுடியாது.

இந்த இடியப்பச் சிக்கல்களிலிருந்து மீளுவதற்கான ஒரே அருமருந்து யுத்தம் மட்டுமே. யுத்தமொன்று வந்துவிட்டால் பொதுக் கட்டமைப்பு குறித்த பேச்சுக்கே இடமிருக்காது. தேர்தல்களை நடாத்துவதனையும் அவசரகால நிலைமையின் கீழ் பின்தள்ளிவைக்க முடியும். அல்லது அது பற்றிய கவனத்தையாவது திசை திருப்பமுடியும். அதற்குள் கிடைக்கும் அவகாசத்தைப் பயன்படுத்தி ஏதாவது தகிடு தித்தம் செய்து ஆட்சியை நீடித்துக்கொள்ள முடியும்- என்பதே அம்மையாரின் கணக்கு.

இந்த ஒட்டுமொத்த கணக்கினை நிறைவேற்றிக்கொள்ள, அவருக்கு யுத்தம் தேவையாக உள்ளது. ஆனால் இந்த யுத்தம் தனது தரப்பாலன்றிப் புலிகளாலேயே தொடங்கப்படுதலும் அம்மையாருக்கு முக்கியமானதாகும். அவ்வாறு புலிகள் யுத்தத்திலே முந்திக்கொள்ள வேண்டும் என்ற சந்திரிகாவின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கான வேலைத்திட்டங்களே தற்போது நடைபெறுகின்றன.

புலிகளைத் தொடர்ச்சியாக தூண்டுவதன் மூலம், அவர்களை வெகுண்டெழச் செய்து அவர்களாகவே 4ஆம் கட்ட ஈழப் போரைத் தொடங்க வேண்டும் என்பதே அரசின் கணக்காகும். நடந்தேறுபவைகளை அவதானிக்கும் ஒருவருக்கு அரசு தனது கணக்கினை அண்மித்துவிட்டதாகத் தோன்றக்கூடும்.

ஆனால் புலிகள் தற்போது இராஜதந்திரக் களத்தில் மிகுந்த சாணக்கியத்தையும் முதிர்ச்சியையும் காட்டி வருவதைக் கவனிப்பவர்களுக்கு அரசின் கணக்கு நிறைவேறப் போவதில்லை என்பதைக் கணிப்பது கடினமல்ல.

இதனுடைய அர்த்தம் புலிகள் வாளாவிருக்கப் போகிறார்கள் என்பதல்ல. சிறிலங்கா அரசும் அதன் படைகளும் வகுத்திருக்கும் ஒடுங்கிய பாதைக்கூடாக நடந்து பாதையின் முடிவில் விரிக்கப்பட்டுள்ள போர் வலைக்குள் புலிகள் சிக்கிக்கொள்ள மாட்டார்கள் என்பதே இதன் அர்த்தமாகும். ஏனெனில் சீனப் போரியல் ஞானி சன்சூ சொல்வது போல எதிரி விரும்புவதைப் புலிகள் செய்ய மாட்டார்கள். அவலத்தைத் தந்தவனுக்கு அதைத் திருப்பிக் கொடுப்பதுதான் புலிகளின் பாணியேயன்றி, எதிரிகளின் வலைகளுக்குள் வீழ்வதல்ல. ஜே.என்.டிக்சிற்றின் "அசைனமென்ற் கொழும்பு" இதற்கு சான்று பகர்கிறது.



**பு.சத்தியமூர்த்தி**

# பாராட்டு ஆற்றல் மிகுந்தது



முயற்சி என்பது ஒவ்வொருவரின் வெற்றிக்கும். வாழ்வின் முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக அமைகின்றது. எடுத்த செயலில் ஏற்படும் தடைகளுக்கும் இடையூறுகளுக்கும் அஞ்சி ஒதுங்கி விடுபவர் வெற்றியின் சிகரத்தை எட்ட முடியாது. பிறந்த குழந்தைகூட தன் வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையையும் தன்னுடைய விடா முயற்சியாலேயே வெற்றியாக்கிக் கொள்கின்றது.

உன்னத நிலைக்கு வர ஆசைப்படுபவர்கள் பலர் அது பற்றிய கனவுகளிலேயே காலத்தை கழித்து வருகின்றார்கள். இன்றைய உள நூல் வல்லுநர்கள் அப்படியான கனவுகளில் ஈடுபடுவது நல்லது அது தான் முதற்படி என்கிறார். கனவு காணுதல் முதற்படியிலேயே நின்று விடும் நிலையில்தான் பலர் இருக்கிறார்கள். ஒரு பெரும் முயற்சி என்றால் அதில் தோல்விகள் வரத்தான் செய்யும். தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் முயற்சிப்பதற்கு முயல வேண்டும். முயற்சியால் முடியாதது ஒன்றுமில்லை.

புதுமையை விதைத்த மாணவர்களது காலம் மிகவும் மோசமானது வன்னியில் வாழ்கின்ற மாணவர்களைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களில் எற்பட்ட கொடிய வறுமையின் காரணமாக பாடசாலைகளில் மயக்கமுற்று விழுவதையும், உடற்பலம் குன்றியவர்களாகவும் காணப்பட்டனர்.

பசி வந்து பத்தையும் பறித்துக் கொண்டு சென்றது ஒரு புறம் போராட்டங்கள் நடந்த போது செல்லடி, இராணுவ அக்கிரமிப்பு, விமானக் குண்டு வீச்சு, இடப்பெயர்வு என்று மாணவர்கள் நாள் தோறும் பீதி அடைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

பீதியின் காரணமாக மாணவர்களது உளம் பாதிக்கப்பட்டு எந்த வித செயற்பாடுகளிலும் நாட்டம் கொள்ளாமல் இருந்ததும் அறிந்ததே. இதனால் எம் மாணவர்கள் கல்வித்தரம் குறைந்தவர்களாக மற்றவர்களினால் மதிக்கப்பட்டனர்.

வன்னியின் கல்விநிலை கவலைக்குரியதே. மிக குறைந்த வசதி வாய்ப்புகளுடன் வெளிமாவட்ட மாணவர்களுடன் போட்டி போடும் நிலை எமது மாணவர்களுக்கு. இம் மாணவர்களின் மௌனமான முனகலை எம் தேசம் தெரிந்து கொள்ள வேண்டும். இளமைக் காலத்தில் ஒருவன் வகுத்துக் கொள்ளும் குறிக்கோளுக்கும், அதனை நிறைவேற்ற அவன் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும் வழி காட்ட பெரியவர்கள், அறிஞர்கள், அறிவாளிகள் முன் வர வேண்டும்.

முன்னேறிக் கொண்டே செல்லும் சக்கரத்திற்கு இயக்கமும், சக்தியும் அவசியம் கொடுக்கப்பட வேண்டும். அது போலவே மாணவர்களின் முன்னேற்றத்துக்கு வேண்டிய சக்தியும், அறிவும், பயிற்சியும் கொடுக்கப்படல் வேண்டும். இவை நன்றே எம் மாணவர் பெறுவார்களேயானால் சேற்றிலே செந்தாமரை வளர்வது போல் ஓட்டைக் குடிசையிலேயே ஓவியக்காரன் உருவாவது போல் மாவட்டங்களிலும் செந்தமரைகளும், ஓவியக்காரர்களும் உருவாகுவார்கள்.

எம்மண்ணுக்கு பெருமை தேடித்தந்தவர்களை பாராட்டாமல் விடுவது இம் மண்ணில் வாழும் மக்களுக்கழகல்ல. இதயம் திறந்து பாராட்டும் பாராட்டு ஆற்றல் மிகுந்தது. கோழையைக் கூட வீரனாக்கும். ஏனோதானோ என்று இயங்குபவர்களைக் கூட சுறுசுறுப்பான செயல்வீரனாக்கிவிடும். நமது ஒரு நல்ல பாராட்டால் மனம் உந்தப் பெற்று ஒருவர் செயல் வீரராய் மாறி அரும்பெரும் சாதனைகளைப் புரிகிறார்கள் என்றால் அதன் பெருமை மறைமுகமாக பாராட்டுபவர்களையே சென்றடையும். அப்பெருமைக்குரியவர்கள் நாமாவோம். இனிவரும் வளர்ந்து வரும் சந்ததியினரை பாராட்டுதலுடனான உந்தலைக் கொடுத்து எம்மண் பெருமை காப்போம்.

**றஜினா**

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 15. 07 . 2005

மின் அஞ்சல :-weekly @ eezhanatham.com

## சந்தேகத்தைத் தோற்றுவிக்கிறது..!

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக நடும் பிரயத்தனத்தின் மத்தியில் சந்திரிகா அரசு கையொப்பமிட்டுள்ள ஆழிப்பேரலைக்குப் பின்னான செயற்பாட்டு முகாமைத்துவ கட்டமைப்புக்கான நிதி வழங்கல் தொடர்பாக அமெரிக்காவைத் தொடர்ந்து ஜப்பானும் நிதி வழங்குவதில் நெருக்கடிகள் இருப்பதாக அறிவித்துள்ளமையானது தமிழ் மக்கள் மத்தியில் இந் நாடுகள் மீதான விசனத் தையும் சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது.

சிறிலங்கா அரசுடனான சமாதான முயற்சிகளிலிருந்து ஆழிப்பேரலை அனர்த்தத்திற்கான கட்டமைப்புவரை உருவாக்கத்திற்கு சுமுகமாக இடம் பெறுவதற்கும் நடைமுறைச் சாத்தியப்பாட்டுக்கு வருவதற்கும் ஊக்கு சக்தியாக இருந்ததில் அமெரிக்காவிற்கும் ஜப்பானிற்கும் கணிசமான பங்குண்டு.

இந்த நிலையில், ஆழிப்பேரலையின் பின்னான செயற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பு சனாதிபதி சந்திரிகாவுடன் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் அது விரைவான நடைமுறைக்கு வருமா என்ற ஐயமும் குழப்பமும் தமிழ் மக்களிடம் இருந்தன.

இதனால், இந்த ஆழிப்பேரலைக்குப்பின்னான செயற்பாட்டுக் கட்டமைப்பைச் செயற்படுத்த சர்வதேச சமூகம் முயலவேண்டுமென புலிகள் இயக்கம் எதிர்பார்த்திருந்த வேளையில் இதே சர்வதேச சமூகத்தில் அங்கம் பெறுகின்ற அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் நிதி வழங்கமுடியாதெனத் தெரிவித்திருப்பதாவது தமிழ் மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இந்த முகாமைத்துவக் கட்டமைப்புக்கு நிதி வழங்குவதற்கு இடையூறாக இருப்பதாக இந்த நாடுகள் கூறும் காரணங்கள் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளமுடியாத காரணங்களாகவே உள்ளன.

அத்துடன் இந்தநாடுகளின் இந் நடவடிக்கையானது சிறிலங்கா அரசின் சமாதானத்திற்கு விரோதமான செயற்பாட்டிற்கு ஆதரவும் ஊக்கமும் அளிக்கும் ஒரு செயற்பாடாகவே கருதவேண்டியுள்ளது.

ஆகவே மூன்று வருட காலத்திற்கு மேலாக சிறிலங்கா அரசுடன் சமாதானப் பேச்சுவார்த்தையில் தமிழர் தலைமை ஈடுபட்டுவந்தபோதிலும் சிறிலங்கா அரசின் மீது நம்பிக்கைகொள்ளும் அளவிற்கு சிறிலங்கா அரசு செயற்படவில்லை. அதேநேரம் சிறிலங்கா அரசைநம்பி செயற்படுமளவிற்கு தமிழர் தலைமையும் இருக்கவில்லை.

இந்தநிலையில், இந்தப்பெரும் சமாதான முயற்சியின் நம்பிக்கைச் சக்தியாகச் செயற்பட்டுவந்த சர்வதேச சமூகமானது மரபுசார்ந்த அரசுகளுக்கிடையில் ஒன்றை ஒன்று பாதுகாக்கும் இராஜதந்திர அணுகுமுறையின் ஒரு வடிவமாக இந்தக் கட்டமைப்புக்கான நிதியை வழங்கமுடியாதெனக் கூறுவதன் மூலம் சிறிலங்கா அரசோடுசேர்ந்து தமிழ் மக்களுக்கெதிராக செயற்படமுனைகின்றதா? என்ற கேள்வி எழுகிறது.

ஆழிப்பேரலைக்குப் பின்னரான முகாமைத்துவக் கட்டமைப்புக்கு அமெரிக்காவும், ஜப்பானும் நிதி வழங்குவதில் இடையூறு இருப்பதாகக்கூறி கையை விரிப்பதன்மூலம் இந்தநாடுகளின் நடுநிலைமை தொடர்பாகவும் இவற்றின் பின்னணி தொடர்பாகவும் தமிழ் மக்களை பலமாகவே சிந்திக்கத்தூண்டுகிறது.

ஏனெனில் இந்தக்கட்டமைப்புக்கான நிதியை ஏன் சிறிலங்கா அரசுக்கூடாகச் செலவிடுவதற்கு புலிகள் இயக்கம் எதிர்க்கிறது என்பதை சர்வதேச சமூகத்திற்குத் தெளிவுபடவே புலிகள் இயக்கத்தில் உணர்த்தப்பட்டிருந்தது.

இதனை ஏற்றுக்கொண்டே இந்நாடுகள் பொதுக் கட்டமைப்பு உருவாக்கத்திற்கான அழுத்தத்தை சிறிலங்கா அரசு மீது பிரயோகித்துவந்தனர்.

ஆனால், இப்போது இந்த நாடுகள் இடைநடுவில் கைவிரிப்பதானது தமிழ் மக்களை மிகவும் விழிப்பாகவும் அவதானமாகவும் செயற்படவேண்டும் என்பதையே உணர்த்துகிறது.

## நிலைமை விபரீதமாகிறதா..?

ஒன்றில் அடித்தவருக்குத் திருப்பி அடிக்கவேண்டும், அல்லது அடிப்பவரிடம் அடிவாங்க வேண்டும். அல்லது அடித்தவரிடமிருந்து அடிவாங்காமல் ஒளிக்கவேண்டும்.

இப்போது இதுதான் தமிழ் மக்களுக்கான பிரச்சினை. சிறிலங்கா அரசுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் நிராயுத பாணிகளாக அரசியல் பணிசெய்யும் போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் படிப்படியாக அதிகரித்துவந்து இப்போது இறுதியாக திருகோணமலையில் போராளி டிக்கான் உட்பட நான்கு போராளிகள் மீதான தாக்குதலோடு உச்சநிலையை அடைந்துள்ளது.

போராளிகள் மீதான தாக்குதல்களை அரசபடைகள் மேற்கொண்டுவிட்டு தமக்கும் இந்தத் தாக்குதலுக்கும் ஏதும் சம்பந்தமில்லையென அறிக்கைவிட்டுத் தப்பிக்கொள்ள முயல்கின்றன.

போராளிகள் மீதான தாக்குதல் மேற்கொள்ளப்படும் போதெல்லாம் புலிகள் இயக்கம் கண்டன அறிக்கையை விடுகின்றபோதும் மீண்டும் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதும் தாக்குதல் நடைபெற்றபின்னர் மீண்டுமொரு அறிக்கையை விடுவதுமெனக் காலம் நீண்டது.

இதற்கிடையில் இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பவர் என்ற வகையில் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவருகின்ற பொழுதிலும் புலிகள் மீதான தாக்குதல்கள் விசாரிக்கப்படுவதாகக் கூறப்படுகிறதே ஒழிய விசாரணை முடிவில் உண்மைகள் வெளிக் கொண்டுவரப்படுவதாக இல்லை. அல்லது காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் விடுக்கப்பட்டதாகவும் இல்லை.

இந்த நிலையில் திருகோணமலையில் போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணிகளில் ஈடுபட்ட போராளிகளின் செயற் பாடுகளில் மாற்று ஒழுங்குகளை ஏற்படுத்துவதில் புலிகள் இயக்கம் முனைந்துள்ளது.

இது ஒருபுறமிருக்க கிழக்கில் தொடர்ந்த நிழல் யுத்தமானது இப்போது திருகோணமலையில் தீவிரம்பெற்று திருகோணமலையை ஒரு பதட்டத்திற்குரிய பிரதேசமாக மாற்றியுள்ளது.

நான்காம்கட்ட ஈழப்போரானது திருகோணமலையில் ஆரம்பிக்கப்படுகிறதா என பத்திரிகைகளும் இணையங்களும் தொடர்ச்சியாக வெளியிட்டுவரும் அளவிற்கு சூழல் பதட்டமான நிலைமைக்கு மாறியுள்ளது.

இத்தகையதொரு நிலையை சிறிலங்கா அரசு திட்டமிட்டு உருவாக்கியுள்ளது.

அரசின் இந்த எண்ணப்பாட்டை படை இயந்திரம் போராளிகள் மீது தாக்குதலாக மேற்கொண்டு போராளிகளின் பாதுகாப்புத் தொடர்பாக அதிக கவனத்தையும் சிரமத்தையும் எடுக்கவேண்டிய சூழலுக்குள் புலிகள் இயக்கத்தை தாக்கியுள்ளது.

அரச படைகள் போராளிகள் மீது தாக்குதல்களை மேற்கொள்கிறது என்றால் அது தமிழ் மக்களை திட்டமிட்டுப் பலவீனப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டதாகவே உள்ளது.

புலிகள் இயக்கப்போராளிகளைப் பொறுத்தவரை ஒவ்வொரு போராளியும் தமிழ் மக்களின் பாதுகாப்பின் அடையாளமாகவே கருதப்படுகிறார்கள். அந்தவகையில் திட்டமிட்டுப் போராளிகள்மீது தாக்குதல் மேற்கொள்வதன் மூலம் தமிழ் மக்களைப் பலவீனப்படுத்தி சமாதான முயற்சியிலும் இலங்கைத்தீவின் இருப்பிலுமிருந்து தமிழ் மக்களைப் புறந்தள்ளிவிடலாம் என அரசு கருதுகிறது.

சிறிலங்கா அரசு இதுவரையும் நாட்டின் இறையாண்மை தொடர்பாகவும் தேசியப் பாதுகாப்புத் தொடர்பாகவும் கூறியே சமாதான முயற்சியின் பல்வேறு முன்னேற்றத்திற்கும் இடையூறுகளை ஏற்படுத்தி வந்தது.

அந்த வகையில் இப்போது போராளிகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படுகிறது என்றால் அது தமிழ் மக்களின் தேசிய பாதுகாப்பின் மீதும் தமிழ் மக்கள் உருவாக்கி வைத்திருக்கும் சமாந்தர அரசின் இறையாண்மைக்கும் கேடுவிளைவிப்பதே நோக்காகக்கொண்டவை.

அரசு எவ்வாறு தனது தேசிய பாதுகாப்புத்தொடர்பாகவும் இறையாண்மை தொடர்பாகவும் கரிசனை கொள்கிறதோ அதேகரிசனை தமிழ் மக்களுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் உண்டு.

அந்தவகையில் போராளிகள் மீது தொடரும் தாக்குதல்களை அனுமதித்துக்கொண்டிருப்பதானது தமிழ் மக்களைப் பலவீனப்படுத்துவதாகவே அமையும்.

அரசிற்கு இன்று எழுந்துள்ள பல்வேறு நெருக்கடிகளையும் சிக்கல்களையும் களத்திலிருந்து மறைத்துக்கொள்ளும் முகமாக அது வகுத்துவைத்திருக்கு ஒரு நிகழ்ச்சி நிரலின் அங்கமாக தொடரும் இந்த அரச பயங்கரவாதத்தாக்குதலை தமிழ் மக்கள் எதுவரை பொறுத்துக்கொள்வது.

இதனால்தான் ஒன்றில் அடித்தவருக்கு திருப்பி அடிக்க வேண்டும். அல்லது அடியை வாங்கிக்கொண்டிருக்கவேண்டும். அல்லது அடிவாங்காமல் ஒளித்திருக்கவேண்டும்.

இந்த யுகத்தில் அடிப்பவரிடம அடிவாங்கிக்கொண்டிருக்கும் சூழலோ, அடிவாங்காமல் ஒளித்திருக்கும் சூழலோ சாத்தியப்பாடானதல்ல. ஆனால், அடிக்கப்படும் பொழுதெல்லாம் திருப்பியடிக்காமல் பொறுமைகாத்த புலிகளை இனியும் பொறுமை காக்கமுடியாத அளவிற்கு தள்ளுகின்ற செயலில் அரசு ஈடுபடுகின்றது.

இந்த நிலையில் இப்போது எழுந்துள்ள பதட்டமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டும் புலிகள் மீது திணிக்கப்படும் இந்த நெருக்கடியின் விளைவை உணர்ந்து காத்திரமான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமென எதிர்பார்க்கமுடியாது.

ஆனால் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்ட இரண்டு தரப்பின் செயற்பாடுகளையும் கண்காணித்து வருகின்ற கண்காணிப்புக்குழுவானது தனது வழமையான செயற்பாடுகளை விடுத்து இந்தச் சூழலுக்குக் காரணமான செயற்பாடுகள் தொடர்பான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய தேவையை அதிகரித்துள்ளது. ஆனால் அது எத்துணை தூரம் நடைமுறைக்குச் சாத்தியமானது என்பது கண்காணிப்புக்குழுவின் கடந்தகால செயற்பாடுகள் உணர்த்தவில்லை.

ஆகவே அடிப்பவருக்குத் திருப்பி அடிக்கும் சூழலுக்குள் புலிகள் இயக்கத்தை சிறிலங்கா அரச இயந்திரம் மிகவேகமாகவே தள்ளிவருகிறது.

ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக்காட்டும்படி யேசுபிரான் போதித்த போதனைகள் வாங்கிக்கொள்ளாத இந்தக் கலிகாலத்தில் இன்றைய யுகத்தில் கொல்லாமையைப் போதித்த புத்தபிரானின் வாரிசுகள் தமிழ் மக்களுக்கு எதைப் போதிக்கிறார்கள் என்பதை சொல்லியா விளங்கப்படுத்த வேண்டும்.

**புலிகள் இயக்கப்போராளிகளைப் பொறுத்தவரை ஒவ்வொரு போராளியும் தமிழ் மக்களின் பாதுகாப்பின் அடையாளமாகவே கருதப்படுகிறார்கள். அந்த வகையில் திட்டமிட்டுப் போராளிகள் மீது தாக்குதல் மேற்கொள்வதன்மூலம் தமிழ் மக்களைப் பலவீனப் படுத்தி சமாதான முயற்சியிலும், இலங்கைத்தீவின் இருப்பிலுமிருந்தும் தமிழ் மக்களைப் புறந்தள்ளி விடலாம் என அரசு கருதுகிறது.**

சிறி. இந்திரகுமார்

# மனிதாபிமானமற்றோர் கைகளில்...

சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பிலான சர்ச்சை நீண்டு கொண்டே செல்கின்றது. இந்தச் சர்ச்சைக்கு இருதரப்பினரும் சிறிலங்காவின் அரசியலமைப்பின் தெளிவு சுழிவுகளைப் பயன்படுத்தி அரசியல் யாப்பை ஒரு சர்ச்சைக்குரியதாக்கி இருக்கின்றனர்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 1999 டிசெம்பரில் செய்துகொண்ட பதவிப் பிரமாணத்தின் பிரகாரம் அவர் இவ்வருட இறுதியுடன் வீட்டுக்குச் செல்லவேண்டியவராகின்றார். ஆனால் அவர் அதனை மாற்றி அமைக்கும் நோக்கத்துடனேயே கடந்த ஆண்டில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பெரும்பான்மையுடன் இருந்தபோதும் அதனைக் கலைத்து பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தினார்.

அதன் மூலம் கிடைத்த சிறுபான்மை அரசை தனது நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் தக்கவைத்துக்கொண்டது மட்டுமல்லாது அரசியல் அமைப்பை தனது அரசியல் எதிர்காலத்தை நீடிக்கத் தக்க வகையில் மாற்றி அமைக்க முயற்சி எடுத்தார். இன்றுவரை அது கைகூடாத நிலையில் இருப்பினும் அவர் கைவிட்டுவிட்டார் என கூறிவிட முடியாது.

இப்பொழுது சனாதிபதித் தேர்தலை எப்போது நடத்துவது எனத் தீர்மானிப்பது யார் என்ற சர்ச்சை எழுந்துள்ளது. அரசியல் யாப்பின் படி ஒருவர் முதல் தடவையாக சனாதிபதியாக இருக்கையில், அவரது பதவிக்காலத்தில் அடுத்த சனாதிபதித் தேர்தலை எப்போது நடத்துவது என அவர் தீர்மானிக்கலாம். அதன் படியே 2000 ஆம் ஆண்டு நவம்பர்வரை பதவியில் இருக்கக் கூடியவராக இருந்தும் 1999 இல் தேர்தலை நடத்த சந்திரிகாவால் முடிந்தது.

ஆனால் இரண்டாவது பதவிக்காலத்தில் அவரது பதவிக்காலத்தை தீர்மானித்து தேர்தலை நடத்தும் பொறுப்பு தேர்தல் ஆணையாளருக்கே உள்ளது.

இடையில் சனாதிபதி ஒருவர் பதவி விலகினால், அல்லது நீக்கப்பட்டால், அல்லது இறந்தால் நாடாளுமன்றம் சனாதிபதி ஒருவரைத் தெரிவுசெய்யும்.

தேர்தல் ஆணையாளர் அப்போதைய சனாதிபதியின் பதவிக்காலத்தை ஆதாரபூர்வ ஆவணங்கள் மூலம் தெளிவுபடுத்தி எடுத்த சனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும்.

இப்பொழுது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 2000 ஆம் ஆண்டு இரகசியமாகச் செய்துகொண்ட பதவிப் பிரமாணம்தான் சர்ச்சைக்குரிய விடயமாக இதனை மாற்றியுள்ளது.

இவ்வாறு தமக்கு ஏற்றவகையில் அரசியலமைப்பிற்கு வியாக்கியானம் செய்து தமது பதவிக்காலங்களைத் தக்கவைத்துக் கொள்வது இதுதான் முதல் தடவையல்ல. 1975 இல் சிறிமாவோ பண்டாரநாயக்க இரண்டு வருடங்கள் ஆட்சி நீடிப்பைப் பெற்றுக்கொள்ள இவ்வாறுதான் நடந்து கொண்டார். அரசியலமைப்பை வளைத்து 1989 இல் மீண்டும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மூன்றாவது





தடவையாகவும் சனாதிபதியாக ஜே.ஆர். ஜெயவர்த்தன திட்டமிட்டிருந்தார். ஆனால் அப்பொழுது எழுந்திருந்த சூழ்நிலை அவருக்கு அதற்கு இடங்கொடுக்கவில்லை.

இன்றும் கூட சிறுபான்மை அரசாங்கமொன்று பதவியிலிருக்க முடிகின்றதென்றால் அதற்கும் அரசியல் யாப்பின் படியான சனாதிபதியின் அதிகாரமே காரணமாக இருக்கின்றது.

ஆனால் இவ்வாறு பல தேவைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் சிறிலங்காவின் அரசியலமைப்பை தமக்கேற்றவாறு பயன்படுத்திக்கொள்ளும் சிங்கள ஆட்சியாளர்கள் இன்று இலங்கையின் முக்கிய பிரச்சினையாகவுள்ள இனப்பிரச்சினையைத் தீர்க்க அவ்வாறு பயன்படுத்திக்கொள்ள முனைவதில்லை.

அதாவது தமது சுயநல நோக்கங்களுக்காக அரசியல் யாப்பைத் துஷ்பிரயோகம் செய்யும் ஆட்சியாளர்கள் இப்பிரச்சினையில் அரசியல் யாப்புக்கு முரண் என்று கூறி அவர்கள் ஏற்றுக்கொண்ட விடயங்களையே புறக்கணிக்க முயல்கின்றனர்.

இந்த வகையிலேயே 'சிரான்' அமைப்பை செயற்படவிடாது தடுத்த சிங்கள அதிகார வர்க்கமானது தாமே ஏற்றுக்கொண்டு ஒப்பந்தம் செய்து கொண்ட பொதுக்கட்டமைப்புக்கும் இடையூறுகளை விளைவிக்க முயல்கின்றது.

சுனாமிப் பேரலைகள் வடக்கு கிழக்கில் மட்டுமல்ல தென் பகுதியிலும் சேதங்களை ஏற்படுத்தியிருக்கிறது. எல்லா மக்களுக்குமாக மேற்கொள்ளவேண்டிய புனரமைப்புப் பணிகளுக்கு சர்வதேசமும் வழங்கத் தயாராக இருக்கும் நிதியானது கண்காணிப்பிற்கு உட்படுத்தவேண்டியது என்பதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியாகச் சென்றடைகின்றதா என்பது மேற்பார்வையிடப்படவேண்டியது என்பதும் இன்று சர்வதேசத்தின் நிலைப்பாடாக இருக்கின்றது.

ஏனெனில் அரசாங்கம் முதல் அரச இயந்திரத்தின் அடிமட்டம் வரை ஊழல் நிறைந்ததாகவே இருக்கின்றது. இவர்களுக்கு வழங்கப்பட்ட உடனடி உதவிகளில் கூட முறைகேடுகள் புரியப்பட்டமை நிரூபணமாகியிருக்கின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு என வழங்கப்பட்ட உதவிகளை பாதிக்கப்படாத தமது ஆதரவாளர்கள் தேவையானவர்களுக்கு வழங்கிய அரசியல்வாதிகள் பௌத்தபிக்குகள் என்போர் கூட வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

அத்துடன் அரச இயந்திரத்தின் செயற்திறனின்மை முன்னமே நிரூபிக்கப்பட்டு சர்வதேச நிறுவனங்கள் அதிருப்தியடைந்துள்ளன.

அதேவேளை சிங்கள ஆட்சியாளர்களின் கைகளிலே இந்நிதி செல்லுமானால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு அவர்களின் பாதிப்புக்கு ஏற்ப பங்கிடப்படமாட்டாது என்பது மட்டுமல்ல தம்மீதான யுத்தத்திற்கே அது பயன்படும் என்பது அம்மக்களின் அனுபவத்தெளிவாகும்.

இவ்வாறான நிலையில் தான் அவற்றைச் சீர்செய்யத்தக்க வகையிலான பொது அமைப்பொன்றின் அவசியத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டனர். அதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்தாகியது.

ஆனால் அதனைச் செயற்படுத்த மூன்று வாரங்களாகியும் ஆளும் தரப்பு எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கையையும் எடுக்க முன்வராது உள்ளதுடன் அதனைச் சிதைத்து செயலிழக்க வைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றது.

இதற்கு எதிரான சிங்கள இனவாதிகளின் நடவடிக்கைகள் ஒருபுறம் முனைப்புற்றிருக்க மறுபுறம் ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் இந்நடவடிக்கையானது சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும் பெரும் வேதனைக்கும் விரக்திக்கும் உள்ளாக்கியுள்ளது.

தமது சுயநலனுக்குப் பயன்படுத்தும் அரசியல் யாப்பிலுள்ள ஓட்டைகளை ஆட்சியாளர்கள் ஏன் உடமை இழப்புகளால் பாதிக்கப்பட்ட பெரும் துன்பத்துக்கு உள்ளாகியுள்ள மக்களின் விடயத்தில் உபயோகித்திருப்பார்களானால் இம் மக்களின் உடமை இழப்புகளையாவது என்றோ ஈடுசெய்திருக்கலாம்.

ஆனால் மனிதாபிமானம் கூட சிறிதுமற்ற இவர்களின் கைகளில் நாடும், ஆட்சியும், அரசியலமைப்பும் சிக்கிக்கொண்டுள்ளமை தான் மக்களின் துன்பங்களுக்குக் காரணமாக இருக்கின்றது.

**வேலவன்**

## நேர்நோக்கு

# நீதியை எதிர்பார்க்க முடியாது



கொழும்பின் புறநகர் பகுதியில் வைத்து கடத்திச்செல்லப்பட்ட பின்னர் சிறிலங்காவின் நாடாளுமன்ற உயர் பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையில் சுட்டு வீசப்பட்ட பிரபல ஊடகவியலாளர் சிவராம் கொலை விவகாரம் தொடர்பாக புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபட்ட சிறிலங்காப் பொலிசார் குற்றவாளிகளை மிக அண்மையில் நெருங்கி விட்டதுபோன்றும், குற்றவாளிகளிடமிருந்து கொலை புரிந்ததற்கான ஆதாரமாக தடையப்பொருட்களைக் கைப்பற்றியதாகவும் தெரிவித்திருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக புளொட் இயக்கத்தின் முக்கிய உறுப்பினரான பீற்றர் உட்பட பலர் கைதுசெய்யப்பட்டிருந்ததுடன், கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனத்தையும் கைப்பற்றியிருந்தனர்.

கொலைச் சந்தேக நபர்களை அடையாளம் காணும் முகமாக அடையாள அணிவகுப்பு ஒன்றை நடத்தப்பலமுறை அறிவித்திருந்தபோதிலும் பல்வேறு சாட்டுப் போக்கைச்சொல்லி குற்றவாளிகளை அடையாளம் காணும் அந்த விவகாரமும் ஏதுமற்ற ஒரு விவகாரமாக மாற்றப்பட்டுவிட்டது.

இந்த நிலையில் குற்றம் புரிந்தவர்களை சட்டத்தின் முன் கொண்டுவரும் நடவடிக்கையிலிருந்து குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளே அதிகமாக மேற்கொள்ளப்படுகின்றதென்ற குற்றச்சாட்டும் சந்தேகமும் பரவலாக எழுப்பப்பட்டது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் சிவராம் கொலை வழக்குச் சம்பந்தமான முக்கிய கோவைகள் அடங்கிய ஆவணங்கள் வைக்கப்பட்டிருந்த கொழும்பு-கடுவெல நீதிமன்ற ஆவணக் காப்பகத்தில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட ஒரு தீ விபத்தின்போது எரிந்து நாசமாகியுள்ளதாக தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

இந்தத் தீவிபத்தானது ஒரு திட்டமிட்ட நடவடிக்கையாகவே கருதவேண்டியுள்ளது. ஏனெனில் மிக முக்கிய அரசியல் முக்கியத்துவம் பெற்ற ஒரு ஊடகவியலாளரின் கொலைசம்பந்தமான ஆவணங்கள் தொடர்பாக இவ்வளவு அஜாக்கிரதையாக இருந்ததாகக் கூறப்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தத் தீ விபத்தானது ஒரு தற்செயலாக ஏற்பட்ட ஒரு விபத்தாக யாரும் கருதினால் அது ஒரு முட்டாள்தனமான முடிவாக இருக்குமே அன்றி வேறொன்றுமில்லை.

இது சிவராம் கொலை வழக்கின் தீர்ப்பையும், சிவராம் கொலையோடு சம்பந்தப்பட்ட நபர்களையும் திட்டமிட்டுக் காப்பாற்றுவதற்கு எடுக்கப்பட்ட அரசின் ஒரு நடவடிக்கையே ஆகும்.

சிவராம் கொலை வழக்குத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணைகள்கூட சிவராம் கொலைசெய்யப்பட்ட சூழ்நிலையில் ஏற்பட்ட பதற்றத்தையும், அரசின் மீதான அதிருப்திகளையும் தணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையேயாகும்.

இந்நிலையில் சிவராம் கொலை தொடர்பாக நீதியான ஒரு முடிவு கிடைத்து விடும் என இனியும் எதிர்பார்ப்பது காலத்தைப் பின்னடிக்கும் ஒரு நடவடிக்கையாகவே கொள்ளவேண்டும்.

ஏனெனில் சிறிலங்காவில் மேற்கொள்ளப்பட்ட எத்தனையோ அரசியல் படுகொலைகளும் நடவடிக்கைகளும் கண்டு கொள்ளாமலே விடப்பட்ட சந்தர்ப்பங்களே அதிகம்.

அத்தகையதொரு நடவடிக்கையின் ஒரு அங்கமாகவே சிவராம் கொலையும் இனி இடம்பெறப்போகிறது.

ஏனென்றால், சிவராம் மீதான கொலை என்பது அரசின் முழு ஆசீர்வாதத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு கொலை என்பதால் எந்தவொரு சூழ்நிலையிலும் கொலையாளிகளைக் காப்பாற்றவே அதிக கரிசனையும், ஆர்வமும் காட்டப்படும்.

முன்னர் யாழ்ப்பாணத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட ஊடகவியலாளரான மயில்வாகனம் நிமலராஜனின் கொலையில் சம்பந்தப்பட்ட நபர்கள் கூட ஏறத்தாழ இனங்காணப்பட்ட சூழ்நிலையிலும் அந்தக் கொலைதாரிகளை காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன.

இந்தவகையில் சிங்களதேசத்தில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் ரிச்சட் டி சொய்சா முதல் நிமலராஜன், ஐ.நடேசன், சிவராம் என திட்டமிட்டுக்கொல்லப்பட்ட எல்லா ஊடகவியலாளர்களின் மரணங்களோடு சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்படாமலே பாதுகாக்கப்படுகின்ற ஒரு நிலையே தொடர்ந்தும் இருக்கப்போகிறது.

இது இந்த நாட்டில் சமுதாயத்தின் கண்களாக இருக்கக்கூடிய ஊடகங்களின் சுதந்திரத்தில் அரசு அடிக்கும் சாவு மணியாகவே கருதவேண்டியுள்ளது.

கருத்தைத் தெரிந்துகொள்வதும் அதனை சமூகத்துக்குள் கொண்டுசெல்வதும் அந்தக் கருத்தினூடாக சமுதாயம் விழிப்படைவதும், சட்டத்தின் பெயரால், நீதியின் பெயரால் சனநாயகத்தின் பெயரால் பொய்மையான ஆட்சிசெய்யும் அரசுகளால் ஒரு போதும் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது என்ற செய்தியையே மீண்டும் மீண்டும் இலங்கைத்தீவில் உரத்துச்சொல்லப்படுகிறது.

அந்த வகையில் சிவராம் கொலைவழக்கின் தொடர்பான ஆவணங்கள் தீயிலெரிந்து நாசமாகின என்பதைவிட தீமூட்டி நாசமாக்கப்பட்டது என்பதே உண்மை.

**வேழினி**



# ஆபிரிக்கா நோக்கிய ஜி-8இன் நிகழ்ச்சி நிரல்

G-8 நாடுகளின் ஸ்கொட்லாண்ட் மாநாடு பெரும் பரபரப்புடன் நிறைவுபெற்றுள்ளது. பிரித்தானியா மீதான குண்டுத்தாக்குதலுடன் G-8 மாநாட்டுக்கான வீரியம் குறைந்ததோடு ஆபிரிக்கா மீதான கருணை மனுவும் நிறைவை அடைந்துள்ளது. இது ஒரு புதிய அரசியல் பொருளாதார நிகழ்ச்சித்திட்டத்தை ஆபிரிக்கா நோக்கி ஆரம்பித்துள்ளது. ஏற்கனவே ஆசியா முழுவதும் அத்தகைய நிகழ்ச்சித்திட்டம் அரைகுறையாக அமுலாவதனைக் கண்டுகொண்ட G-8 கூட்டம் தற்போது ஆபிரிக்காவில் காணப்படும் சூழலையும் பயன்படுத்த ஆரம்பித்துள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டத்தை விரிவாகப் பார்ப்போம்.

ஆபிரிக்கா கண்டத்து மக்களின் பெரும்பான்மையான மக்கள் 75சதம் அமெரிக்க டொலரை வருமானமாகக் கொண்டவர்கள். ஆட்கொல்லி நோய்கள் ஒருபக்கம், வறுமை, அறிவின்மை என்பன மறுபக்கமாக ஆபிரிக்கா திண்டாடுகின்றபோது சற்றுமெதுவான வளர்ச்சியை சில நாடுகளும் மக்களும் அடைந்துகொள்கின்றனர். இந்த அடைவின் ஆரம்பத்தை முழுமையாகக்கிள்ளிவிடுவதே G-8 சக்திகளின் நோக்கமாகும். இதனை விளங்கிக் கொள்ள உலகளாவிய அரசியல் பொருளாதாரத்தை விளங்குதல்வேண்டும்.



வளர்ந்த நாடுகளுக்கு உற்பத்திபற்றிய எந்தப் பிரச்சினையும் இன்றில்லை. உற்பத்தியை கட்டுப்படுத்தமுடியாத நிலையே ஏகாதிபத்திய சக்திகளுக்குரிய பிரச்சினையாக இருப்பதோடு சந்தைமட்டுமே அவர்களின் பிரதான பிரச்சினையாகும். சந்தையின் அவசியம் உணரப்பட்டதனால் வறிய, அபிவிருத்தி அடைந்துவரும் பட்டியலிலுள்ள நாடுகளையும், மக்களையும் சந்தைக்குரியவர்களாக மட்டும் கருதுகின்ற நிலை வளர்ந்த நாடுகளிடம் உண்டு.

தொடர்ச்சியாக நுகர்வுப்பொருட்களை மட்டும் சிறு அளவில் உற்பத்தி செய்வதோடு; ஏனைய தொழில்நுட்பம்சார்ந்த உற்பத்திப்பொருட்களை உருவாக்கம் செய்யாதவர்களாகவும் பார்த்துக்கொள்வதே வளர்ந்த நாடுகளின் நோக்கமாகும். இவ்வாறு இருப்பதன் மூலமே வளர்ந்த நாடுகளின் உற்பத்திப் பொருட்களை வாங்கும் நிலை காணப்படும். இல்லாவிட்டால் அவர்களின் உற்பத்திகளை விற்பனைசெய்யவும் முடியாது. கொள்வனவு செய்வதற்கும் மக்கள் இல்லாமல் போய்விடுவார்கள். இதுவே மேற்குலகத்தின் கருணை மனுவுக்கான உத்தரவாகும்.

ஐரோப்பிய நாடுகள் அல்லது வளர்ந்த நாடுகள் ஆபிரிக்காவின் வறுமையை ஒழிப்பதென்பதன் உள்நோக்கம் இந்நாடுகளை தொடர்ந்து கொள்வனவு சக்தியுடையவர்களாக மாற்றுவதுடன் அவர்களிடம் இருக்கும் குறைந்தளவு உற்பத்தியையும் சுரண்டுவதாகும்.

இயல்பாகவே ஆபிரிக்க மக்களை தனித்தியங்க அனுமதித்தால் வெகுவிரைவில் அவர்கள் சுயவலுவுடைய பொருளாதாரத்தை கட்டிவளர்த்துவிடுவார்கள். அப்படியான சூழலுக்குள் வேகமாக முன்னேறும் திறனும் உடல்வலுவும் உடைய மக்களாக ஆபிரிக்கர்கள் விளங்குகிறார்கள். அப்படியான மக்களை சுயமாக இயங்கவிடாது தடுப்பதே G-8 நாடுகளின் நோக்கமாகும். தனித்து இயங்காமல் தடுப்பதோடு வளர்ச்சியைக்கட்டுப்படுத்துவதும் நுகர்வுடன் வாழ அந்த மக்களை தயார்ப்படுத்துவதுமாகும்.

இன்று வறிய, அபிவிருத்தி அடைந்து வரும் எந்த நாட்டு மக்கள் உற்பத்தி செய்து வாழ்கிறார்கள் நிச்சயமாக உற்பத்தியின்றி பிழைப்பை நடத்தும் கூட்டமாகவே அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் உள்ளன.

**ஐங்கரன்**

இவை ஒரு போதும் அபிவிருத்தி அடையப்படாத நிலையே நிலவுகிறது. அப்படியாயின் ஏன்? அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் என அழைக்கப்படுகின்றது என்று கேட்கலாம். நிச்சயமாக வளர்ந்த நாடுகள் கொடுத்த ஒரு கௌரவப்பட்டம். குடியேற்றகாலத்தில தேசியவாதிகளுக்கும், தீவிரவாதிகளுக்கும் பிரித்தானியர் 'Sir'பட்டம் வழங்கியது போன்றது.

இந்த நாடுகளைப் பார்த்து வளர்ந்த நாடுகள் நீங்கள் இந்தத் திட்டத்தை மேற்கொண்டால் அபிவிருத்தி அடையலாம். அந்தத்திட்டத்தை நிறைவேற்றினால் வளர்ந்த நாடுகள் பட்டியலுக்குள் வரலாம். என்றெல்லாம் கூறிக்கொண்டு ஆயிரத்துஐம்பது ஆண்டுகள் கடந்துவிட்டன. என்னும் எத்[illegible] ஐம்பது ஆண்டுகள் கடக்கப் போகின்ற[illegible] தெரியவில்லை.

ஆபிரிக்காவுக்கும் மேற்காசியா, தென்னாசியாவுக்கும் இந்நிலை நீண்டதொன்றாக அமையும். குறிப்பாக IMF,WB போன்றவற்றின் திட்டங்களாகவே அனைத்தும் காணப்படுகின்றன. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, வறுமை ஒழிப்பு என்பதெல்லாம் மேற்கு நாடுகள் போடும் வரையறைக்குள்ளேயே வறியநாடுகள் தாளம்போடும் நிலை வளர்ந்துள்ளது. இதனை மாற்றுவதென்பது கடினமானது மட்டுமல்ல யதார்த்தம் அதுவாகவே செல்கின்றது.

ஆபிரிக்கர்களின் வருமானத்தில் G-8 நாடுகள் 25% அதிகரிப்பை செய்யப்போகின்றன. ஏற்கனவே ஆபிரிக்க நாடுகள் தமது உழைப்பாலும், உற்பத்தியாலும் 75வீதத்தை தமக்குரியதாக்கிவைத்துள்ளனர். இந்த 75வீதத்தில் அவர்களால் உணவும் உறைவிடமும் சாத்தியப்படுத்தலாமே தவிர வேறு எதனையும் மேற்கொள்ளமுடியாது.

இதனால் 25வீததையும் சேர்த்து புதிய மாற்றங்களையும் நவீனதொழில்நுட்ப சாதனங்களையும், தொலைத்தொடர்பையும் கொள்வனவு செய்யக்கூடியவர்களாக மாற்றம்பெறுவர். காரணம் G-8 நாடுகளின் திட்டங்களில் தேவைகள் அதிகரிக்கப்பட்டதுடன் நவீன மாறுதலாகவும் அவை காட்டப்படப்போகின்றன.

இறுதியில் உணவையும் உறைவிடத்தையும் இழப்பதோடு முழுமையான 100 வீதத்தையும் G-8 சுரண்டிச்செல்லப் போகின்றன. அதற்கான தயார்ப்படுத்தலையே கருணை மனுவாகத்தாக்கல்செய்துள்ளனர்.

G-8 நாடுகளின் அரசியல் பொருளாதார நிகழ்ச்சி நிரல் மிகத் தெளிவான திட்டங்களை வகுத்து வருகின்றது. ஏற்கனவே ஆபிரிக்கக் கண்டத்தை நோக்கிய அரசசார்பற்ற அமைப்புக்கள் இந்த நாடுகளின் கொள்ளளவு சக்தியை வளர்த்ததோடு கடன்கார கூட்டமாகவும் சுயபுத்தியற்ற சமூகமாகவும் மாற்றுவதில் வெற்றிகண்டுள்ளது. அதனால் அதன் மாதிரிகளைப் பாணிகளைப் பின்பற்றி மீளவும் ஒரு படையெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்க மக்களின் தலைகளை உருட்டுவதைவிட எண்ணப்படும் தலைகளாக மாற்றப்படுவதே G-8 க்கு சிறப்பான சுரண்டல் வழிமுறை யாகும்.

G-8 நாடுகளின் கருணை மனுவை கடாபி எதிர்த்துள்ளார். ஏனைய ஆபிரிக்கத் தலைவர்கள் பெரியளவில் எதிர்க்காதபோதும் ஆபிரிக்க நாடுகளின் சந்திப்பில் அதுதொடர்பாக விவாதிக்கவுள்ளனர்.

லிபியாவினதும் ஏனைய ஆபிரிக்க நாடுகளினதும் எதிர்ப்பு எப்படி அமைந்தாலும் G-8 நாடுகள் கருணை மனுவை நிகழ்த்தியே காட்டப்போகின்றார்கள். அவர்களோடு இந்திய, சீன,பிரேசில் நாடுகளும் இணைந்துள்ளன. இவற்றுக்கான திட்டமிடல்கள் கடந்த ஓராண்டுக்கு முன்பே நிகழ்ந்துவிட்டது. இந்தியாவும், சீனாவும் ஏற்கனவே தாங்கள் ஆசிய நாட்டவர் என்று கூறிக்கொண்டு ஆபிரிக்காவுக்குள் ஏகாதிபத்திய பாணியிலான சுரண்டலை தொடங்கிவிட்டன. இதே பந்தியில் இவ்விடயம் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளோம்.

எனவே இன்றைய உலகம் பொருளாதாரத்தில் வறியநாடுகளின் நிலை நெருக்கடி மிக்கதாகும். எதிர்க்கவும் முடியாத, ஆதரிக்கவும் முடியாத நெருக்கடிக்குள் அகப்பட்டுள்ளன. இருப்பதையும் இழப்பதற்கான வேலைத் திட்டத்தையே G-8 நாடுகள் வகுத்துவருகின்றன.

வறிய நாடுகளின் மக்கள் நுகர்வை மட்டும் மேற்கொள்பவர்களாக இருப்பதே வளர்ந்த நாடுகளுக்கு இலாபகரமானது. அமெரிக்கா, சீனாவின் உதவியுடன் பத்தாயிரம் குளங்களை புனரமைக்கும் J.V.Pயின் திட்டத்திலும் மறைந்துள்ள உபாயம் அதுவாகவே உள்ளது. இத்தகைய நிர்ப்பந்தத்துக்கு எந்த நாடும் சக்திகளும் விதிவிலக்கல்ல. எல்லாச் சக்திகளும் அகப்பட்டுத்தான் ஆகவேண்டும். ஏனெனில் உதிரிகளாக எதிர்ப்பதிலோ அல்லது முறியடிக்கக் கூடிய பலமோ தொழில்நுட்பமோ வறியநாடுகளிடம் இல்லை. அவை அதனை பெறமுயலும்போது ஏகாதிபத்திய சக்திகளாக மாறிவிடுவன. உதாரணத்திற்கு இந்தியா, சீனாவைக் குறிப்பிடலாம். அதனால் நிர்ப்பந்தத்திற்கு அடிபணிவதுதான் இன்றைய அரசியல் பொருளாதாரமாகிவிட்டது. இந்நிர்ப்பந்தங்களுக்கு எல்லைபோடுவதென்பது தவிர்க்க முடியாத புரட்சியாகும்.





## மருத்துவம்

# போலிக் அமிலம் இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது



ஃபோலிக் அமிலம் (Folic Acid) அதிகமாக எடுத்துக் கொள்வதன் மூலம் பெண்களுக்கு குறிப்பாக இளம் பெண்களுக்கு உயர் இரத்த அழுத்த நோய் ஏற்படும் சாத்தியக் கூறு குறைகிறது.

இது குறித்து செய்யப்பட்ட ஆய்வு களில் தெரிய வந்துள்ளது என்னவெனில் அதிகமாக ஃபோலிக் அமில மாத்திரை களை உட்கொள்வது இரத்த அழுத்தத்தை குறைக்கும் என்பதே.

அமெரிக்காவில் உள்ள பிரிகாம் மற்றும் மகளிர் மருத்துவமனை மற்றும் ஹார்வர்ட் மருத்துவம் பற்றி ஆய்வாளர்கள் 27 முதல் 44 வயதுடைய 94,000 பெண்கள் ஆய்வு செய்தபோது, முதலில் அவர் களுக்கு உயர் இரத்த அழுத்தம் இருந் திருக்கவில்லை. இவர்களின் உணவுப் பழக்கவழக்கத்தை கேள்வி-பதில் அட்டவணை மூலம் தெரிந்து கொண்டதில் எவ்வளவு ஃபோலிக் அமிலம் இவர்களின் உடலில் சேர்கிறது என்ற தகவலை முதலில் பெற்றனர்.

அதன் பிறகு 8 ஆண்டுகள் இவர் கள் தொடர்ந்து கண்காணித்து வந்ததில் 7,373 பெண்களுக்கு இரத்த அழுத்தம் நோய் வளர்ந்திருந்தது கண்டுபிடிக்கப்பட் டது. ஒரு நாளைக்கு 1000 மைக்ரோ கிராம்கள் ஃபோலிக் அமிலம் உட்கொண்ட பெண்களுக்கு இரத்த அழுத்தம் வாய்ப்பு மிகவும் குறைவாகவே இருந்துள்ளது.

மாறாக நாளொன்றுக்கு 200 மைக்ரோ கிராம்களுக்குக் குறைவாக ஃபோலிக் அமிலம் உட்கொண்டவர் களுக்கு இரத்த அழுத்தம் சாத்தியம் அதிகம் ஏற்பட்டிருப் பது தெரியவந்தது.

நடுத்தர வயது மற்றும் 60 வயதிற்கு மேற் பட்டவர்களிலேயே இதேபரிசோதனை நடத்தியபோதும் ஃ போலிக் அமிலத் தின் உயர் இரத்த அழுத்த குறைப்புச் செயற்பாடு தெரிய வந்ததாக ஆய்வா ளர்கள் தெரிவித் துள்ளனர்.

தினசரி உண வுப் பழக்க வழக் கத்திலேயே பெறப் படும் ஃபோலிக் அமில சத்துக்களை விட வெளியிலிருந்து உடலுக்கு கூடுதலாக செலுத்தப்படும் ஃ போலிக் அமில மருந்து மாத்திரை களாலேயே இச்சத்து பெருகு கிறது. ஏனெனில் மாத்திரைகளால் பெறப்படும் ஃபோலிக்அமிலம் உடலில் உடனடியாக ஏற்கப்படுகிறது என்று இத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

# குழந்தைகளைத் தாக்கும் குடற் புழுக்கள்



புழுக்கள் மற்றும் பிற குடல் ஒட்டுண்ணிகள் வெப்ப மண்டல நாடுகளில் மிகவும் சகஜமாக குழந்தைகள் உடலைத் தாக்கும் ஒரு நோய் வகையாகும். இவைகள் பெரும்பாலும் வாய் வழியாகவோ அல்லது கால் தோல் வழியாகவோ உடலில் நுழைகின்றன. பெரியவர் களை விட குழந்தைகளின் குடலை புழுக்கள் அதிகம் நேசிக்கின்றன என்றே கூற வேண்டும்.

புழுக்களில் பலவகை இருந்தாலும் பெரும்பாலும் வட்டப்புழுக்கள், கொக்கிப் புழுக்கள், நூல் புழுக்கள் மற்றும் நாடாப்புழுக்கள் ஆகியவற்றின் தாக்கமே அதிகம். வட்டப்புழுக்கள் 15 முதல் 25 செ.மீ நீளம் வரை இருக்கும். நிறத்தில் வெண்மை யான இப்புழு குழந்தைகளை அடிக்கடி தொற்றுகிறது. இப்புழுக்களின் முட்டைகள் மலம் வழியே வெளியேறும்.

இம் முட்டைகள் மண்ணில் பல மாதங்கள் உயிருடன் இருக்கும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். கொக்கிப் புழுக்கள் ஒரு செ.மீ நீளமுடையன. குடல் உட்பகுதிச் சுவரில் இவை ஒட்டிக்கொண்டி ருக்கும். இவைகளால் இரத்தப் போக்கும், உடலில் நச்சுத்தன் மையும் ஏற்படும்.

நூற்புழுக்கள் என்பது குழந்தை களின் மலத்தில் நாம் சாதாரணமாகக் காண்பது, பெண் வகை புழுவான இது ஒரு செ.மீ நீள முடையது. இரவுகளில் ஆசன வாய்ப் பாதைக்கு வந்து தன் முட்டை களை இடும். நாடாப்புழுக்களால் 30 வகை யான நோய்க்கிருமிகள் உடலைத் தாக்கும் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

*நோய் அறிகுறிகள்.*

வயிற்றுப் போக்கு, மூச்சுக்காற்றில் துர்நாற்றம், கண்களுக்குக் கீழே கருவளை யம், உணவின் மேல் தீராத ஆசை, ஓய்வின்மை, சில சமயங் களில் இரவுகளில் கெட்டகனவுகள், இரத்த சோகை மற்றும் தலைவலி, சில குழந்தைகள் உறங்கும்போது பற்களை நறநறவென்று கடிப்பது போன்றவைகள் இதன் அறிகுறி.

வட்டப்புழுக்களால் குடல் மற்றும் நுரையீரல் அழற்சி ஏற்படலாம். மற்றப்படி பேதி, குமட்டல், வாந்தி, எடையிழப்பு, காய்ச்சல், பதட்டம் ஆகியவை ஏற்படும்.

கொக்கிப்புழு தொற்றிய குழந்தைகள் பலவீனமாகவும், வெளிறியும் காணப்படுவர். ஊட்டச்சத்துக் குறைபாடு சார்ந்த நோய்களுக்கு இது இட்டுச் செல்லலாம். நூற்புழுக்களால் ஆசனவாய்ப் பகுதியில் எரிச்சலும் வலி போன்ற உணர்வும் இருக்கும்.

*காரணங்கள்*

இந்த ஒட்டுண்ணிகளின் முட்டைகள் உணவு அல்லது தண்ணீர் வழியாக குடலுக் குள் நுழைகின்றன. குறிப்பாக சரியாக சமைக் கப்படாத இறைச்சிகள் அபாயகரமானவை. குழந்தைகள் மண்ணில் விளையாடும் போதோ கையை வாயில் வைக்கும் போதோ இப்புழுக் களின் முட்டைகள் உடலில் நுழைகின்றன. காய்கறிகளுக்கு உரமாக மனிதக் கழிவுகளை பயன் படுத்துவதும் அபாயகரமானதாகும். எனவே எதைச் சமைக்கும் போதும் அதை நன்றாக சுத்தம் செய்த பிறகு சமைப்பது அவசியம்.

நோய்க்கிருமி உள்ள நீரிலிருந்து சருமம் வழியாக கொக்கிப்புழுக்கள் நுழைகின்றன. நாடாப்புழுக்கள் சரியாக சமைக்கப்படாத இறைச்சி யிலிருந்து உடலுக்குள் நுழைகின்றன.




# மனிதனுக்குள் இயந்திர சக்தி



ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் "இயந்திர மனித உடை"யை உருவாக்கி யிருக்கிறார்கள். இது உழைப்பாளர்கள் அதிக எடையைத் தூக்கவும், உடல் ஊன முள்ள மக்கள் படிகளில் ஏறவும் பயன்படும்.

இந்த உடையை தயாரித்த ட்சுகுபா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் யோஷியுகி சாங்காய் அவர்கள் "மனிதர்கள் 'சூப்பர்மேனாக' மாறுவது எதிர்காலத்தில் சாத்தியப் படும்" என்று தெரிவித்திருக்கிறார்.

15 கிலோ கிராம் உள்ள இந்த யின்கல சக்தி உள்ள உடையின் பெயர் பிகிலி5 என்று பெயரிடப்பட்டுள் ளது. இது தோலின் மேல் புறத்தில் இருக்கும் மெல் லிய மின்சார சிக்னல் களை அறிந்து அதனை பல மடங்கு அதிகரித்துச் செய்யும் வண்ணம் வடி வமைக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் இது தானியங்கி யாகச் செயல்படும் வண்ணமும் அமைக்கப்பட் டுள்ளது. இத னால் மிகவும் வயதானவர் களும் உடல் ஊனமுற்றவர் களும் நடக்க வும், சில செயல்களைச் செய்யவும் முடியும் என்று இதனை உருவாக்கிய வர்கள் கூறுகிறார்கள்.

# நல்ல அறிவிப்பு



தட்பவெட்ப நிலைகளை முன்னே ஓரளவு ஊகித்துச் சொல்லமுடியும். இப்போதெல்லாம் ஒரு ஐந்து நாட்களுக்கு முன்னே நன்கு ஊகித்துச் சொல்லும் நடைமுறைகள் மூலம் தொலைக்காட்சியில் வெப்பம், மழை அளவைத் துல்லியமாகக் கூறுகின்றார்கள். நம் நாட்டில் இன்னும் அந்த அளவிற்கு முன்னேற்றமடைய வில்லை. இன்று கூட வெளிறிய வெறும் படத்தைக் காண்பித்து பெய்த மழை, சுட்ட வெயில் போன்றவற்றைக் காண்பித்து தமது வானிலை அறிக்கைகளை முடித்து விடுகின்றனர். மேலை நாடுகள், மற்றும் சிங்கப்பூர், ஜப்பான், கொரியா போன்ற கீழை நாடுகளில் நல்ல திறம் வாய்ந்த நிபுணர் களின் கருத்து, கணினிகளை உபயோகித்து வானிலை அறிக்கைகளைத் தயார் செய்து அடுத்த ஐந்துநாட்கள்எப்படிஇருக்குமென்று மக்களைத் தயார் படுத்துகின்றனர்.

இந்தியா, இலங்கை தவிர மற்ற நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு இவற்றைப் பற்றி நன்கு தெரியும். இம்மாதம் முதல் அமெரிக்காவில் சாக்ரமாண்டோவில் உள்ள தொலைக்காட்சியில் அடுத்த ஏழுநாட்கள் வாகன நெரிசல் எப்படி இருக்கும் என்று 3டி முப்பரிமாணத்தில் ஊகித்துச் சொல்லப் போகிறார்கள். எப்படி ஊகிக்க முடியும்? முடியாது. ஆனால் கடந்த ஐந்து வருடங்களாய் மாலை 5 மணி முதல் 7 மணி வரைக்கும் எவ்வளவு ஆயிரம் வாக னங்கள் எத்தனை விபத்துக்கள், எத்தனை தடவை வாகனங்கள் ஒரேயடியாக நின்றன போன்ற வற்றை கணினியில் தொகு த்து கூறமுடியும் அல்லவா.

இப்போது தொலைக் காட்சி, வானொலியில் தற்போதைய வாகன நெரிசலைப் பற்றி சொல் கின்றனர். அமெரிக்காவில் வரவிருக் கும் இந்தப் புது அறிவிப்பினைத் தொடர்ந்து. மற்றமாநிலத் தொலைக் காட்சிகளிலும் வாகன நெரிசல் அறி விப்புக்களை அறிமுகப்படுத்தவுள் ளனர்.

# கார சாரம்

# கொஞ்சமாவது எங்கள் மரபுகளை பேணவேண்டும்

மானிப்பாய்க் கதிரேசர் செத்துப்போனாராம். காலையில் இது பற்றி மானிப்பாயில் ஒலிபெருக்கியிலும் அறிவித்தல் விடப்பட்டது. இலங்கை வானொலியின் செய்திக்குப் பின்னர் வந்த அறிவிப்புகளில் இதுவுமொன்று.

என்றாலும் வன்னியில் புலிகளின் குரலிலும் இதைச் சொல்லச் சொல்லிக் காசு கட்டியாகிவிட்டது. ஏழரைச் செய்திக்குப்பின் ஒலிபரப்புவார்கள். ஐபீசிக்கும் குடுத்ததுதான்... ஆருங்கேட்டநீங்களோ என்றார் அழுது கொண்டிருந்த- கதிரேசரின் தங்கைக்காறி.

கதிரேசருக்கு இவ்வளவு பக்கமும் உற்றார், உறவினர், நண்பர்கள் இருந்தார்கள். அப்போது தான் செத்த வீட்டுக்கு வந்த சீனியம்மா தாலிக் கொடியைச் சரிப்படுத்தியவாறே குனிந்து கதிரேசர் பெண்சாதியைக் கட்டிப்பிடித்தா். க்குஹகம் க்குஹகம் என்ற முனகல் இருவருக்குமிடையே கேட்டது. பின் எழும்பி அவர் அவவுக்கு பக்கத்திலேயே முடக்கி இருந்து மூடியிருந்த கதிரேசரை எட்டி முகத்தை திறந்து பார்த்து விட்டுத் திரும்பவும் மூடினார்.

எப்ப சீவன் போனது என்று கேட்டார். அப்பதான் உள்ளே வந்தவர் இருவதடிப்பந்தல் மூண்டு போட்டிருக்கு காணும்தானே என்றார்.

ஓமோம்... பிறகு பாத்துப்போடலாம். இருநூறு கதிரை எடுங்கோ... சனமிருக்க என்றார். பாவம் பிள்ளைகளெல்லாரும் திருமணமாகித் தொலைவிலிருந்தனர். வருவார்களோ மாட்டார்களோ... " சீவன் இழுத்துக் கொண்டிருந்தபோது ரெலிபோன் எடுத்ததற்கு பெரியவன் பெரியம்மா நீங்கள் நிக்கிறியள்தானே செய்யுங்கோ நான் வந்து தான் என்ன செய்யுற தெரியுந்தானே வேலையை விட்டிட்டு வந்து பிறகு தேடேலாது. காசனுப்பிறன் கவனமாப்பாருங்கோ" என்றான்.

இப்ப மாதகல் மாமியும் குடும்பத்தோட வந்திட்டா இனி இன்னும் வீடியோக்காறனைக் காணேல்ல. செத்துப்போன கதிரேசருக்கு சவரஞ்செய்தார்கள். வீடியோக் காறர் வந்திட்டார். உடலுக்குத் தலைமாட்டில ஆயித்த நிக்கிற கதிரேசர் பெண்சாதிக்கு அவசரம். அவன் சரியக்கா கமராவைப் பார்க்காதையுங்கோ எண்டான். திடீரென வெடித்தது கதிரேசர் பெண்சாதி என்ர ஐயா...

என்னை விட்டுப்போனியே ஊரே கலங்க அழுதார். ஒளிப்படக் காறர்! காணும் ! எண்டதும் முந்தானையில் முகத்தைத் துடைத்துக் கொண்டு இருந்தார். பக்கத்தில் இருந்த அன்னத்திடம் "சரியே" என்னும் ஒரு கேள்வி. போன உறவை நினைத்து ஒப்பாரிசொல்லி அழ யாருமே இல்லை. அவருக்காகப் பந்தல்போட அயலவர் இல்லை. அவருக்காக அவருடைய சவ அடக்கம் வரை காத்திருக்க யாருமில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக தோள் கொடுத்து தூக்கிச் செல்ல ஒரு மனிதனும் முன்வ[illegible]வில்லை. ஒருவரைப் பார்த்து உ[illegible]டி கூறும் புத்திமதியொன்றுண்டு. "நாலுபேர் மதிக்க நட" அந்த நாலுபேர் யார்? அன்னை தந்தை இருவர், ஆசிரியர்கள் பலர், நண்பர்கள் பலர், உறவினர்கள் பலர் குறிப்பாகச் சொல்லப்படும் நால்வர் யார்? ஒருவருடைய ஆயுளை இழந்தபின்னும் அவன் அதுவான பின்னும் அவனை தோள் கொடுத்து தூக்கிச் செல்ல முன்வருவோரே அந்த நால்வர். ஆக ஒருவர் ஊர் மதிக்க நடந்தாகவேண்டும்.

இப்போது ஊர் மதிக்க வாழ்ந்தவனுக்கே தோள் கொடுக்க யாருமில்லை. சரி இழவு வீட்டில் குறைந்த பட்சம் எட்டு நாளுக்காவது அடுப்பு மூட்டக் கூடாது என்பார்கள். அயலவர்கள் முறை வைத்துக் சமைத்துக் கொடுப்பார்கள். இப்போது அந்த உறவும் இல்லை.

கடையில் வாங்கிச் சாப்பிட வேண்டும். அதுவும் தொலைவிலிருந்து வந்து தங்கியிருக்கும் உறவினர்கள்தான் வாங்குவார்கள். அயலவர்கள் செய்வது மிக அருமை. வவுனியாவில் ஒரு வீட்டில் மரணம் நேர்ந்த போது நான் அங்கிருந்தேன். பிள்ளைகளும் மனைவியும் ஓலமிட்டுக் கதறினார்கள். பக்கத்து வீடுகளிலிருந்து யாரும் வரவில்லை. வீதியில் போன இரண்டொருவர் எந்து எட்டிப் பார்த்தார்கள். மறுநாள் அயலவர்கள் வந்தார்கள். "ராத்திரியே செத்த... சத்தங் கேக்கேல்ல" என்றார்கள். "ஒன்று வீடுகளுக்குள் ஒலிபுகாது இரண்டு அந்த நேரம் "சித்தி" போற நேரம் எல்லாரும் ரீவீயோட இருந்திட்டம் அதுதான் கேக்கேல்ல" சரி... இனியென்ன போன சீவனுக்குக் கணக்கு. காடாத்து, அந்தியேட்டி வரை சமைத்த உணவை விளக்கடியில் படைத்துண்ணும் மரபு மறைந்து விட்டது. ஆனால் "எட்டுச்சிலவுக்கு" ரெண்டு கிடாய் வாங்க வேண்டும். சாராயம், பீா போன்ற குடிவகைகளும் வாங்க வேண்டும்.

எனக்கு இப்போதும் நல்ல நினைவிருக்கிறது. எனது பேத்தியார் இறந்தபோது எட்டுக்கு வைத்த சில பண்டங்களுக்காக வவுனியா, மன்னார் என்று அலைந்தார் என் தந்தை. அது மனிசிக்கு விருப்பம் இது மனிசிக்கு விரும்பம் என்று எல்லாம் தேடிக்களைத்தார். அப்போது என் தாயார் "ஏலாட்டி விடுங்கோவனப்பா கிடைக்கிர நேரம் வைப்பம்" என்றதற்கு என்ர அம்மா என்னை அப்பிடி வளக்கயில்லயே. அப்பமெண்டு கேட்டா விடிய அப்பம். கொழுக்கட்டை எண்டு கேட்டா கொழுக்கட்டை. சின்னனில விளையாட்டுப் பிராதில சாப்பிடாமத் திரிஞ்சா மனிசி கம்பெடுத்து வச்சுக்கொண்டு தின்னுவிக்கும். இண்டைக்கும் நான் இப்பிடி சுகமா இருக்கிறனெண்டா அவதானே என்றழுதார்.

அவர் செத்தபோது பெண்களைப் போல அழுதார். அந்தப் பாசம் அவர் இறந்தபோது எனக்கும் இருந்தது. இப்போது எட்டுக்குச் சாப்பாடு உணவகங்களிலிருந்து வருகிறது. எச்சில் படுத்தாமல் படைக்க வீட்டில் ஒரு கொத்துச்சமையல் படையலுக்கு வைத்த உணவைப் பங்கிடும் நிலை இப்போது இல்லை.

தாலி கட்டிக் கூட வாழ்ந்து குழந்தைகளைப் பெற்ற மனைவி, கணவன் உயிரோடு இருக்கும் வரை அவருக்கு அது பிடிக்கும் இது பிடிக்கும் என்று செய்து கொடுத்து, செப்புகாட்டி கணவனின் அன்பில் திளைத்தவளுக்கு உயிர் போனதும் கணவனின் உறவும் நினைவும்கூட இறந்துபோகுமோ... வியப்புத்தான்.

ஆண்டுத்திதிகளைப் பத்திரிகைகளில் போட்டுத் தங்கள் பாசத்தை அச்சிடும் பணியுடன் பாசம் விடைபெறுகிறதா? அது மூடநம்பிக்கையென்றால் இது வரட்டுக் கௌரவம். இந்த நிகழ்ச்சிகளெல்லாம் இறந்தவர் பெயரால் செய்யப்படும் அன்னதானம்தான். இனி முப்பத்தொன்று அல்லது அந்தியேட்டி இப்போதெல்லாம் கொள்ளி வைக்க வேண்டிய பிள்ளை வராமல் போனாலும் "கரண்டில கருக்கி" சாம்பல் எடுத்தாலும் கோதானம் பூதானம், வஸ்திரதானம், செருப்புதானம், குடைதானம், செம்புதானம், விளக்குதானம், அரிசிதானம், பருப்புதானம், தட்சணைதானம் எல்லாம் கூட வழங்குவதும் ஒரு 'பாஷன்'. சின்னப் புதுக்குளம் வவுனியாவில் ஒரு மரணச் சடங்கில் இரண்டு சடங்கு செய்ய வந்தவர்களுக்குள் முரண்பாடு வந்து பொது சனங்களுக்கு மத்தியிலேயே நீசொன்ன மந்திரம் பிழை, முறை பிழை என மோத மக்கள் சமாதானப் படுத்தவேண்டியதாயிற்று.

ஒரு சாராரைக் குறைகூறுவது என் நோக்கம் அல்ல அவர்களும் உணரவேண்டும். கொடுக்க வேண்டும் என்றுதான் மக்கள் விரும்புகிறார்கள். கொடுப்பதைப் பெறுவதுதான் தானம். எங்களுடைய கஞ்சத்தனத்தால் இழவு வீட்டில் பறைய ப்பவருடைய வயிற்றில் அடித்தோம். வெள்ளை கட்டியவர்கள் வயிற்றில் ஈரத்துணியைக் கட்டினோம். சிகையலங்கரிப்பவர்கள் வருவாயை வெட்டினோம். இதைமட்டும்.... மீண்டும் சொல்கிறேன் யாரையும் தாக்கிப் பேசுவது என் நோக்கமல்ல ஒரு சிறிதாவது நாம் எமது பாரம்பரியங்களை, உறவுகளை மரபுகளைப் பேணத்தான் வேண்டும். இல்லையென்றால் தமிழர் சால்பு என்ன என்ற கேள்விக்கு இன்னும் இருபதாண்டுகளுக்குப்பின் ஆதாரம் இல்லாமல் போகும். மனிதாபிமானமும் அற்று வரட்டுக் கௌரவம் மட்டுமே மிஞ்சும் இது தேவையா?

-மாயா-



## விசுக்விசுக் விசாலாட்சி

என்ன? எல்லாரும் உங்கட உங்கட கலியாண வீட்டு ஆரவாரத்தில நிக்க, உங்கால வாய்க்கால் வெட்டுகினமாம். இதென்னடா இது நூறுவரியத்துக்கு மேலயாச்சு உந்தத் திட்டம் போட்டு. இப்ப புதிசாப் போட்டதெண்டாக் கவலயில்ல. இவளநாளுங் கிடந்திட்டு உதை தோண்டுறதிலதான் பெரிய இரகசியங் கிடக்குதடா உந்தச் சேது கால்வாய் கன விசயத்துக்கு படலை திறந்து விட்டுட்டுது.

ஒரு காலத்தில இலங்கைய இஞ்சயுள்ள இயக்கப் பெடியள் சிப்பிலியாட்டு ஆட்டினவங்களடா. அந்த நேரம் நாடாளுமன்றத்தில எது அப்ப ஒரு புது அமைச்சுப் பதவிய 'ஓப்பன்' பண்ணினராடா சனாதிபதி தலையத் தலைய ஆட்டாமக் கேள். அதியுத்தம சனாதிபதி ஜேயார் இருந்த நேரமடா, பந்தோபஸ்து அமைச்சர் எண்டு இந்த அமைச்சுக்குப் பேர். என்னபேர் இடறுது என்னடாப்பா... தமிழும் இல்ல, சிங்களமும் இல்ல (பந்தோபஸ்து) இது இந்தியாவின்ர மொழி. அவயட திட்டமுந்தான். பின்னப் பதவிக்கு லலித் அச்சுலக்கப் போட்டாச்சு ஆள் நாடாளுமன்றத்தில சொன்னதென்ன் தெரியுமோ- பயங்கரவாதியள் இந்தியாவுக்கு நிண்டு கடலுக்கால வரப்போகினம் அதுக்கிடையில ஒரு பாதுகாப்பை கடலுக்க போடோணும் எண்டார்.

அப்பான்ரா! எங்கட 'அநுரா' ஒரு உண்மைக்கதை சொன்னவர், என்னண்டு... "பயிற்சி எடுத்தவங்கள் எப்பவோ உள்ளுக்க வந்திட்டாங்கள், இனித்தானோ தடுக்கப் போறியள்" எண்டு. இப்பவும் என்னடா கேட்டாரே... இவர்போய் அப்ப இந்தியாவில பிரதமரா இருந்த இந்திரா காந்தி அம்மாட்டப் போய் கேட்டாரடா ஒரு உதவி, வாங்கோ இந்த இடைக்கடலுக்க நாங்களும் நீங்களுமா புலியளோட ஓடிப்பிடிச்சு விளையாடுவம் எண்டு அவ மாட்டனெண்டு போட்டாவடா. ஏன் அப்ப அவமாட்டனெண்ணப், பிரித்தானியாவட்டப் போய் கெஞ்சி, மண்டாடி ஒரு கப்பல வாங்கிக் கொணந்து காங்கேசந்துறைக்கும், முல்லைத்தீவுக்குமிடையால ரோந்தப் போட்டிட்டு, கடல்வலயத் தடைச்சட்டத்தையும் அப்பதான்ரா போட்டவன். உவன் அச்சுலக்கை. எண்பத்தாறில உ[illegible]து நடக்க 'இரப்பானப்பிம[illegible]தாம் பரப்பிராந்து அ[illegible]யும் பிடிச்சுதாம் ஏழல[illegible] சனியனெண்டு" உதோடதானடா லலித்தருக்கு கேடுகாலம் வந்தது பின்ன.


இவை தடுக்கில பூரப் பெடியள் கோலத்துக்க பூந்தாங்கள். இப்படி வளத்துவிட்டதாலதானே எங்களுக்கொரு கடல் படை வந்தது. இப்ப சேதுவக்கிண்ட முதலும், பாதுகாப்பு ஒப்பந்தத்தில கையெழுத்து வைக்கப் போக, வைக்கோ மறிச்சுப் போட்டார். சோனியாபாடு கூழுக்குமாசை மீசைக்குமாசை. என்ன... சோனியாவுக்கு மீசையில்லையோ, அவவுக்கும் சேத்துத்தானே மோகன் வச்சிருக்கிறார்.

அப்பிடிப்பாத்தா... ராசீவுக்குமில்லத்தானே. அதை விடு வைக்கோவச் சமாளிக்க வைக்கமாட்டம் எண்டு சொன்னாலும், காதுங்காதும் வச்சமாதிரி கால்வாய்க்கும் பாதுகாப்புப் போடப் போகினம். இப்ப இன்னொரு கதை இவளநாளும் ரோலருகளக் கொணந்து எங்கட மீன் பிடிகாறற்ர வலையள அறுத்தவை. இனி வாய்க்காலுக்கால எதுகுஞ் செய்வினம். ரெண்டுபக்கம் க்ரைபோட்டா பாதி எங்கட கடலெல்லைக்க வரப்போகுது. இஞ்ச இலங்கை அரசாங்கம் கட்டமைப்புக்கும் கதிரைக்கு அடிபட்டிற்றுப் போகட்டும். ராராவா கதிரைக் கனவில இவை கிடக்க, கட்டில்கால அரிஞ்சு கள்ளர் கொண்டு போட்டாங்கள்.

இந்த ஜே.வி.பி க் காறரால தான் அந்த நாளயில இந்தியப்படை அமைதியிழந்து தவிச்சது. பிறகு ரோவுக்குத் தெரிஞ்ச வழிதானடா. சாட்சிக்காறன்ர கால்ல விழுறத விடச், சண்டைக் காறன்ர கால்ல விழுறது. இப்ப ரெண்டு பேரும் மச்சான் முறை கொண்டாடித்திரியினம் எண்டைக்குத் தெறிக்குதோ தெரியாது.

வாய்க்கால் பிரச்சினை வாய்க்கால வரயுக்குள்ளயே பிரச்சினை தான். இப்பவாய்க்காலக் கிண்டி மண்போடுற இடமே பிரச்சினை தான். இந்தியாவை பொறுத்த மட்டில சுனாமி, பூகம்பம், வெள்ளம் இதெல்லாம் வரவேற்கப்படுற விசயம் தான், ஏனெண்டா அவயளட்ட இருக்கிற பெரிய பிரச்சினையே சனத்தொகைப் பிரச்சினை தான். என்னவோடா எங்க இடி இடிச்சாலும் மழை மட்டும் எங்கடதலையிலதான. நாங்கள் எப்பவும் எச்சரிக்கையாத்தான் இருக்க வேணும்.

# சமூக மாற்றமும் மானிட விடுதலையும்



அடிப்படை மனித உரிமைகளிலும் தனியொரு மனிதனின் மேன்மையிலும், மதிப்பிலும், சமூகத்தின் அசைவியக்கத்திலும், இன, மொழி, பால் பாரபட்சமற்ற சமத்துவ உரிமைகளிலும் திட நம்பிக்கையை மீள வலியுறுத்துவதற்கான உறுதியுடனுமே சமூக மாற்றமானது மேம்பாட்டை அவாவியதாக சிறிய நாடு, பெரிய நாடு என்பதல்லாமல், எல்லாமே உலகத்தின் கிராமமாகக் கணிக்கப்பெற்று மானிட விடுதலையை அவாவி நிற்கின்றது.

மனித உரிமைகளும், மனித மேம்பாடும், அதன் மக்களின் வாழ்க்கைகளை மேம்படுத்துகின்ற சங்கல்பமுடைய எந்தவொரு சமுதாயமும் அனைவருக்கும் முழுமையான சமத்துவமான உரிமைகளை அளிக்கின்ற சங்கல்பத்தைக் கொண்டிருத்தலிலேயே மானிட விடுதலை முகிழ்கின்றது.

அனைத்து சமூகங்களிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. மாற்றங்களின் தன்மைகள் தான் வேறுபடுகின்றன. சிலவற்றில் விரைவாகவும் சிலவற்றில் தாமதமாகவும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. சமூக மாற்றமென்று எடுத்துக் கொண்டால், சமூகத்துக்குச் சமூகம் அதன் வேகமும், அது பயணிக்கின்ற பாதையும் தான் வேறுபடுகின்றன.

பாரபட்சங்களிலிருந்து விடுதலை, அச்சத்திலிருந்து விடுதலை, பேச்சுச் சுதந்திரம், வறுமையிலிருந்து விடுதலை, ஒருவரின் மனித ஆற்றலை விருத்தி செய்வதற்கும் செயலுருவாக்கிக் காண்பதற்குமான சுதந்திரம், அநீதியிலிருந்தும் சட்ட ஆட்சி மீறல்களிலிருந்தும் விடுதலை, சுரண்டலற்ற கௌரவமான வேலைக்கான சுதந்திம், எல்லா மனித உயிர்களும் பிறப்பிலிருந்து அனுபவிப்பதற்கு உரித்துடைய ஏழு சுதந்திரங்களை ஐக்கிய நாடுகள் நிறுவனம் அங்கீகரித்துள்ளது. மனிதர்களின் மாண்புமிகு கௌரவங்கள் இங்கே கட்டிக்காக்கப்பட வேண்டுமென்பது நியதியாகின்றது.

சமூக மாற்றம் (Social change) என்பது சமூக அமைப்பிலும் (Social Structure) சமூகத்தில் காணப்படும் உறவுகளிலும் நிகழும் மாற்றத்தையே குறிக்கிறது. ஒரு தனி மனிதன் பிறந்து, வளர்ந்து பல்வேறு பணிகளையும் கடமைகளையும் ஆற்றி, அச்செயற்பாட்டில், தனக்கு முன்னர் கைக்கொள்ளப்பட்ட மரபுகளைப் பின்பற்றியும் சில தருணங்களில் மரபுகளினின்றும் சற்று விலகியும் செயலாற்றுவதைப் போல ஒவ்வொரு தலைமுறையும், சமூகத் தேவைகளுக்கேற்ப அதற்கு முன்னர் தோன்றிய தலைமுறைகளினின்றும் மாறிக் கொண்டே வந்திருக்கிறது. எல்லா விதத்திலும் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான மாற்றங்கள் தவிர்க்க முடியாதவையும் மானிட வடுதலைக்கான அவசியமுமாகின்றன.

எந்த ஒரு அமைப்பும் எப்போதும் மாறிக் கொண்டே இருக்கும் என்று கூற முடியாதெனினும், எல்லா அமைப்புக்களிலும் நிலைத்த தன்மையும் மாற்றமும் மாறி மாறி நிகழ்ந்து கொண்டேயிருக்கும் என்பதை விட நிகழ்ந்து கொண்டே வருகிறது என்பது சரியாகின்றது. தனது சுயத்தை, உரிமையைப் புரிந்து கொண்ட உண்மை நிலை அமைப்புக்கள் சமூகப் புரட்சியின் வழியேயான சமூக மாற்றத்தை விரும்பி மானிட விடுதலைக்கு அர்த்தம் கொடுக்கின்றன. அடிமைத் தளைகளுக்குள் கட்டுண்டு போகாத இறுக்குண்டு போகாத உரிமைச் சித்தாந்தங்கள் மானிடத்தை சுதந்திரத்துடன் சோபிக்கச் செய்கின்றன.

தனி மனிதனின் உதவி ஒத்தாசையுடன் சமூக அமைப்பின் செயற்பாட்டுத் தேவைப்பாடுகளை எதிர்கொள்ள முடியும். ஒவ்வொரு தனி மனிதனும் சமூக மனிதர்களாக தம்மைத் தாமே மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமாகின்றது. சமூக அமைப்புத்தானாகவே சிறப்பாக இயங்க வேண்டுமானால் சமுதாய அங்கத்தவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படவேண்டிய அவசியமாகின்றது. சமூக மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வழிவகைகளைக் காணும் பொழுதே தனது கடப்பாடுகளைச் செய்வதாக சமூக அமைப்பு மாற்றம் காண்கின்றது. சமூக அமைப்பினைப் பேணுவதற்கு குறிக்கப்பட்ட முகவர்களும், பணிப்புரைகளும் இருக்க வேண்டும். இவற்றின் மூலமே ஒவ்வொரு பிரஜையும் பொறுப்புள்ள மனிதர்களாக உருவாக்கமுடியும். சமூக பொறுப்பும் சமூகக் கடமையுமே சமூக மாற்றத்தின் உந்து சக்தியாக மானிட விடுதலைக்கான வழிகாட்டியாகியும் விடுகின்றது.

சகல நாகரிகங்களினதும் மேன்மையானது அந்த நாகரிகங்கள் மனித கௌரவத்திற்கும். சுதந்திரத்திற்கும் வழங்கும் மதிப்பின் அடிப்படையிலேயே மிளிரும். வேறு விதமாக வினோதமான வில்லங்கங்களை ஏற்படுத்துவதுமான அகச் சூழலுக்கும், புறச் சூழலுக்கும் பயன் விளையாததுமான நிலை மாற்றங்களும் உருமாற்றங்களும் சந்தர்ப்ப நிலைமைகளுக்கான திருகுதாளங்களையும் தத்தம் பெருமை கூறும் வெறுமையான வேட்டுக் கதைகளாகும். அடிப்படைச் சுதந்திரங்களை உண்மையில் மேம்படுத்தக் கூடிய உலக வளங்களின் முழு ஆற்றலையும் தொழில் நுட்பம் அதன் முறையியல் மற்றும் வலைப்பின்னலை சமூக ஏற்பாடுகளாக உருமாற்றுவதில் தனி நபர்கள் மற்றும் கொள்கை வகுப் போரும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், கம்பனிகள் தொழில் நிறுவனங்கள், பல்தேசிய நிறுவனங்கள் ஆகியவற்றின் பூரண பங்களிப்பு காலத்தின் தேவையும் கட்டாயமுமாகி சமூக மாற்றத்தினை கருத்திலெடுக்க வேண்டியன வாய்த்திகழ்கின்றன.

ஆளும் அதிகாரத்தைத் தாங்கியுள்ளவர்கள் அநியாயமான சட்டங்களை ஏற்படுத்தும் போது, மனித உரிமைகள் மிதிக்கப்படுகின்றன. அதை எதிர்த்து கிளர்ச்சிகள் எழுகின்றன. மனித உரிமைகள் மட்டில் கவனமற்றும், அலட்சியமாகவும் இருந்ததன் விளைவாக மனுக்குலத்தின் மனச்சாட்சியை வெட்கித் தலை குனியப் பண்ணுமளவிற்கு அநாகரிகச் செயல்கள் இடம் பெற்றதாலும் கொடுமைக்கும் அடக்குமுறைக்கும் எதிராக மனித உரிமைகளின் பாதுகாப்புரைகள் பாதுகாப்பின்மையைக் கோடிட்டுக் காட்டிய பொழுதுகளால் சூழ்நிலைகளும், சூளுரைகளும் சூழ்ச்சி செய்த பொழுதுகளில் மனிதர்கள் நியாய

**இனியவள்**

மான உரிமை கோரி பொங்கியெழத் தலைப்பட்டனர். விடுதலைக்காய் தம் மாண்பு மிகு மாகோன்னதங்களை மாட்சியடையச் செய்தனர்.

சமூக மாற்றத்தினுடைய சுழற்சிக் கோட்பாடானது நாகரிகங்களின் எழுச்சியினதும் வீழ்ச்சியினதும் வளர்ச்சியையும் சிதைவையும் பற்றியும் அதன் போக்குப் பற்றியும் உற்று நோக்குகின்றது என்பார் அயன்ரொபேட்சன் உள் இருந்து வரும் அர்த்தங்களால் செயற்பாடு நிகழ்வதாயின் அச்செயற்பாட்டை விளக்கிக் கொள்வதிலே அர்த்தம் கண்டு பிடிக்கப்படுகின்றது. மனித அறிவு வரையறைக்குட்பட்டது. மானிட விடுதலைக்காய் குரல் கொடுக்கும் பொழுதுகள் விடியலின் வெளிச்சங்களாக அச் சமுதாயத்தின் பால் கொண்ட அக்கறையும் ஈடுபாடுமாய் முழுதளாவிய அணுகுமுறையாக கருத்திலெடுக்கப்பட வேண்டிய தவசியமாகின்றது.

கருத்துக்களிலிருந்து சமுதாயம் தோன்றுவதை விட, சமுதாய மாற்றத்துக்குரிய கருத்துக்களும் சமுதாய நடைமுறையின் விளைவுகள் என்பதுடன் சமுதாயத் திற்குப் புறம்பான கருத்துக்கள்தோற்றம் பெற்று புதிய ஒரு மனிதனை நிர்ப்பந்திக்கவோ, சமுதாய முன்னேற்றத்தையோ மானிட மேம்பாட்டையோ வெளியிட முடியாதென்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

விஞ்ஞான உண்மைகள் மனித உலகில் மனித வியாக்கியானங்களாக உள்ளன. விஞ்ஞானத்தின் முனைப்பிலும் நடைமுறையிலும் மனிதரது அகச்சார்பு பங்களித்தே வந்துள்ளது. ஆயினும் எவ்வளவு சிக்கலான விஞ்ஞானமாயினும் அதன் விதிகள் மனிதர் அறிந்தாலும், அறியாவிட்டாலும் மனிதரது ஆளுமைக்கு வெளியில் நின்றே இயங்குவன. அவற்றை அறிவதன் மூலம் மனிதர் தமது சூழலுடனான தமது உறவையும் தமது இருப்பின் மீது தமது ஆளுமையையும் வரையறைக்குட்பட்டு நிர்ணயிக்கமுடியும். ஆனால் அடிப்படையான விதிகளை அவர்கள் ஒரு வேளை அறியலாமேயொழிய மாற்ற முடியாது. விஞ்ஞானம் எப்போதுமே மாதிரியுருக்களைக் காட்டி அவற்றின் அடிப்படையில் நடைமுறை- கொள்கை - நடைமுறை எனும் சுற்றிலேயே வளர்ந்து வந்துள்ளது. இந்த மாதிரியுருக்களை விஞ்ஞான ரீதியானவையாக்குவது அவற்றின் “பொய்ப்பிக்கப்படக் கூடியமை” என்று கால் பொப்பர் விளக்கியுள்ளார்.

சக மனிதன் மீதும் மனித இனத்தின் மீதும் அக்கறை கொண்டவனாக தமிழ்ப் பற்றுள்ளவன் காணப்படுகின்றான். மானிட உணர்வுகளைச் சிந்தித்த பெரும் மனிதர்களால் தோற்றம் பெற்ற உணர்வு பூர்வச் செயலுருவாக்கமான சிந்தனைச் செயற்பாடுகள் கூட இன்று உத்தரிக்கின்ற உழுத்துப் போன உதயவாக்காகி வரட்டுச் சித்தாந்தங்களை வாயாரப்பாடிக் கொண்டிருக்கின்றன. எமது கலாசார மொழி மேலாதிக்கத்துக்குள் பாரபட்சம் காணும் நிலைமைகளில் அசமத்துவ ஒப்பாரிகளாக மொட்டந் தலைக்கும் முழந்தாளுக்கும் முடிச்சுப் போடுவனவாய் மாறியிருக்கின்றன.

இந்த அப்பட்டமான பிற்போக்காளர்கள் உண்மை வாழ்வில் உணர்வுகளை கற்பனாவாதத்துடன் சிருஷ்டித்து தத்தம் சிருங்கார ரசங்களை ஏற்ற விதமாகமொழி பெயர்ப்பவர்கள் ஒரு மனிதனின் உணர்வுகளைக் காயப்படுத்தி சிதறடிப்பதாக நினைத்துக் கொண்டு தமது குட்டுக்களையும் குட்டிச் சுவராக்கும் நியாயங்களையும் பகிரங்கப்படுத்தும் பல மாண்பு மிகு(?) கௌரவங்களை வாக்கு வங்கிகளில் வாதிடவும் வழக்குரைக்கவும் வைத்து விடுவது பரிதாபத்திற்குரியதே.

உயர் இலட்சியங்களைக் கொண்ட வரலாறுகள் எம் தமிழர் புலத்தினுள்ளே காலம் காலமாக மெய்ப்பித்துக் காட்டப்பட்டு வருகின்றன. தமது மக்களின் கௌரவம், சுதந்திரம் ஆகியவற்றை மறுக்கக் கூடிய இன, பால் நிலை பாரபட்சங்கள், ஏதேச்சாதிகாரம், எதிர்ப்புணர்வு (Xenophobia) ஆகியவற்றை ஒவ்வொரு பொழுதும் மறுதலித்து தமது இருப்பையும் தமது உயிரை விட மேலாக நேசித்த தமிழ்த் தேசத்தினதும், தமிழ் மக்களினதும் இருப்பையும் அர்த்தமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களது தேச எழுச்சி ஒவ் வொரு தமிழ்க் குடிமகனின் வாழ்வையும் எதிர்கொண்டு வரவேற்பதாக இருக்கிறது.

அடக்கு முறை, அநீதி, பாரபட்சம் ஆகியவற்றுக்கான போராட்டங்கள் சகல பிரதேசங்களிலும், கலாசாரங்களிலும் பொதுவானவையாகி சமூக மாற்றத்தை வேண்டிநிற் கின்றன. இங்கே பாகுபாடற்ற போராட்டமே விசை கொண்டதாக முன்னெடுக்கப் படுகின்றது.

மனித உரிமைகள், மனித மேம்பாடு ஆகியவற்றின் பொதுவான நோக்கமும், பொதுவான ஊக்கியும் மனித சுதந்திரமே. மானிட விடுதலைக்கான இயக்கங்கள் தெளிவான மரபுகளையும், உபாயங்களையும் கொண்டுள்ளன. ஒரு பரந்து பட்ட தளத்தில் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று ஐக்கியப்படும் பொழுதே புதிய சக்தியையும் வலிமையையும் ஏற்படுத்திக் கொள்வன. இதை விடுத்து தேச விரோதச் செயல் முறைகளும், கைபிடிகளும், வால் பிடிகளும் சந்தர்ப்பத்துக்கு தாளம் போடும் உருப்படிகளாய் வெற்றி வகை சூடும் வெறும் கோட்டுகளும் சூட்டுகளும் சுயன் திறன் எய்தி விட்டதாக களப் பெருமை கூறுவதும் வேடிக்கையில் வேடிக்கை. இங்கே சமுதாயச் சீரழிவே வெளிப்படையாக தெரிநிலையில் உள்ளது.

எல்லா மக்களும் மிகவும் மோசமான துஷ்பிரயோகங்கள் மற்றும் தடைகளிலிருந்து (deprivations) தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் சமூக ஏற்பாடுகளுக்கு (Social arrangements) உரிமை உள்ளவர்கள் என்னும் உயரிய எண்ணத்தையே மானிட விடுதலை கொண்டிருக்கின்றது.

(22ஆம் பக்கம் பார்க்க)




# "அத்திவாரம்"

எனக்கு ஆதிலட்சுமி பெயர். ஆனால், ஊருக்குள்ள ஆதி ரீச்சர் எண்டு சொன்னால்தான் தெரியும். என்ர ஆதி என்ற பெயரும் எனது ஆரம்பக்கல்வி ஆசிரியர் தொழிலுக்கும் பொருந்திவிட்டுது. மாணவர்களுக்கு ஆதிக்கல்வியை அதாவது தொடக்கக்கல்வியை வழங்கிய எனது பெயர் அந்தக் கிராமத்து மக்களின் மனங்களில் ஆளப் பதிந்துவிட்டது. எனது உச்சிமயிர் நரைக்கத் தொடங்கிவிட்டது. பென்சன் எடுக்க இன்னும் ஆறு வருசம் இருக்கு. கள்ளமில்லா அந்த குழந்தைத் தெய்வங்களுக்கு கல்வி கற்பித்த எனக்கு ஒரு ஆன்ம திருப்தியோடு இருந்தனான். நேற்றைய சம்பவத்தில இந்தச் சமூகம் இன்னும் ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவத்தை உணரேல்லை எண்டு நினைக்கேக்க கவலையாய் இருக்கு. என்ன மேடையிலை ஏத்தி கௌரவிக்கேல்லை எண்டு நான் சொல்லேல்லை. ஆரம்பக் கல்வியெண்டால் ஏதோ சின்னவிடயம் எண்டு நினைக்கினம். ஒரு மனிதனின் ஆளுமையில தொண்ணூறு வீதம் ஒன்று தொடக்கம் பத்துவயசுக்க தீர்மானிக்கப்பட்டுவிடுகிறது என்பது பலர் ஏற்றுக்கொள்ளுகினம் இல்லை.

"அம்மா... அம்மா..." "என்ன பிள்ளை..?" "எங்கட ஸ்கூலில வாற புதன்கிழமை மருத்துவத்துறைக்கு தெரிவாகி இருக்கிற விதுரன் அண்ணைக்கு கற்பித்த உயர்தர வகுப்பு ஆசிரியர்களை பெற்றோர் ஆசிரியர் சங்கம் கௌரவிப்பு செய்யிறத்துக்கு விழா எடுக்கினம். கட்டாயம் எல்லாப் பெற்றோரையும் வரட்டாம். நீங்களும் கட்டாயம் வரவேணும்... வராட்டி பேந்து எனக்குத்தான் பேச்சுவிழும்... கட்டாயம் வாங்கோ..? அந்தக் கல்லூரியில் கல்வி பயிலும் எனது மகள் ஊடாகவே இந்த அழைப்பு.

விதுரன் என்ற உடனேயே எனக்கு உடம்பெல்லாம் மகிழ்ச்சிப் பூரிப்பு. அவன் என்னட்டத்தான் ஆரம்பக்கல்வி கற்றவன். முதலாம் ஆண்டு தொடக்கம் ஐந்தாம் ஆண்டுவரைக்கும் என்னட்ட அவன் கல்விகற்ற காலம் இப்பவும் எனக்கு பசுமையாய் இருக்கு.

அழுதுகொண்டே அவனது முதல் நாள் பாடசாலை வருகை. தனது தந்தையை விட்டு என்னிடம் சேர மறுத்துவிட்டான். நானும் எவ்வளவோ அன்பாகப் பேசிப்பார்த்தன் சரிவரயில்லை. நான் பிறகு அப்பாவையும் வகுப்பில இருக்கச்சொல்லி அவரும் இருந்து கொஞ்சம் கொஞ்சமாய் பழகிப் பழகி இரண்டொரு நாளில என்னோட சேர்ந்திட்டான். அதுக்குப் பிறகு எதுக்கும் அவனுக்கு நான் வேணும்.

ஆரம்பத்தில இவனுக்கு எழுத்து ஒழுங்காய் வரமாட்டுது. நானும் எவ்வளவோ முயற்சி செய்தும் அவனுக்கு எழுத்து கோணல் மாணலாய்தான் வந்துது. ஒரு எழுத்து சின்னன் பெரிசு. எழுதிக்குடுத்துப்போட்டு அதுக்கு மேல எழுதச் சொன்னாலும் எழுதமாட்டான். அதுக்குப் பிறகுதான் யோசிச்சன் அவனுடைய விரல் நரம்புகளுக்குப் பயிற்சி குடுக்கவேணும் எண்டு.

எல்லா மாணவருக்கும் களிமண் வழங்கி அதைக் குழைத்து உருவங்கள் செய்து வருமாறு கூறினேன். அவைக்கு சரியான புளுகம். போட்டி போட்டுக்கொண்டு மண்ணைக் குழைச்சு பிசைந்து உருட்டி உருவங்கள் செய்திச்சினம். 'உரல்' 'உலக்கை' 'லொறி' 'ரக்ரர்' எண்டெல்லாம் செய்திச்சினம். என்ர பிரதான நோக்கம் அவர்கள் உருவம் செய்யிறதில்லை. அவர்களுடைய கைவிரலுக்கு பயிற்சி அளிக்கிறதுதான். விரல் நரம்புகள் எழுதுவதற்கு பொருத்தப்பாடு அடையச் செய்வதே விதுரனும் தான் செய்த 'ரக்ரர்' வாகனத்தை எனக்குக் காட்டினான். நல்லாயிருக்கு நாளைக்கு வீட்டிலையும் ஏதாவது செய்து கொண்டு வரவேணும் "ஓம் ரீச்சர்" அவன் செய்த ஆக்கங்கள் அழகாய் இருந்தனவோ... இல்லையோ ஆனால் எனது நோக்கம் நிறைவேறி விட்டது. அவன் இப்போ வடிவாய் எழுதுறான்... காலம் போகப்போக வடிவான எழுத்தாய் வந்திட்டுது.

இதை மாதிரித்தான் அவனுக்கு இலக்கங்களும் வராது. எத்தினை தடவை சொல்லிக் கொடுத்தாலும் மறந்திடுவான். ஒன்று இரண்டு அவனுக்கு விளங்கப்படுத்த... வேண்டாம் எண்டு போச்சு... கடைசி உத்தியாய் வகுப்பில பாண்டி விளையாட்டை அறிமுகப்படுத்தினன்.



புளியங்கொட்டையக் குடுத்து குழுக்குழுவாய் விளையாடக் கொடுத்தன். புளியங் கொட்டைகளை சமனாகப் பிரிப்பதும் குழிகளில் நான்கு வந்தவுடன் பாய்ந்து எடுப்பதும் எத்தனை வித்தியாசத்தில் வெற்றி என மதிப்பிடுவதும் மீண்டும் விளையாடுவதற்கு காய் குறைந்தவர்களுக்கும் கடன் வழங்குவதும் என அவர்கள் விளையாடிய்து எனது பணியை இலகுபடுத்தியது. விதுரன் இலக்கங்களும் அவற்றுக்கிடையிலான வித்தியாசங்களை அறிந்துகொண்டான்.

மைதானத்தில் விளையாடும்போது அவன் காற்சட்டை கழன்று விழ விழ ஒரு கையால் பிடித்துக்கொண்டு ஓடித்திரிவான். நான் இழுத்துப்பிடித்து காற்சட்டைக்கு ஊசி குத்திவிடுவன். குத்தும் மட்டும் ஒரு இடத்தில நிற்கமாட்டான். இழுத்துக்கொண்டே இருப்பான். அவ்வளவு விளையாட்டு ருசி... இவையின்ர விளையாட்டு ருசியைப் பயன்படுத்தி அவர்களின் சில திறன்களை வளர்த்துப்போடுவன். கேட்டல் திறனை வளர்க்கோணும் எண்டு நினைத்தா அவர்களை "கோட்டான் கோழி" விளையாடச் சொல்லுவன். பேச்சுத் திறனை வளர்கோணும் எண்டு நினைச்சா பசுவும் புலியும் விளையாடச் சொல்லுவன்.

ஆரம்பத்திலேயே விதுரனிட்ட நுணுகி ஆராய்கிறதிறன்இருந்ததை அவதானிச்சன். ஒருக்கா நான் இவன்ர பெயரை கொப்பியில எழுதிக்கொடுத்தன் "அ.விதுரன்" எண்டு. அவன் அதை அப்பிடியே பார்த்துட்டு ஒருநாள் இன்னும் ஒரு ரீச்சர் உமக்கு என்ன பெயர் எண்டு கேக்க 'ஆனா குத்து விதுரன்' என்று சொல்லியிருக் கிறான். ரீச்சருக்கு விளங்கேல்லை எழுதிக்காட்டச்சொல்லியிருக்கிறா உடன "அ.விதுரன்",எழுதியிருக்கிறான். பிறகுதான் ரீச்சருக்கு விளங்கிச்சுது இடையில இருக்கிற குற்றையும் சேர்த்துக் சொல்லுறான் எண்டு. அந்த ரீச்சர் அவன் வளர்ந்தாப்பிறகும் "ஆனாகுத்துவிதுரன்" எண்டுதான் கூப்பிறவா.

விதுரனின் நுணுகிய அறிவுத்திறனை கண்டு நான் விசேட கவனம் எடுத்துப் படிப்பிச்சு கொலசிப்பில பாஸ் பண்ணிற்ரான் அவனோட ஐந்துபேர் பாஸ். எனக்கு அதைவிட சந்தோசம் வேற ஒண்டும் இல்லை. கொலசிப்பாஸ் பண்ணினதோட அவனை பெரிய பள்ளிக் கூடத்தில சேர்க்கப்போறன் எண்டு கூட்டிக்கொண்டு போய்த்தான் இந்த மத்திய கல்லூரியில சேர்த்தவ அப்பிடியே அவன் படித்து மருத்துவ பீடத்திற்கு தெரிவாகி இருக்கிறான் எண்டால் எனக்கு எவ்வளவு சந்தோசமாய் இருக்கும்.

மூன்று முப்பதிற்கு தொடங்கும் என்று அறிவிச்சிருந் தினம். நான் சரியா அந்த நேரத்திற்கே போய் விட்டன்.

**சாரங்கன்**

மண்டபத்தில அடுக்கியிருந்த கதிரையில நூற்றைம்பது இருநூறு சனம் இருக்கும் அவர்களுடன் நானும் போய் அமர்ந்து கொண்டன். ஏற்பாட்டாளர்கள் தடல் புடலாக ஓடித்திரியினம். எனக்கு பக்கத்தில் இருந்த ஒரு அம்மா நான் ஆசிரியை என்பதை அறிந்து ஒரு மரியாதைச் சிரிப்புச் சிரித்து என்னுடன் உரையாடத் தொடங்கினார்.

வருகைதந்தோருக்கான உறுதிப்படுத்தல் ஒப்பமிடும் கடதாசி என்னிடம் நீட்டப்பட்டது. "ஓம் ஓம் இது மிக முக்கியம் பிறகு நாளைக்கு எனது மகளுக்குத்தானே பேச்சு விழும்" என நினைத்துக் கொண்டு அதை வாங்கி ஒப்பமிட்டுக் கொடுத்திட்டன்.

"எல்லோரும் வெளியில வாங்கோ வந்து பாதையில இரண்டு பக்கமும் நில்லுங்கோ" கட்டளை பிறந்தது. எல்லோரும் சொன்னது போல் இரு பக்கமும் நின்றார்கள் நானும் அவர்களில் ஒருவராக நின்றேன் எல்லோருக்கும் பூக்கள் கொடுக்கப்பட்டது. அவர்கள் வரும் போது தூவுவதற்கு என்று புரிந்து கொண்டு பூக்களை வாங்கி கையில் வைத்துக் கொண்டு அவர்கள் வரவை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அந்த மூன்று ஆசிரியர்களும் மாலைகள் அணிவிக்கப்பட்டு அதிபர், பெற்றோர், ஆசிரியர் சங்கத் செயலாளர் போன்றோர் புடை சூழ்ந்து வர வருகை தருகின்றனர். பாதையின் இரு மருங்கிலும் பூவுடன் நின்ற பெற்றோர்களும், மாணவர்களும் கையில் இருந்த பூக்களை அவர்கள் மேல் தூவிவிட்டு கைதட்டுகின்றனர். இவ்வாறு பல கைதட்டலால் விழா உற்சாக மானது. எனது இடத்திற்கு நேரே அவர்கள் வர நான் எனது பூவை தூவிவிட்டு கைதட்டினேன். அவர்கள் அப்படியே நகர்ந்து சென்று மேடையில் அமர்ந்து கொண்டனர். இன்னும் கைதட்டல் ஓயவில்லை.

நிகழ்வுகள் ஆரம்பமாகின. அதிபர் தொடங்கி ஒவ்வொருவராக அவ்வாசிரியர்களின் அறிவு, திறமை அர்ப்பணிப்புத் தன்மை என்பவற்றை எல்லாம் விழாவாரியாகக் கூறி விளங்கப் படுத்திக் கொண்டிருந்தார்கள். எனக்கு அருகில் இருந்த அம்மா "உங்கட மகளும் இங்க படிக்கிறாவாக்கும் என்ன..." என இழுத்தார். ஓம்.... அதோட அந்த விதுரனும் என்னட்டப் படிச்சவன் தான். அதுதான் பார்த்திட்டுப் போவம் எண்டு வந்தனான்" நான் சொல்ல அவரது முகம் மாறி "உங்களுட்டப் படிச்சவரோ....?" ஓம்... ஆரம்பக் கல்வி என்னட்டத்தான் படிச்சவன் செயலாளரின் உரை எங்களின் உரையாடலை இடைநிறுத்தியது.

"இந்தப் பாடசாலையில் இருந்து ஒரு மாணவன் மருத்துவ பீடத்திற்கு செல்கின்றான் என்றால் அதற்குக் காரணம் இந்த மேடையில் வீற்றிருக்கும் மூன்று ஆசிரியர்களுமே. இந்த ஆசிரியர்களின் அயராத உழைப்பும் கடமையுணர்வும், அறிவாற்றலுமே காரணம். இவர்களுக்கு பெற்றோர் ஆசிரியர் சங்கத் செயலாளர் என்ற வகையில் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு இவர்கள் தொடர்ந்தும் அயராது உழைத்து பல மாணவர்களை மருத்துவ பீடத்திற்கு அனுப்புதல் வேண்டும். இதற்கு எம்மாலான உதவிகளைச் செய்வோம்...."

செயலாளர் தனது உரையை ஒருவாறு முடித்துக் கொண்டார். மாணவனால் ஆசிரியருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது.

பக்கத்தில இருந்த அம்மா "சீ.... இதற்கு முதல் படிப்பித்த ஆசிரியருக்கும் பொதுவாய் ஒரு நன்றி சொல்லியிருக்கலாம்"... நான் வேதனைப் படுவேன் என நினைத்து தனது அபிப்பிராயத்தை கூறினார். "சரி அவைதான் மறந்திட்டினம் எண்டாலும் படிச்ச பிள்ளையாவது தனது ஆரம்பக் கல்வி ஆசிரியரையும் ஞாபகப் படுத்தி கௌரவிச்சிருக்கலாம் எல்லே...." அம்மா தொடர்ந்தும் கூறினார். "அது சரி இப்பத்தையப் பிள்ளைகள் பெத்த தாய் தகப்பனையே மறந்திருங்கள் போல கிடக்கு" சலித்துக் கொண்டார். நான் இடையில் மறித்து சீ....சீ.... அப்படிச் சொல்லாதேங்கோ. பிள்ளையள் தன்ர ஆரம்பக் கல்வி ஆசிரியர்களை சரியாய் மதிக்குதுகள் இந்த சமூகம் தான்... என இழுத்தேன். "அப்ப இந்த விதுரன் உங்களைச் சந்திச்சு நன்றி சொன்னவனோ..." அம்மா தான் கேட்டார். "ஓம் றிசல்ற் வந்த உடனேயே என்னட்டை வந்திட்டான் வந்து கதைச்சுப் போட்டு இஞ்சே இந்தக் கடிதத்தையும் தந்திட்டுப் போனவன்" என்று கூறியவாறு எனது பையில் இருந்த கடிதத்தை எடுத்துக் கொடுத்தேன்.

*அன்புள்ள*


*ஆதிரீச்சர் அறிவது!*

*நான் மருத்துவபீடத்திற்கு தெரிவாகிய மகிழ்ச்சியைப் பகிரவே உங்களிடம் வருகின்றேன். உங்கள் முன் வந்தவுடன் மரியாதைப் பயம் காரணமாக சொல்ல நினைததததை சொல்லாமல் விட்டுவிடுவேன் என நினைத்தே இக்கடிதத்தை எழுதி வருகிறேன். ஆதிரீச்சர் இன்று நான் இந்த நிலையை அடைவதற்கு அத்திவாரம் இட்டவர் நீங்கள் தான் உங்களை நான் என்றும் மறக்க மாட்டேன். எனது அப்பா அம்மாவுக்கு அடுத்த படியாக நான் உங்களை நினைக்கிறேன். தொடர்ந்தும் முன்னேறி உங்கள் ஆவல் நிறை வேற்றுவேன்.*

*இப்படிக்கு ,*

*அ.விதுரன்.*

# குறுங்கதை இரண்டு



# தாய்...

போராளிகள் நடமாட முடியாத அளவிற்கு இராணுவம் தீவிரமாகச் செயற்பட்டுக்கொண்டிருந்தது. இருந்தாலும் போராளிகள் யாழ்.மண்ணை விட்டு வெளியேறவில்லை என்பதற்கு மூலை முடுக்கெல்லாம் புலிகள் நடாத்திய தாக்குதல்கள் கட்டியம் கூறின.

இந்த நெருக்கடியான சூழலிற்குள்தான் இரண்டு போராளிகள் யாழில் மையப்பகுதிக்குள் நடவடிக்கை ஒன்றைத் திட்டமிட்டு விட்டுக் காத்திருக்கின்றார்கள்.

ஒருநாள் பகல் உணவை ஓர் ஆதரவாளர் வீட்டில் இரகசியமாகச் சென்று உண்டுவிட்டு வந்தார்கள். ஆனால் மறுநாள் அந்தக் குடும்பம் இராணுவத்தால் விசாரணைக்காய் அழைக்கப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டார்கள். இன்னொரு தடவையும் உணவு உண்ட வீட்டார் கைது செய்யப் படுகின்றார்கள். ஆனால் இந்தப் போராளிக்கு பேரதிர்ச்சி. எப்படி வெளியே தெரிந்தது என்ற குழப்பம். யாரோகாட்டிக்கொடுக்கின்றான். எங்களைத் தொடர்கின்றான் என ஊகித்துக்கொண்டார்கள்.

இந்தச் சம்பவங்களிற்கான விடைதேடலில் ஆழ்ந்துபோன நேரம் ஒரு தாய் அந்த வீட்டின் இரும்புக் கேற்றைத் திறந்தவாறு புன்னகையுடன் நுழைந்தாள். இதற்குள்ளும் சூழ்ச்சிகள் இருக்கலாமென எண்ணியவர்கள் ஒருவர் மெதுவாக வெளியே அவதானித்து எதுவும் இல்லையென உறுதிசெய்துகொள்ள மற்றவர்,

“அம்மா! வாங்கோ, இதில இருங்கோ” என கதிரை ஒன்றை எடுத்துப் போட்டான். இருக்கைக்குள் குந்திய அம்மா,

“தம்பியவ, நான் சொல்லுறத கவனமாக் கேளுங்கோ” என்றதும் “என்னம்மா...!!?” என இவரும் ஒருமித்த குரலில் கேட்க,

“என்னண்டா தம்பியவ போன கிழமை நீங்க சாப்பிட்ட மணியக்கா வீட்டுக்காரரையும், முந்தநாள் சாப்பிட்ட வாணிரீச்சர் வீட்டையும் காட்டிக்குடுத்தது ஆரெண்டு தெரியுமோ...?

“என்னம்மா...!? சொல்லுறியள்” என ஒரு போராளி ஆச்சரியமாகக் கேட்க “இதச் செய்தது என்ர புரிசன்தான். அவர் இரவு வெறியில வந்து எல்லாத்தையும் உளறிப்போட்டார். நீங்க சாப்பிடப்போனத ரெண்டுபேரும் கண்டனாங்கள் தான். ஆனா இந்தச் சாராயத்துக்காக இப்பிடிச் செய்வார் எண்டு நினைக்கேல்ல தம்பி. இப்பிடியான துரோகிகள ஒரு காலத்திலையும் விடக்கூடாது. நாளைக்கு இன்னும் எத்தின குடும்பம் அழியப்போகுதோ தெரியாது. அதுக்கு நான் துணையா இருக்கமாட்டன். இவர் எங்கட வீட்டுக்குப் பக்கத்தில இருக்கிற ஆமிக்காரங்களோட சரியான பழக்கம். அவங்களோட குடிக்கிறது இப்பிடிவேலை செய்யிறது எண்டு எனக்கு இரவுதான் தெரியும்” என மூச்சை உள்ளிழுத்து விட்டார். மீண்டும்,

“தம்பி நான் விதவையாப் போயிடுவன், கவலைப்படுவன் எண்டு நினைச்சு அந்தாள சும்மா விட்டிடாதேயுங்கோ இவங்கள் உயிரோட இருந்தா எங்கட மக்களுக்குத்தான் ஆபத்து. இப்பிடியானவங்கள் அழியிறதுதான் நியாயம்”

“ஓமம்மா, நாங்க உடனடியா நடவடிக்கை எடுக்கிறம். நீங்க கவலப்படாம போங்கம்மா” என இருகைகளையும் பற்றிவிடை கொடுக்கின்றார்கள். அந்தத் தேசத்துக்காய் உழைக்கும் தாய் நிம்மதியாய் விடைபெற அவர்கள் இருவரும் அந்தத் துரோகியை அழிக்கப் புறப்பட்டு விட்டார்கள்.

-வி.தேவபாணு-

# வாழ முடியாது...

நல்லூர்த் திருவிழா களை கட்டிவிட்டது. யாழ். மண்ணின் பல பிரதேசங்களிலிருந்தும் பக்தர்கள் அலை அலையாகத் திரண்டு வந்து கந்தனின் அருளைப் பெற்றுச் சென்றுகொண்டிருந்தார்கள். மணிக்கடை, கச்சான் வியாபாரிகள் ஒரு புறமாகவும் குளிர்களி வாகனங்கள் மறுபுறமாகவும் சூழ்ந்து கோயில் கும்பிட வந்த பக்தர்களை தம் பக்கம் இழுக்கும் முயற்சியில் தீவிரமாகச் செயற்பட்டுக்கொண்டிருந்தன.


திருவிழா ஆரம்பித்து மூன்று நாட்கள் கடந்திருந்தது. முன்னைய நாட்களைவிட பக்தர்களின் வருகை கூடியே இருந்தது. இவர்களிற்குள் பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் சிவில் உடையில் உள்வீதியில் நடமாடிக் கொண்டிருந்தார்கள். இந்த அதிகாரிகள் சீருடையில் நின்ற அதிகாரிகளை வந்து சந்தித்துவிட்டுச் செல்வதை வைத்தே இவர்கள் அவர்களைச் சார்ந்தவர்கள் என அங்கு நின்றவர்களால் ஊகிக்கமுடிந்தது.

இந்தச் சிவில் உடை அதிகாரிகள் பரபரப்பாக உள்வீதிக்குள் நுழைகிறார்கள். அங்கு நிலையாய் நின்று அலவலாவிக்கொண்டிருந்த ஒரு சிலர் இவர்களின் பரபரப்பைக் கவனித்துக்கொண்டு ஏதோ காதுக்குள் மற்றவர்கள் விளங்கிக்கொள்ள முடியாதவாறு குசுகுசுத்துக் கொண்டனர்.

திருவிழாவின் பரபரப்புக்குள்ளும் ஓரிருவர் ஓடித் திரிவது வித்தியாசமாகவே இருந்தது. அங்கு திருநீற்றுப் பட்டையுடன் வந்த பெரியவர் அங்கு நின்ற இளைஞர்களைப் பார்த்து,

“தம்பி கொஞ்சம் தள்ளிப் போய் நில்லுங்கடா. இவங்கள் உள்வீதி மூலையில ஆரோ ஒரு பெடியன சுட்டுப்போட்டாங்கள். ஆரோ அவனைக் காட்டிக் கொடுத்த தெண்டுதான் அதில கதைக்கிறாங்கள்” என்றவர் மிக வேகமாக அவ்விடத்தைவிட்டு நகர்ந்தார்.

நான்காவதுநாள் திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர்களின் கண்களில் முதல்நாள் சம்பவம் பிரதிபலித்துக்கொண்டே இருந்தது. மறுநாள் பொழுது



புலர்ந்தபோது ஒரே பரபரப்பு. நல்லூரின் தெற்கு வீதியிலுள்ள பனை வடலிக்குள் யாரோ ஒருவரது சடலம் இருப்பதாக பேசிக் கொண்டனர். நேற்று அந்தப் பெடியன காட்டிக்கொடுத்தது இவன்தானாம்” என குழுமி நின்றவர்களில் ஒருவர் சொல்ல அதற்கு மற்றவர்,

“இவன் ஒருத்தரக்காட்டிக் கொடுத்ததுதான் எங்களுக்குத் தெரியும். இன்னும் தெரியாம எத்தின இருந்திருக்கும். எங்கட தேசத்துக்கு துரோக மிழைக்கிற எந்தச் சக்தியும் எங்கட மண்ணில வாழவும் முடியாது வாழவும் விடமாட்டேன்” என்றவாறு தன் அலுவலகத்தை நோக்கி நடக்கலானார்.

# தெரு

துணையை நெருங்கிய கணங்களில்
முதல் மனிதர்களின் சுவடுகளாலானவை
இந்தத் தெருக்கள்.
பிரியங்களின் நிரந்தரக் கணங்களால்
நெய்யப்பட்டவை அவை.

பிறந்த ஒவ்வொரு குழந்தையினதும்
பதியாத முதல்சுவடுகளிற்காக
தெரு காத்திருக்கின்றது.
தெருக்களில் பேணப்படும் சனநாயகத்தில்
அனைவரும் சமமே.
பாகுபாடற்ற கணமொன்றிலேயே
மின்னலிடுகின்றன காதலின் கீற்றுக்கள்.
தயக்கம் தவிர்க்கப்பட்டு
காற்றின் வெளியில் அலையும்
சில கரங்களிற்கேனும்
அகப்படுகின்றது மின்னலின் கீற்று.
நினைவில் வைத்திருங்கள்
தெருக்கள் ஓரவஞ்சனையற்றவை.

வெட்கத்தின் மின்னல் தீண்ட
முதல் மனிதர்கள் மறைந்துகொண்டது.
மரங்களின் பின்னால்
மிக அரிதாகவேயிருக்கின்றன
மரங்களற்ற தெருக்கள்
முக்கியமாக
ஆலமரங்கள்.

கனவுகள் நீளும் விழுதுகளுடனிருக்கும்
தெருவோர ஆலமரங்கள் ஒவ்வொன்றும்
பிணைந்தேயிருக்கும்.
யாராவது ஒருவனின் காதலுடன்
தீராத கவிதைகளுடன்
ஒவ்வொரு காதலர்களையும வரவேற்கின்றன
ஆலமரங்கள்.
தெருவில் கண்டவளை நினைத்துருகி
முதல் கவிதை எழுத உட்கார்பவனை
ஆசீர்வதிக்கின்றது ஆலமர நிழல்.

அச்சம் மிகவூட்டி சுவடுகளற்ற வெறுமையில்
விரிகின்றன
இன்றைய எங்கள் தெருக்கள்.
முன்னை நாளொன்றில்
தெருவின் கடைசிச் சுவடுகளில் கசிந்த
இரத்தக்கறைபட்டு நிறம் மாறியிருப்பன
தெருமுகப்பு முட்கம்பிகள்
ஆபத்தின் குறியென அருகே நடப்பட்டிருப்பது
சொல்லத் தயங்கிய காதல்களுடனலைந்த
இளைஞனொருவன்
கனவுகள் நிரப்பிய மண்டையோடு.

தெருவிழந்த சோகத்தில்
காதலிக்கத் துணையற்றவனொருவன்
வானை நோக்கிக் கத்தக்கூடும்-
அன்பே!
கவலைவிட்டெழு
இன்னும் பிறக்காத
நம் கிராமத்தின் பையனொருவன்
எங்கள் தெருவேறி நடப்பானொருநாள்.
பின்,
ஆலின் கீழமர்ந்து
எழுதத்தொடங்குவான் தன் முதல் கவிதையை.

யோ. கர்ணன்.

# இளைய தலைமுறைக்காய்

மணியொலி
மனம் கொதிக்கும்
விழி வழி
வந்த கண்ணீர்
உப்புக் கரித்த
கோடு
கிழித்த போது
நிமிர்ந்த
விழிகள்
நிலத்தை
நோக்கி
மனப்புதையல்
ஆராய்ச்சி

கணப் பொழுதில்
கண்டு பிடிப்பு
உப்புக்கரித்த
இதயம் ஒன்று
குருதி படிந்த
நிலையில்
காலக் கணக்கில்
26.12.2004
சுனாமியின் பாதிப்பு
அகழ்வாராட்சியில்
நாளை வரலாறு
படிக்கும்
இளைய தலைமுறைக்காய்.

ரமணன்




கைவண்ணம்



கா.தாட்சாயினி,
தரம்-09,
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.

# மலைப்பாம்பு

நச்சற்ற பாம்புகளில் போய்டே என்று ஒரு குடும்பம் உள்ளது. இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பாம்பு இனங்கள் அனைத்துமே உருவத்தில் பெரியவை. மலைப்பாம்பு போவா பாம்பு, அன கொண்டா முதலியன இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவை. இவை இரைகளைச் சுற்றிவளைத்து இறுக்கி மூச்சுத் திணறும்படி செய்து கொன்றுவிடும். பல்லிகள் இனத்திலிருந்து உருமாற்றம் அடைந்த தொடக்க காலப் பாம்புகளாக இவை இருக்கலாமென்று ஒரு சிலர் கருதுகின்றனர். போவா பாம்புகளைப் போல இதன் தோல் வலுவானது; பல வடிவமைப்புகளுடையது.

பொதுவாக இவை சிறு பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன ஆகியவற்றை உண்ணும். பெரிய விலங்குகளான மான், பன்றி ஏன் சிறுத்தைப் புலிகளைக் கூட விட்டு வைக்காது. பெரிய இரையை விழுங்கிவிட்டால் அதன் பின் இரண்டரை ஆண்டுகள்வரை உணவே இல்லாமல் இருக்கும் திறனுடையது. பொதுவாக இது மனிதர்களைத் தாக்காது.

இவை ஒரு சமயத்தில் 100 முட்டைகள்வரை இடும். ஒரே ஒரு இனத்தில் மட்டும் பெண்பாம்பு அடைகாக்கும் முட்டை



யிலிருந்து குட்டிகள் வெளிவர சில வாரங்கள் ஆகும். இதன் ஆயுள் காலம் 20 முதல் 30 ஆண்டுகள்.

இந்திய மலைப்பாம்பு சுமார் ஏழு மீற்றர் நீளம்வரை வளரக் கூடியது. வலைப் பின்னல் மாலைப் பாம்பும் ஆபிரிக்க மலைப்பாம்பும் 10 முதல் 11 மீற்றர் நீளம்வரை வளரக் கூடியவை. நம் நாட்டில் காணப்படும் மலைப் பாம்பை வெண் ணாந்தை என்றும் குறிப்பிடுவார்கள். உடல் கரும்பழுப்பு நிறத்தில் சிவப்புப் புள்ளிகளுடன் இருக்கும் இவை நன்றாக நீந்தும்; நன்றாக மரமேறும். இது ஒரு இரை தேடி. இதன் தோலுக்காகவே இது பெருமளவு கொல்லப்பட்டு வருகிறது.

வலைத் தோல் மலைப்பாம்பை ராஜ மலைப்பாம்பு என்றும் கூறுவார்கள். பாம்புகளிலேயே பெரியதான இது 10 மீற்றர் நீளம் வரை வளரக் கூடியது. இதன் உடல் பழுப்பு மஞ்சளும் கறுப்பும் கலந்து காணப்படும். வட்ட அல்லது சதுர வடிவப் புள்ளிகளும் வரிசையாக அமைந்திருக்கும். இதன் உணவு கோழி, வாத்து, நாய், பன்றி, பூனை முதலியன.

மலேஷியாவில் காணப் படும் இரத்த மலைப்பாம்பு சிவப்புநிற முடையது. நியூகினியாவில் காணப் படும் பாப்புவான் மலைப்பாம்பின் நிறம் பச்சை. அவுஸ்திரேயாவில் காணப படுவது டயமண்ட்மலைப் பாம்பு.

## தூய தமிழ் சொற்கள்

**கிழமைகள்:-**

திங்கள் ~ திங்கள்
செவ்வாய் ~ செவ்வாய்
புதன் ~ அறிவன்
வியாழன் ~ வியாழன்
வெள்ளி ~ வெள்ளி
சனி ~ காரி
ஞாயிறு ~ஞாயிறு

**மாதங்கள்:-**

தை ~ சுறவம்
மாசி ~ கும்பம்
பங்குனி ~ மீனம்
சித்திரை ~ மேழம்
வைகாசி ~ விடை
ஆனி ~ ஆடவை
ஆடி ~ கடகம்
ஆவணி ~ மடங்கல்
புரட்டாதி~ கன்னி
ஐப்பசி ~ துலை
கார்த்திகை ~நளி
மார்கழி ~சிலை

இ.ம.ராஜன்

## சொற்சிலம்பம் - 95

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| டி | ப் | ம | னை | ன் | தா | ம் |
| டு | கு | ல் | பா | ந் | மி | பு |
| க | லா | தி | கோ | னி | ணி | கா |
| ந் | னா | பி | லி | னை | சீ | இ |
| ழ | ட் | தா | ஷ் | ர் | ரி | கை |
| ற் | ர் | யா | க் | ஸ் | க | வி |
| ரா | வ | மோ | ன் | கி | த் | நீ |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -93 இன் விடைகள்

01. மன்னார்.

02. இல்மனைற்.

## சொற்சிலம்பம் - 93 இன் பரிசுக்குரியவர்

த.சுவர்ணா, தரம்-05,
மு/கொல்ல விளாங்குளம்,
அ.த.க.பாடசாலை,
வவுனியா.

## சொற்சிலம்பம் - 93 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. வி.சஜிகரன், தரம்-5
மு/ஸ்ரீ சுப்பிரமணிய வி.சா,
புதுக்குடியிருப்பு.

02. தி.டிலக்ஸ்சிகா,
முன்பள்ளி தட்டயமலை,
முத்துஐயன்கட்டு.

03. அ.சாமந்தியா.
ஒட்டுசுட்டான் ம.வி,
ஒட்டுசுட்டான்.

04. த.றஜிதா
தரம்-4,
பூநகரி மகாவித்தியாலயம்.

05. ஜெ.ரமணியா,
20/1, கலைப்புலவர்வீதி,
யாழ்ப்பாணம்.

06. ச.மலர்விழி,
ஆண்டார் செட்டிவளி,
நானாட்டான்.

07. த.ஐதுர்மிலா,
வண்ணான்குளம்,
முல்லைத்தீவு.

08. து.சுகயந்தி,
கலைவாணி வீதி,
சித்தன்கேணி.

01. மாதங்களில் ஒன்று?

01) ....................................

02. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை?

01) ....................................

பெயர் :- ....................................

முகவரி :-....................................

....................................

....................................

சொற்சிலம்பம்-95
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

# நாய் வால்

பகுதி-01




நன்றி:- பன்டேடைம்ஸ்

(தொடரும்)

# வீடு

# பிள்ளைகளிடம் வெறுப்பைக் காட்டாதீர்கள்

தற்கால சூழலோடு குடும்ப சூழலை இணைத்துப்பார்க்கும் போது எரிமலையைப் போல் வெடித்து கிளம்பும் பிரச்சினை, பிள்ளைகளின் கல்வி கற்றல் தொடர்பான சிக்கலாகும். இப்பிரச்சினை ஆரம்பம் தொட்டு இன்றுவரை இருந்துவருகின்ற ஒன்றாகவே கருதவேண்டும். அதிலும் தற்காலத்தில் கல்வி என்பது மிக முக்கியத்துவம் கொடுத்து எல்லோராலும் பேசப்பட்டு பெரிதாகக் கருதப்பட்டு வருகையிலே சில பிள்ளைகள் சித்தியெய்யாமல் போகின்ற பொழுது வீட்டில் உள்ளவர்களால் அந்தப்பிள்ளையின் மீது வெறுப்புணர்வை காட்டும்போது அந்தப் பிள்ளையின் மனம் தாக்கப் படுகின்றது. இவ்வளவு காலமும் படிக்க வைத்து பலன் ஏதும் காட்ட வில்லையே என பல காரணங்களை பிள்ளைகளின் மனதில் திணித்து அவர்களின் மனதை சிதைத்து விடுகின்றனர். இதனால் அடுத்தகட்ட வேலைக்கான முடிவை எடுக்க மனம் மறுத்துக்கொண்டே இருக்கும்.

குடும்பத் தலைவர்கள் இந்த விடயத்தை நன்றாக உணரவேண்டும். பிள்ளையின் அடுத்த கட்ட வளர்ச்சி குன்றிப் போகாமல் பார்க்கவேண்டும். “தீயால் சுட்டபுண் மாறும், நாவால் சுட்டபுண் மாறாது” என்பார்கள். தங்களின் பிள்ளைகள் தோல்வியடையும் பொழுது அந்தப் பிள்ளை கவலைப்படாமல் போவதில்லை. அந்தத் தோல்வியை தாய், தந்தையர்கள் அவர்களுக்கு உரமாக்கப் பழக வேண்டும். இதை விட்டுவிட்டு அவர்களின் மனதை சக்கை போடு போட்டு ஏகாந்தத்தை அவர்கள் மனதில் உருவாக்கிவிட்டால் அவர்களின் மனம் எப்படியிருக்கும் என்பதை அந்த நிலையில் இருப்பவர்களுக்குத்தான் விளங்கும். மனதை நோகடித்தமை மட்டுமல்லாது அவர்களின் எதிர்காலத்தை புரிந்து கொள்ளாமை, அவர்களின் தனித்துவம், சுய ஆர்வம் என்று பட்டியலிட்டுக்கொண்டே போகலாம். இதைப் புரியாத தலைவர், தலைவி கள் தங்களின் ஆதங்கத்தை அவர்களிடையே காட்டுகின்றனர்.



ஒட்டுமொத்தமாக ஒரு கருத்தைப் பாருங்க ளேன். உலகத்திலே எல்லோரும் டாக்டராக மாறினால் என்னவாகும், இஞ்சினியராக மாறினால் என்னவாகும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். எனவே கடந்து செல்லும் கால ஓட்டத்தில் கல்வி என்பது மிக முக்கியத்துவம் தான். ஆனால் அதற்கென்று பிறந்தவன் அந்த ஓட்டத்தோடு சேரும்போது மிகுதியானவர்கள் மிகுதி வேலைகளில் ஈடுபடுத்தப்பாருங்கள்.

மரத்தில் ஏறும்போது சறுக்கி விழுந்தால் மருந்திட்டு மீண்டும் ஏறப்பாருங்கள். மாறாக அவர்கள் மனதில் வெறுப்புணர்வை ஊட்டாமல் மாற்றியமைத்தால் குடும்ப வாழ்க்கை அல்லது குடும்ப உறவு என்பது சுபீட்சமானதாகவும், சுகமானதாகவும் அமையும்.

**மு.அருளரசன்**

# எதுவரை அலங்காரம்

சம காலத்தில் வாழும் பெண்கள் மற்றைய பெண்களை விடவும் தாமே அழகானவராகத் தெண்படவேண்டும் என எண்ணுகின்றார்கள் இதனால் தம்மை அதிகமாகவே அலங்கரித்துக்கொள்கின்றனர். இதற்கு அவர்கள் முதலில் தமது கூந்தலையே விதம் விதமாக அழகுபடுத்துகின்றனர்.

இதனால் கூந்தல்களை கட்டையாக வெட்டுகின்றனர். கூந்தலில் புதிய புதிய வர்ணங்களை தடவிக்கொள்கின்றனர். அது மட்டுமன்றி தமது உடலை இன்னும் மென்மையாக்கவும் பள பளப்பாக்கவும் ஆசைப்படுகின்றனர். எனினும் இவ்வாறு பெண்கள் தம்மை அழகுபடுத்திக்கொள்வதற்கு முன் தமது உடல் நிலை பற்றியும் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



அடுத்து நீங்கள் வாழும் சூழலைப் பற்றி கொஞ்சம் சிந்திக்கவேண்டும். நீங்கள் ஒரு தாயாக இருந்தால் இவ்வாறு மிதமிஞ்சிய அலங்காரம் எந்தளவுக்கு உங்களுக்கு பொருந்தும் என்று கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள் பிள்ளைகள் இருக்கும் ஒரு தாய்க்கு யுவதிகள் செய்து கொள்ளும் அலங்காரம் ஒரு போதும் பொருந்தாது. இவ்வாறு ஒவ்வாத அலங்காரத்தினால் உங்களின் பிரத்தியேக தோற்றத்தில் அலங்காரத்தையே ஏற்படுத்தும். இதற்காக தாய்மார் தம்மை அலங்கரிக்கக்கூடாது என்பதல்ல. எனினும் மிதமிஞ்சிய அலங்காரம் பொருந்தாது என்பதே உண்மை. சாதாரணமாக அலங்காரம் செய்துகொள்ளும் தாய்மார்கள் சமூகத்தில் வரவேற்கப்படுகின்றார்கள்.

எப்பொழுதுமே பெண்கள் முன்மாதிரியாக வாழப் பழக வேண்டும். அதுவுமின்றி அநாவசியமான அலங்காரங்களைக்கொண்டு தம்மை அலங்கரித்துக்கொண்டால் தமது பிள்ளைகளுக்கும் இழுக்கையே தேடித்தரும். எந்தப் பெண்ணும் முதுமையடைவதை ஒருவராலும் தடுக்க முடியாது. அதேபோல் சிலர் கூறுவார்கள் “எனக்கு வளர்ந்த பெரியபிள்ளைகள் இருக்கின்றனர் இனி என்னை யார் பார்க்கப் போகிறார்?” என்று கூறுவார்கள். எனினும் இவ்வாறு யாரும் அலங்காரமே வேண்டாம் என்று இருக்கக் கூடாது. அழகாக இருப்பதும் சுத்தமாக வாழ்வதும் நல்ல பழக்கங்களாகும்.

இவை எமது ஆளுமையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. பெண்கள் எப்பொழுதும் புத்திசாதுரியமானவர்களாக இருக்கவேண்டும். எனவே பெண்களின் அழகை வர்ணித்தே பெண்களை ஏமாற்ற முயலுகின்றனர் என்பதை பெண்கள் நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும்.

சில பெண்கள் தம்மை அலங்கரிக்கப்போய் தம்மிடமுள்ள அழகையும் இழக்கின்றனர். சமூகத்தில் மாற்றங்களும், முன்னேற்றங்களும் ஏற்பட்டுவிட்டன. என்பதற்காக சகல விதமான அலங்காரமும் நமக்கு பொருந்துவதில்லை. எல்லாப் பெண்களுமே தமது உடல் நிலை பற்றி நன்கு தெரிந்திருக்கவேண்டும். அதேபோல் தமக்கு பொருந்தக்கூடிய சாதாரணமான அலங்காரத்தைத் தெரிவு செய்துகொள்வது மிகவும் உசிதமானது.

**த.கம்சோ**

# அனுபவமே வழிகாட்டி

எம்மில் பலபேருக்கு பலதரப்பட்ட அனுபவங்கள் உண்டு. அப்படியான அனுபவங்களை வைத்தே தம் வாழ்க்கையில் தமது செயற்பாடுகளை நெறிப்படுத்தி வெற்றி பெற்றிருக்கிறார்கள். வெற்றியீட்டிக்கொண்டும் இருக்கிறார்கள். நாம் செய்யும் தொழிலாயினும் சரி. விளையாடும் விளையாட்டாயினும் சரி. பள்ளிப் படிப்பாயினும் சரி ஏதாவதொரு



அனுபவம் மூலமே நாம் எமக்கேற்றவாறு திட்டங்களை அமைத்துச் செயற்படுகின்றோம்.

பேசுவதென்றாலும் நாம் திடீரென மேடையில் ஏறி பேசிவிட முடியாது. அதற்கும் அனுபவங்கள் வேண்டும்.

பாடப்பாட இராகம்.

போடப்போட கணக்கு என்று சொல்வார்கள். அவ்வப்போது பேசிப் பேசிப் பழகினால்தான் சிறந்த மேடைப் பேச்சாளனாகமுடியும். அதேபோல கணக்குப் பாடத்தை போட்டுப் போட்டு பழகிக்கொண்டே இருந்தால்தான் கணக்கில் சித்தி பெறலாம். எதையும் நினைத்தவுடன் திறமையாகச் செய்ய முடியாது. நாம் பேசும் மொழியிலும் சரி சிறுவயதில் இருந்தே பேசிப்பேசி வந்ததாலே மொழியில் தேர்ச்சி உள்ளவர்களாக உள்ளோம். எடுத்த எடுப்பில் எதையும் செய்ய முடியாது என்பதே உண்மை.

நாள் கணக்கில் புத்தகங்கள் படிப்பார்கள். ஆனால் அது அன்றாட வாழ்க்கைக்கு உதவாது. ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது பின்னர் எதுதான் தேவை? அனுபவம் அது எல்லாத் தரப்பினருக்கும் தேவையானது.

“உழைப்பின் மூலதனம் அனுபவம்” என்கிறது ஆங்கிலப்பழமொழி ஒன்று. அத்துடன் முன்னேற நினைப்பவனுக்கு அனுபவம் ஒரு மாமருந்து. அல்லும் பகலும் அரும்பாடுபட்டு அதன் அனுபவத்தை வைத்தே முன்னேறுவதன் விளைவுகள்தான் பல்வேறு விஞ்ஞான கண்டுபிடிப்புகள் ஆகும்.

பேறறிஞர் அண்ணா அவர்கள் “அனுபவம் என்பது தேர்வு இல்லாத பாடம். கற்கும் போதே வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் கல்வி முறையாகும்” என்றார் ஆங்கிலத்தில் PRECEDRNT என்று உள்ளது. அனுபவத்தின் தொகுப்புகள் தான் அவைகள். எழுதி எழுதி தனது அனுபவத்தை வளர்த்தவர்கள் வரலாற்றையே மாற்றவில்லையா. இவையெல்லாம் அனுபவம் கொடுக்கும் அங்கீகாரம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வித அனுபவம் உண்டு. அதை நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும்.

நல்ல அனுபவத்தைத் திரட்டி பயன்படுத்தியவர்கள் அறிஞர்களானார்கள். சரித்திரம் போற்றும் சாதனையாளர்கள்.

டாக்டர் நல்லிகுப்புசாமிச்செட்டியார் தனது அனுபவத்தை வைத்தே “வெற்றியின் வரலாறு” என்ற நூலை எழுதியுள்ளார். அதில் அனுபவத்தை பற்றி நன்றாக விளக்கியுள்ளார்.

தேர்தலில் முதல்முறை தோற்றவர்கள் அடுத்தமுறை தம்மை அதற்கேற்றவாறு தயார்படுத்தி அடுத்த கட்டம் வெற்றி பெறுகிறார்கள். எமக்கு பல்வேறு அனுபவங்கள் இருந்தும் நாம் அதை அசட்டை செய்துவிட்டு இருப்பதுண்டு. ஆகவே நல்ல அனுபவங்களை கொண்டு நல்ல வாழ்க்கையை அமைக்க பயன்படுத்துவோம். தடை ஏதும் இருக்காது அப்படி இருந்தால் மனத்தடைதான்.

உடைத்தெறிவோம்!
முயற்சிசெய்வோம்!
வெற்றிபெறுவோம்!

**பா.கஸ்தூரி**

## ஓமப்பொடி

*தோவையான பொருட்கள்:-*

| | |
|---|---|
| கடலைமா | -1சுண்டு |
| கோதுமைமா (அவித்தது) | 1/2சுண்டு |
| ஓமத்தூள் | -2தே.க |
| மிளகு தூள் | -2தே.க |
| மஞ்சள் தூள், உப்பு | -அளவாக |
| செத்தல் மிளகாய்த்தூள் | -1மே.க |
| தே.எண்ணெய் | -1போத்தல் |
| கறிவேப்பிலை | -அளவாக |




*செய்முறை:-*

★மேலே கூறப்பட்ட மாவகையுடன் ஓமம், மிளகாய், மஞ்சள், உப்புப் பொடிகளைச் சேர்த்து கொதிநீர் விட்டு இறுக்கமாகக் குழைக்கவும்.

★சிறு துவாரமுள்ள முறுக்கு அச்சு உரலில் இட்டுக் கொதித்த எண்ணெயில் பிழிந்து பொன்னிறமாகப் பொரித்தெடுக்கவும்.

★கறிவேப்பிலையையும் பொரித்து அதனுடன் சேர்த்துக் கொள்ளவும்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்—56

பெயர்:..........................................
முகவரி:..........................................
..........................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# தொலைக்காட்சியும் சமுதாயச் சீரழிவுகளும் வன்முறைகளும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்ட மக்களின் துன்பத்தை வெளிக்காட்டப் பயன்படுத்துகின்ற சிறந்த கருவியாகும். மக்களுக்குக் கல்வியை வழங்கி மனித வளத்தை மேம்படுத்த உதவ வேண்டியது. மக்கள மன நிலை, திறமைகள், அறிவு, அனுபவம், அறியாமையை நீக்கல், நாட்டு வளர்ச்சியில் ஆர்வமூட்டல், நாட்டுக்கு உண்மையுள்ளவனாக இருத்தல், தன் தேசத்து மக்களுடன் அன்புடனும் இரக்கத்துடனும் பழகுதல், தேசிய நிகழ்வுகளில் மக்களைப் பங்கேற்கச் செய்தல், வெளிநாட்டுச் செய்திகள், நிகழ்ச்சிகள் போன்றவற்றை வளர்க்க உதவுகிறது. தொலைக்காட்சி திறமையாகவும், புத்திசாலித்தனமாகவும், மாற்றங்கள் சமூகத்துக்கு ஊறு விளைவிக்காத வகையிலும் தரவேண்டும்.


தென்னிந்தியச் சினிமாப் பிரதிகளின் தாராளமான இறக்குமதியால் மலிந்து கிடந்த பெரும்பாலான எம்மவர்களின் இரசனை உணர்வு, புதிய புதிய விடயங்களைத் தெரிந்துகொள்வதற்குப் பதிலாகத் தென்னிந்தியக் கலாசாரத்தை தெரிந்துகொள்வதோடு அடங்கிவிட்டது.

சிறுவர்களாகிய மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளைக் காட்டிலும் தொலைக்காட்சி நிகழ்வுகளிலேயே அதிக அக்கறைகொண்டுள்ளனர். தொலைக்காட்சி நிகழ்வுகளில் வரும் சண்டைகள் போன்று தாமும் அடிபாடுகளிலும், வன்முறைகளிலும் ஈடுபடுகின்றனர். சினிமாப் பாடல்களின் அர்த்தங்கள் புரிதலின்றி தம்மளவிலேயே அப்பாடல்களைப் பாடுவதில் மகிழ்ச்சியடைகின்றனர். விரசமான பாடல்கள், வன்முறைக் காட்சிகள், ஆபாசக் காட்சிகள் அம்மாணவர்களின் மனதில் எவ்விதமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதும் அனைவரும் அறிந்ததே.

இன்றைய மாணவர்களின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட படங்கள் உகந்தவையாக உள்ளன. அவ்வாறான தமிழர் வரலாற்றுப்படங்களோ, நம் மக்களின் கலாசார விழுமியங்களைப் போதிக்கும் எம் மக்களால் உருவமைக்கப்பட்ட தொகுப்புகளோ வளமூட்டக் கூடியவை. மாணவர்களின் கல்விச் சுற்றுலாவை உள்ளடக்கிய பிரதிகள் மூலமே அரை குறையாகக் கண்காட்சிகளைக் காண்கிறார்கள்.

மாணவர்களை சமூகச் செயல்களில் பங்கேற்கச் செய்யும் விதத்தில் சிறுவருக்குரிய நிகழ்வுகள் பயன்பாடுடையதாக அமையவேண்டும். சுற்றுப்புறச் சூழல், நல்வாழ்வு, அறிவியல் தொழில் நுட்பம், பொருளாதாரம், கலாசாரம், நாகரிகம், சமூகநீதி, கடின உழைப்பு, தேசப்பற்று, பன்னாட்டுச் செய்திகளை அறிதல், வேகமான முன்னேற்றத்திற்குப்பாடுபடல், செய்யும் தொழிலே தெய்வம் எனல் போன்றவற்றில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தொலைக்காட்சி நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். மாறாக சமுதாயச் சீரழிவை ஏற்படுத்தி வன்முறைக்குதவும், வன் முறையை ஆமோதிக்கும் எதிர்ப்புணர்வையும் ஏற்படுத்திவிடும் தொலைக்காட்சி நிகழ்வுகள் உகந்தவையல்ல.

ஒருவரின் மனமுதிர்ச்சிக்கேற்ற விதத்தில், சிறுவர், முதியவர் என்பவருக்கேற்ப நிகழ்வுகள் அமைக்கப்பட வேண்டும். மாறாக சிக்கலான சூழ்நிலைகளை தொலைக்காட்சிப் படங்கள் உருவாக்கி குற்றம் செய்வதற்கு காலாகின்றன. அவர்கள் திரைக்கதையில் வரும் பாத்திரங்களுடன் தம்மை ஒப்பிட்டுப் பார்த்து தங்கள் உணர்ச்சிகளைக் காட்டுகின்றார்கள். குற்றக்காட்சிகள் இளைஞர்களிடம் குற்றம்புரியும் ஆவலைத் தூண்டுகின்றன. அவர்கள் நடந்து கொள்ளும் விதங்களில் கேவலமான நடத்தைகளை பிரதிபலிக்கின்றன. கேவலமான எழுத்துக்களை எழுதுவதற்கு நிர்ப்பந்திக்கின்றன. நாக்கைத் தொங்கப்போடுவதான கீழ்த்தர ஆக்கங்களை சித்தரிக்கின்றது.



அருவருப்பான கோணங்களில் பிறரை இம்சைப்படுத்தவும் இவை துணைசெய்கின்றனவோ? கேள்வி விடையற்ற (நியாயம்) ஆக்கிரமிப்பாளர் பகுதிகள் வேலை செய்கின்றனவோ? யாரிடம் கேட்பது.

பெற்றோர்கள் தமது குழந்தைகளைப் பொறுப்பாக வளர்க்கலாம்.

பாடசாலைகளில் ஒழுங்கு, கட்டுப்பாடு, நீதி, போதனை போன்றவற்றைப் பயிற்றுவிக்கலாம். நமது கலாசாரத்தைப் பேணும்வகையில், எம்மவர்களால் படங்கள் தயாரிக்கப்படவேண்டும்.

மிகுதியான வன்முறை காட்சிகளும், ஆபாசமான ஆடை அணி அலங்காரமும், பாலியல் வன்முறைகளும் இடம்பெறுகின்றன. அப்படங்களில் குற்றவாளிகளின் சிறப்புத்தன்மை, குற்றம் செய்வதால் கிடைக்கும் இலாபம், அதன் கவர்ச்சி போன்றவை விரிவாகவும் விளக்கமாகவும் காணப்படுகின்றன. இதன் படியே இளைஞர்கள் கெடுதலான வழிகளுக்குச் செல்கின்றார்கள்.

விரசமான காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. திரைப்படப் போஸ்டர்கள், விளம்பரங்கள் கூட கவர்ச்சித் தலைப்புடன் வெளியிடப்படுகின்றன. தவறான உணர்வுகளுக்கு வழிகாட்டும் இவ்வாறான படங்களை, இவ்வாறான சமூகச் சீரழிவுக்கு வழி காட்டுபவற்றை தணிக்கை செய்பவர் யார்? இதன் காரணமாக அதிகமான பாலியல் குற்றங்கள் புரிகின்றார்கள். பாலியல் வக்கிரங்களைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள். இந்தத் தொலைக் காட்சியால் தமது கலாசாரமே போய் விட்டது என்று கூறப்படுகிறது.

சமுதாய வளர்ச்சிக்கு நல்ல சிந்தனைகளும் நல்ல வழிகாட்டிகளும் இன்றைய தேவை. அடுத்தவனை குறைத்து எடை போடுவதிலும், அநீதிக்கு குரல் கொடுப்பவனுக்கு பல்லுயிர்கள் இணைந்து பழிப்பட்டங்கள் சூட்டுவதும், நிமிர்ந்து கேட்காமல் பார்க்கும் விடயங்களை, கேட்கும் விடயங்களை வெள்ளைச் சாயத்தில் வெளிக்காட்டாமல் விடுவதும் நாகரிகமாகப் போய் விட்டவர்களிடையே புரிதலில்லாத ஒப்பந்தங்களுக்கப்பால் சமூக நீதியை, சமூகச் சீர்திருத்தத்தை எங்கே தேடுவது? ஆக்கிரமிப்பிற்கு மேலாக, இச்சமுதாய உயிரோட்டத்தையே கவிழ்த்து விடும் களைகளை யார் பிடுங்கி எறிவர்.

யாரில் பிழை காண்பது? எவரைத் தரம் குறைக்கலாம்? இவற்றினை மற்றோருக்கு அவையடக்கமாக கீழ்ப்படிவாகப் போதிக்கும் மட்டம் தட்டும் கைங்கரியங்களை விடுத்து சமூக நோக்குக் கருதிய சம காலத்திற்குதவிடும் வாசகங்களை எம்மெல்லோரையும் வளம்படுத்திவிடும் புகழ் வேண்டுமென்று அடம்பிடிப்பதில் பயனேது. புகழுக்காக பிறந்தேன் என்று கூறியவர்கள் இறந்தவர்களே. அன்பு, பாசம், இரக்கம், தேசப்பற்று போன்ற மனிதத்தை வளர்த்தெடுக்கும் உயர் விழுமியங்களை வளர்த்தெடுப்பதற்கு இத் தேசியத்தில் பிறந்தவர்கள் யாவருமே வழிகாட்டிகள், முன்மாதிரிகள். நல்ல காரணங்களை நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். நல்ல சிந்தனைகள் நல்ல சூழலை உருவாக்கும். நல்ல செயல்கள் நல்ல விழுமியங்களைத் தோற்றுவிக்கும். நல்லவை எப்பொழுதும் நல்லவற்றையே நல்கும்.

—மாதங்கி



## நவீன உலகில் அறிவு கொட்டிக்கிடக்கிறது

நவீன உலகில் அறிவு கொட்டிக்கிடக்கிறது. பல்துறை அறிவு பல்கிப்பெருகுகின்றன. ஏட்டிலும், பாட்டிலும் வலம்வந்த அறிவுப் புத்தகங்களுக்கு மாறி கணனியுகத்தில் புகுந்துள்ளது. ஒரு விடயத்தைக் கற்றல், சிந்தித்தல், தெளிதல் என்பதனூடாக அறிவைத் தனதாக்கி அதனூடாக தனது வாழ்வை, சிந்தனை உலகத்தை ஆக்கிக்கொள்வதே பகுத்தறிவு படைத்த மனித வாழ்வின் பயன். இச் செயற்பாட்டினைத் தொடர்வதற்கு மாணவ நிலை அறிவை அளிப்பது ஒரு பொருட்துறை பற்றிய அறிவை அடிப்படையாகக்கொண்ட புத்தகங்களும் எமது முதியோர்களும் ஆவர்.

எமது பண்பாட்டின் மொழி, சமயம் வாழ்வியல் சம்பந்தமான தகவல்களை அடுத்த சந்ததிக்குக் கொடுப்பதற்கு ஒரு மனிதன் சமூகத்துடன் ஒட்டி வாழப் பழகிக்கொள்வதற்கும் வேண்டிய அறிவை அளிப்பது புத்தகங்களே.

அறிவை அளிக்கும் புத்தகங்களை சேர்த்துவைக்குமிடம் நூலகங்களாகும். கல்வி நிறுவனங்களில் நூலகங்கள் வளர்ந்துவருவது அங்கு கல்வி பயில்வோர் வளர்வதற்குச் சமமானதாகும். ஒவ்வொரு நாட்டிலும் கல்வி நிறுவனங்கள் தோற்றம்பெற்ற காலம் முதலாக அவற்றுடன் இணைந்தனவாக நூலகங்களும் வளர்ச்சிபெற்று வந்துள்ளன. கல்வி நிறுவன நூலகங்கள் இன்று நவீன முறையில் வளர்ச்சியடைந்துள்ளன. நூலகங்களில் நூல்கள் மட்டுமல்லாமல் நூலுருவற்ற சாதனங்கள் (CD, கணனி, T.V) எழுத்துச்சுவடிகள் என்பனவும் காணப்படுகின்றன.

கல்வி நிறுவன நூலகங்களில் பாடசாலை நூலகங்கள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. வளர்ந்துவரும் நவீன விஞ்ஞான தொழில் நுட்ப யுகத்துடன் மாணவர்கள் போட்டிபோட வேண்டிய தேவை பெருகிக்கொண்டிருக்கையில் அதற்கு சவாலாக மாணவர்கள் கல்வி அறிவை தேடிக்கற்க வேண்டிய நிலையில் நூலகங்கள் முக்கிய இடத்தினைப் பிடித்துள்ளன.

இச் சவால்களுக்கு மாணவர்கள் முகம் கொடுக்க நேரிடும்போது எம் பிரதேசப் பாடசாலை நூலகங்களில் வளம் வற்றியே காணப்படுகின்றது.

இந்நிலையை மாற்றியமைக்கும் நோக்கோடு அநேக பாடசாலைகள் சமூகத்துடன் தொடர்பு கொண்டு நூலகங்களை உயிர்ப்பூட்ட நினைக்கின்றனர். அதற்காக வீதிகளில் இறங்கி வர்த்தக நிலையங்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், செல்வந்தர்களை நாடி நூல் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு தமது அறிவுத் தேடலை பெற்றுக்கொள்ள முயல்கின்றனர்.

இச் செயற்பாடுகளின்போது ஏற்படும் அனுபவங்கள் மனச்சோர்வை ஏற்படுத்துவனவாகக்கூட அமைகின்றன. நிறுவனங்களில் சென்று நூல்சேர்க்கும்போது அங்கு 25/=, 50/=, 100/=, 500/= எனப் பணம் அன்பளிப்புச் செய்கின்றார்கள். சில நிறுவனங்கள் நூல்களை அன்பளிப்புச் செய்கின்றன. இருந்தபோதும் அவர்கள் ஆடம்பரத் தேவைக்காகச் செலவு செய்யும் தொகையுடன் ஒப்பிடும்போது தம் பிள்ளைகளின் கல்விக்காக தமது சமூகத்தின் முன்னேற்றத்திற்காக எதிர்கால சந்ததியினருக்காக அவர்களின் பங்களிப்பு நூற்றுக்கு ஒரு வீதமாகவே உள்ளது.

விளம்பர யுகத்தில் ஆடம்பரத் தடாகத்தில் நீந்திக்கொண்டிருக்கும் எம் சமூகம் கொஞ்சம் விழிப்பாக இருக்கவேண்டும். எமது சமூகத்தை எப்படி முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வது என சிந்திப்பவர்கள் தோன்றுமட்டும் எம் பிரதேசங்கள் வளர்ச்சிபெறமுடியாது. சமய, சமூக விழாக்களின்போது இலட்சக்கணக்கில் செலவுசெய்து இசைக்குழு பிடித்து தமது விழாக்களை விளம்பரம் செய்கின்றவர்களும் இருக்கின்றார்கள். ஆடம்பரச் செலவுக்காக செலவுசெய்யும் பணத்தைக்கொண்டு கோயிலையோ, அல்லது சமூக நிறுவனங்களையோ வளர்க்க முன் வருவதற்கு பின் நிற்கிறார்கள் இவர்கள். பலகாரம் பொரியும் சத்தம் மட்டும் போதும் பலகாரம் என்ன நிலையில் இருந்தால் என்ன? என சிந்திப்பவர்கள்.

இவர்கள் சமூக உணர்வுகொண்டவர்களாக மாற்றமடைய எம் இளம் சமுதாயத்தினரை அறிவுகொண்ட மாந்தராக மாற்றியமைக்க சமூக உணர்வாளர்கள் தோன்ற வேண்டும். சாத்தியப்படுமா?

அகவிழி

# எங்கட இருளெல்லாம் விலகிடும்—
# உறுதியாயும் உண்மையாயும் இருங்கோ!

வணக்கம் வணக்கம் எல்லாருக்கும்! அப்பட கனகாலத்துக்குப் பிறகு இப்பிடி என்ரை குந்தில இருக்கிறதிலையே ஒரு தனி சந்தோசம்தான். நாட்டு நிலைமையும் ஏதோ போகுது. JM போய் இப்ப P-TOM வந்திட்டிது.

முன்னதானிலை Join எண்ட சொல் இருந்ததெல்லோ! தமிழரோட சிங்களவர் என்னண்டு ஜொயினிறது? பேரினவாதம் அதை அனுமதிக்காது. அதாலதான் மாத்தி இப்ப புதுசாய் ஒண்டு. அதிலையும் பாருங்கோ நாரதர் இந்தியா அதிகாரப்பங்கீடு எண்டு ஏதாவது கையெழுத்திடிறதெண்டால் டக்ளஸ் தாடி, ஹிட்லர் மீசை சங்கரி எண்டு அதுஇது எல்லாத்தையும் சமமாய் அங்கீகரிச்சுத்தான் நடைமுறைப்படுத் தோணும். அதுதான் ஜனநாயகம் எண்டு சொல்லுது.

ஆனாலும், கிட்டடியில காஷ்மீர் மக்கள் தரப்பில இருந்து பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த சில பிரமுகர்களை அங்கை பாகிஸ்தான் அரசு அனுமதிச்சது, இந்தியாவுக்கு எதிரான செயலெண்டு பிரதமரிலை இருந்து எல்லாரும் துள்ளிக்குதிச்சினம். எனக்கென்னவோ உந்த சனநாயகம் எண்டால் என்னண்டு ஒரு அறுப்பும் விளங்கிதில்லை. இந்தியாவைப் புரட்டிப் பார்த்ததிலை மக்களுக்கெதிராய் மல்லுக்கட்டிக்கொண்டு நிற்கிறதுதான் சனநாயகம் ஆக்கும் எண்டு நான் நினைக்கிறன்.

சரி அதுகளை இப்ப விடுவம்.

நான் இல்லாத காலத்தில இஞ்சால் பக்கம் என்னென்ன நடந்ததெண்டு விசாரிச்சு அறிஞ்சு கொண்டன். போன மாசம் எங்கட அயலில இருக்கிற மாஸ்ரரின்ரை சின்னவளுக்கு கல்யாணம் முடிஞ்சிதாம். எட நல்லாய் A/L படிச்சுக் கொண்டிருந்த பிள்ளை. எப்பிடியும் யூனிவசிற்றிக்கு போவாள் எண்டுபார்த்தால், இடையில குழப்பியடிச்சுக் கொண்டு காதல், கல்யாணம் எண்டு போயிட்டிது. எட தாய், தகப்பனுக்குத்தான் பயமெண்டால் என்னட்டை சொல்லியிருக்கலாமெல்லே! நான் பெத்ததுகளிட்டை பக்குவமாய் எடுத்துச்சொல்லியிருப்பன் தானே. சரி எங்கையிருந்தாலும் சந்தோசமாய் இருந்தால் சரி. இந்தப் படிப்புகளை இடையில விட்டதுதான் எனக்கு மனவருத்தம்.

அண்டைக்கும் பத்திரிகையில பார்த்தன், வெள்ளைக்கார ஆச்சி ஒருறாள் 80 வயசில மேல படிச்சு 'டொக்டர்' பட்டம் எடுத்திருக்கிறா. எங்கட பொம்பிளையள் M.C. எண்டு emancipation பற்றிக் கதைச்சாலும் கலியாணம் முடிஞ்சாப்பிறகு வீடே உலகம் எண்டு கனபேர் முடங்கிடுகினம். நான் எல்லாரையும் சொல்லேல்லை. சிலபேர் என்னை விட கனவயசு மூப்பாய் இருந்தாலும், ஓயாமல் காரசாரமாய் நல்ல பொறுப்பு வாய்ஞ்ச விசயங்களை எழுதிக் கொண்டு வருகினம். ஆனாலும், அந்த மூர்க்கம் என்னவோ இப்பத்தே இளசுகளுக்கு வருகுதில்லை எண்டிறது தான் எனக்கு விளங்கேல்லை. எவ்வளவு காலத்துக்குத்தான் இப்பிடி எங்களைப்போல வயசுபோனதுகளே எழுதிக்கொண்டிருக்கிறது? ஆ..!

அதுதான் பாருங்கோ, ஒருக்கால் மாஸ்ரர் வீட்டுப்பக்கம் போய் பத்தையும், பலதையும் கதைச்சுக்கொண்டிருக்கேக்கிளை தான் அந்தாள் சொல்லிச்சிது. 'ஏர்! இனி பொறுப்பெண்டு எனக்கொண்டும் இல்லை. மூத்தவனும் எப்பை பார்த்தாலும் வெளியால வந்து தன்னோட இருக்கச்சொல்லிக் கேட்டுக்கொண்டிருக்கிறான்.

இஞ்சையும் ஒண்டும் நிலைமை சீராகிறதாய் தெரியேல்லை. ஐரோப்பாவில நாடுகள் சேர்ந்துகொண்டிருக்க, எங்களைச் சிங்களவன் சேர்ந்திருக்கவும் விடுறா னில்லை, பிரிஞ்சு போகவும் விடுறானில்லை. நான் நீர்வெளியில நிண்டுகொண்டு எழுதினதுகளைத் தொடர்ந்து வாசிச்சனான். அவங்கள் வெள்ளைக் காரங்கள் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறாங்கள். இது நாங்கள் இஞ்சை... சே! இனியும் எங்கட சனங்கள் மாறும், முன்னேறும் எண்ட நம்பிக்கை எனக்கில்லைப் பாருங்கோ! அதுதான் இருக்கிற வீடு, காணியளின்ரை உறுதியளை அவை யவையின்ரை பேரிலை முடிச்சிட்டு வெளி நாட்டுக்குப் போவோம் எண்டிருக்கிறன்'.

எனக்கு பேய் விசராய் போயிட்டிது. 'என்ன மாஸ்ரர்! நீங்களே உப்பிடி பொறுப்பில்லாமல் கதைச்சால்... மற்றவங்களால முன்னேற முடிஞ்சிருக்கிதெண்டால், ஏன் எங்களால முடியக்கூடாதெண்டு நினைக்கிறதை விட்டிட்டு இப்பிடி அலுத்துக் கொள்ளிறீயள். நாலு பிள்ளையளுக்கு படிப்புச்சொல்லிக் குடுக்கிற நீங்களே உப்பிடி வைராக்கியம் இல்லாமல் கதைச்சால், எங்கட நாடு என்னண்டாம் உருப்படிறது!

சனங்கள் திருந்தப் போறேல்லை எண்டு சொல்லிக் கொண்டு உப்பிடி வெற்றுச்சித்தாந்தம் கதைக்கிற நீங்கள்தான் உண்மையிலையே பிழை விடிறீங்கள். சொல்லிறன் எண்டு குறை நினைக்கப்படாது. இதுவரைக்கும் எத்தினை பிள்ளையளுக்குப் படிப்பிச்சிருப்பியள்? தங்கட அறிவுத் தேவையைப் பூர்த்தி செய்யிறதுக்காக எத்தினை பிள்ளையள் உங்களுக்கு முன்னால ஒவ்வொரு வகுப்பிலையும் வந்து இருந்திருப்பினம். அவையளுக்கூடாக எங்கட சமூகத்துக்குத் தேவையான எத்தினை விசயங்களை நீங்கள் சொல்லிக்குடுத்திருக்கலாம்.

அதைச் செய்யிறதில இன்னும் கொஞ்சம் கூட ஈடுபாட்டைக் காட்டத்தவறின உங்களில எல்லோ பிழை இருக்கிது. பெரிசாய் அவங்கள் முன்னேறியிருக்கிறாங்கள், மூளைசாலி யள் எண்டு வாய்க்குவாய் புகழிறம். அப்ப நாங்களெல்லாரும் முழுமுட்டாள் எண்டே அர்த்தம் ? திரும்ப மன்னிக் கோணும். ஆனால், முன்னேற்றங் களைப் பார்த்து நாங்கள் வாயைப் பிளக்கிற அளவுக்கு, அந்த வழியளைப் படிச்சறிஞ்சு பின்பற்றப் பார்க்கிறேல் லை. வளர்ச்சியடைஞ்ச நாடுகளில 65 வயசுக்குப்பிறகுதான் பென்சன். அதுவும் இப்பை ஆம்பிளையளுக்கு 70 வயசு ஆக்கப்போயினமாம்.

யப்பானில வயசுபோன ஆக்களுக்க வேலைநேரம் குறையுமே தவிர, ஒரேயடியாய் வீட்டோட ஒதுங்கிற ஓய்வெண்டு ஒருத்தருக்கும் இல்லை. எங்களை விடுங்கோ! அம்மா பேசுவா எண்டிட்டு பள்ளிக்கூடம் போன ஆள் நான், ஆனால் நீங்கள் படிச்சனீங்கள்! 55 வயசோட வீட்டோட அடைஞ்சிட்டியள். நீங்கள் வாழிற இந்த சமூதாயத்தின்ரை தேவையளை இனங் கண்டு, அதுகளிலை ஏன் உங்களை அர்ப்பணிப்போட ஈடுபடுத்திக்கொள்ளக் கூடாது எண்டு நான் கேட்கிறன்.

ஆசிரியர்மார், எழுத்தாளர் மார், ஊடகக்காரர் எண்டு சமூகத்தில பெரியதொரு வட்டத்தைக் கொண்டிருக்கிற உங்களை மாதிரி ஆக்கள் நினைச்சால் எத்தினை நல்ல காரியங்களை ஆற்றலாம். தொட்டதுக்கும் இயக்கம் செய்யட்டும், நோர்வே செய்யட்டும், யப்பான் செய்யட்டும் எண்டிராமல் எங்கட வாசலில இருக்கிற குன்றுகுழியளை நாங்கள் தானே நிரப்ப முன்வரோணும். அதைவிட்டிட்டு குந்தியிருந்து கொட்டாவி விட்டுக்கொண்டு, என்னண்டு சனங்களைக் குறை சொல்லலாம்.

நாங்கள் நாங்கள் எங்களை மாற்றிக்கொண்டு உறுதியாய் இருப்போம் எண்டால் சமுதாய மாற்றமும், வளர்ச்சியும் கட்டாயம் தன்ரபாட்டில வரும். மற்ற மாஸ்ரர்! எல்லா நாடுகளும் சேர்ந்துகொண்டுவர்ற இந்தக் காலத்திலை தமிழருக்கு மட்டும் தனிநாடு வேணுமெண்டு கேட்கிற தெண்டு ஒருமாதிரி இழுத்தனீங்கள். உதேகதையை புத்திஜீவியள் எண்டு தங்களை நினைச்சுக்கொள்ளிற சில ஆக்களும் இடைக்கிடை சொல்லிறவை.

ஐரோப்பியக்கூட்டமைப்பு எண்டு இண்டைக்கு நீங்கள் கோடிட்டுக்காட்டிறது இன்னும் பொருளாதாரத்துக்கான ஒரு இணைப்பாய்த் தான் இருந்து வருகிது. இந்தளவுக்கும் அது இண்டைக்கு, நேற்றுத் தொடங்கேல்லை. 1957ஆம் ஆண்டே 'பொருளாதாரத்துக்கான ஐரோப்பியக் கூட்டமைப்பு' எண்ட பேரிலை தொடங்கி 1993இல EU ஆனது. அதில பெரிய பிரான்ஸ் நாட்டுக்கு இருக்கிற அதேயளவு அதிகாரம் தான் சின்ன லக்ஸம்பேர்க்கிற்கும் இருக்கிது.

இஞ்சை நாங்கள் மூச்சு விடிறதே சிங்கள இனவாதத்துக்குச் சகிக்காது. அதுக்கு மசிஞ்சு போறது வேற, கௌரவமாய் அதிகாரங்களைப் பங்கிடிறது வேற. பனிப்போர்க்காலத்தில EU அமையிறது அமெரிக்காவுக்குப் பிரச்சினையில்லாமல் இருந்திருக்கலாம்.

ஆனால் இப்ப ரொனி பிளேயர் மூலம் வரவுசெலவுத்திட்ட விசயத்தில கிச்சுக்கிச்சு மூட்டத் தொடங்கியாச்சு. ஏற்கெனவே பொதுவான சட்டவாக்கம் குறிச்ச வாக்கெடுப்பில கிடைச்ச எதிர்ப்பால உண்மையான கூட்டமைப்பை விரும்பிற ஆக்கள் நொந்து போயிருக்கிற நேரத்தில பிளேயர் வேற 'பிளே' பண்ணிறார்.

ஜேர்மன் பிரதமர் சாடைமாடையாய் 'குறுகிய சுயநலவாதத்துக்சாகவும், தனிப்பட்ட பிரபல்யத்துக்காகவும் இடைஞ்சல் குடுக்கிற சிலர்' எண்டு விமர்சிச்சிருக்கிறார். நல்லதொரு முயற்சி அந்தக் கூட்டமைப்பு எண்டாலும், சும்மா மேலோட்டமாய் பார்த்திட்டு ஒடுக்குமுறைக்குள்ளாகிற மக்களின்ரை உரிமைப் போராட்டத்தை அதை வைச்சு விமர்சிக்கக் கூடாது.

சரி அதுகளைத்தான் விட்டுத்தள்ளுங்கோ! மேலைநாடுகளின்ரை ஆதரவில கடந்த 15 வருசத்தில எப்பிடியும் 20 நாடுகளுக்குக் கிட்ட சுதந்திரம் அடைஞ்சிருக்கு! எங்களுக்கும் அந்த உரிமையும், அவசியமும் இருக்கிது!'.

'ஓமோம் ஏரம்பர்! நீர் சொல்லிறதிலையும் உண்மை இருக்கிது. ஆனாலும், இந்த வயசிலை நான் என்னத்தைச் செய்யிறது? ஆ. . இல்லை என்னால என்ன முடியுமெண்டு நினைக்கிறீர்?'. 'மாஸ்ரர்! நீங்கள் வாழிற சுற்றத்தை நேசத்தோட பாருங்கோ! எத்தினையோ தேவையள் இருக்கிது. உங்களால முடிஞ்ச உங்கட பங்கை நீங்கள் நிச்சயம் இனங்காணுவியள்.

உங்களுக்கொண்டு சொல்லோணும்: நான் வெளியால நிற்கேக்கிளை பார்த்தனான். ஏதாவது வருத்தம், துன்பம் எண்டால் அம்புலன்சுக்கு அறிவிச்சு சொல்லி வைச்ச மாதிரி 10-15 நிமிசத்துக்குள்ளை அம்புலன்ஸ்- வாகனம் வந்து நிற்கும். எங்கட நாட்டிலையும் அப்பிடி வசதி இருந்திருந்தால் எத்தினை உயிர்களைக் காப்பாற்றி இருக்கலாம் எண்டு ஏங்கிறனான். ஆனால் அப்பிடி ஏலாமல் இருக்கிறதுக்கு நாங்கள் தானே காரணம். குடிச்சுப்போட்டு நடுவீதியில திரியிறது, தார்வீதியில பிளேன் மாதிரி பறக்கிறது.

மொத்தத்தில போக்குவரத்து விதியளை மதிச்சு காவல்துறைக்கு ஒத்துழையாத நாங்கள் ஒவ்வொருவரும் தானே காரணம்.

நாங்கள் உறுதியாய் நிண்டு உழைச்சால் எங்கட நாடு கட்டாயம் உருப்படும். அப்ப அதின்ரை பயனை உங்கட பேரப்பிள்ளையள் நன்றியோட அனுபவிப்பினம்'. மாஸ்ரர் என்ரை தோளிலை கையை வைச்சு இறுக்கி அழுத்தினார்.

'இப்பிடி மனம் விட்டுக் கதைச்சது மனசுக்குப் பலமாயிருக் கிது. என்ரை கிழட்டு வயசு எனக்கு இப்ப பலவீனமாய் தெரியேல்லை. இன்னும் இருக்கிற நாளிலை என்னால எத்தினையோ நல்ல விசயங்களைச் செய்யமுடியும். இந்தக் கட்டை என்ரை நாட்டில தான் வேகோணும்.', அவற்றை கண்ணில சந்தோசக்கண்ணீர் கசிந்தது.

முகத்திலை புது நம்பிக்கை ஒளி தெரிஞ்சிது. வீட்டுச்சுவரிலை மாட்டப்பட்டிருந்த நாட்காட்டியில தலைவரின்ரை சிரிச்ச முகத்திலை தெரிஞ்ச வெளிச்சம் மனசுக்குத் தெம்பாயிருந்திது. ஓமோம்! அந்த வெளிச்சத்தில நிச்சயமாய் எங்கட இருளெல்லாம் விலகிடும். எல்லாரும் உறுதியாயும், உண்மையாயும் இருங்கோ! அடுத்தமுறை சந்திப்பம்.



உலா 41

## ஏ9 – ஏரம்பு

# அந்த நாள் எப்போது

நீர்த்து விட்ட
சாம்பல் மேட்டுக்குள்
என் எல்லாமும் தீர்ந்துவிட்டது.
அடையாளங்கள்
ஆவணங்கள்
முகவரிகள்
பட்டங்கள் பதவிகள்
எல்லாமும் முடக்கப்பட்டு விட்டன.

எரி தணலுக்குள் வீசியே
தீய்ந்து போனவரெனவும்
எழவே முடியாதவரெனவும்
பட்டியலிடப்பட்டவர்களுள்
நானும் ஒருவனாய்
இன்னமும் வாழ்கிறேன்.

உயிர் மூச்சைமட்டும்
உள்வாங்கி
உயிர்தாங்கும் ஒட்டிய உடலுடன்
எதையும் ரசிக்க மனமற்றவனாய்
விடுதலை நாளை மட்டுமெண்ணி
இருளுக்குள் ஒளி தேடியே
நாளும் கரைகிறேன்.

எனக்கான இல்லிடத்தையும்
எமக்கான முகவரியையும்
அடையத் துடிக்கின்றேன்.
கோரம் தாங்கிய மனிதங்களோ
இன்னும் எம்மேனி மீதல்லவா
சித்திரவதைச் சித்திரம் பொறித்து
மகிழ்கின்றார்கள்.

நாளும் இன்னல் சுமக்கிறோம்.
முடி சுமந்த தலைகளில்
முள் முடி தரிக்கப்படுகின்றன.
நிலை குத்திய தலைகள்
நிமிர மறுக்கின்றன.
நாக்கில் நெருப்பேந்திய
மனிதர்களின் வார்த்தைகள்
நாளுமெம்மை சுடுகின்றன.

மனித மாமிசம்
சுவைக்கத் துடிக்கும் மிருகங்களிடையே
"இருள் சுவைக்கும்"
மனிதர்களுள் நானுமொருவனாய்.
எப்போது தான் நான்
ஒளியைக் காண்பது.
என் ஊரைத் தழுவியே வரும்
இதமான அந்தக் காற்று .

என்தேகம் தழுவும் நாளெப்போது?
நாற்றத்தை சுவாசித்து சுவாசித்து
செத்துப்போன என்நாசிகளில்
எப்போது சுதந்திரக்காற்றை சுவாசிப்பது?
ராஜகோபுரம் தாண்டியே
காண்டிபக் குரலாய் வரும்
என் "முதல்வன்" ஓசை
என் செவிப்பறை சேரும் நாளெப்போது?
அதுவரை நான் சாகக்கூடாது
அதற்காகவே என்மூச்சை
பிரிந்துவிடாமல் காத்து நிற்கிறேன்.
காலம் கரையும் நாளையெண்ணி
கனவு பலிக்குமெனும்
நம்பிக்கையில் நானிருக்கிறேன்.

அ.அன்ரனி

# இலக்கியப்பகிர்வு



சிறு பத்திரிகையின் வரலாறு என்பது தமிழ் பத்திரிகை உலகில் நம்பர் "வண்" என மகுடமிட்டு வீரக்கதைகள் கதைக்கும் விடயம் அல்ல.

இரவுத் திருவிழா பார்க்க பௌடர் பூசி சிங்காரமாக அலங்கரித்து புறப்பட்டு பாதி இரவில் படுத்துறங்கும் சிறுபிள்ளை போல பல்வேறு சிறு பத்திரிகைகள் தொடங்கி, சரிந்து அழிந்து போன தடங்கள் பல எம் மண்ணில் உண்டு.

எனினும் பல விடாக்கண்டர்கள் தொடர்ந்தும் சிறு சஞ்சிகை முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. அவ்வாறான அவர்களது விடாமுயற்சியின் காரணமாக அற்ப ஆயுளில் மறைந்தாலும் பல நல்ல சிற்றேடுகளும் அவற்றின் படைப்புக்களும் இன்றும் பலராலும்



## புதிய தரிசனம்

பேசப்பட்டே வருகின்றன.

எனினும் சிலர் இத்தகைய சிறு பத்திரிகைகளை அல்லது சிறு வெளியீடுகளை தமது மன அரிப்புக்களைத் தீர்த்துக்கொள்வதற்காகப் பயன்படுத்தி வருவதையும் நா[illegible] அவதானிக்கலாம். என்றாலும் [illegible] இவ்வாறான ஏற்றத்தாழ்வுகளுக்கு அப்பால் சிறு பத்திரி[illegible]கில் வரவும்,வளர்ச்சியும் காணப்படுகின்றன.

"ஒவ்வொரு சிறு பத்திரிகையின் முதலாவது இதழ் வெளியிடுகின்ற அறிவிப்பு எவ்வளவு நம்பிக்கையை, எவ்வளவு ஆசைக் கனவுகளை, எதிர்பார்ப்புக்களை எல்லாம் முழக்கமிடுகிறது. ஆனால் அவை பொய்த்துப் போகும்படி காலம் விளையாடி விடுகிறது. தன்னம்பிக்கையோடும், உற்சாகத்தோடும் உழைக்க முனைந்தவர்களின் செயற்பாடுகள் பலவும் மறதிப் பாழில் மங்கிப்போகின்றன.

அது நியாயமில்லை. ஏதோ ஒரு உத்வேகத்தில் பணிபுரியத் துணிந்தவர்களின் சோதனைகள், சாதனைகள் குறித்து அவர்களுக்குப் பின் வருகிறவர்கள் அதே பாதையில் நடைபோட வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்" என்று தமிழில் சிறு பத்திரிகைகள் என்ற நூலில் வல்லிக்கண்ணன் அவர்கள் குறிப்பிடுகிறார்.

"இதற்கு இலக்கிய வீதியின் வழி பயணிக்கும் ஆரம்பப் பயணிகளாகிய நாம் உங்கள் கரங்களில் ஐந்தாவது இதழை ஆண்டு மலராய்ச் சேர்ப்பிக்கிறோம்" என்ற ஆசிரியரின் கருத்துடன் "புதியதரிசனம் மே, யூன் 2005" இதழ் வெளியாகியுள்ளது.

"தோற்பன தொடரேல்" என்று ஔவையார் கூறினாலும் எமது இப்பயணத்தில் சில தோல்விகளும் இடையூறுகளும் தழுவினாலும் அவற்றை விலக்கி வீறு கொள்கிறது எமது பயணம். இடைவெளிகள் இருப்பினும் எமது இதழின் இருப்பைத் தக்க வைத்தே தீருவோம்" என மேலும் ஆசிரியர் கூறுகிறார்.

இந்த நம்பிக்கையும், உணர்வும் மிகவும் அவசியமானது.

அந்த வகையில் புதிய தரிசனம் தொடர்ந்து தன் செயற்பாட்டினை விரித்து இலக்கிய வான்வெளியில் பறக்க இலக்கிய ஆர்வலர்கள் உதவவேண்டியது அவசியம்.

சி.கதிர்காமநாதன், தாட்சாயினி ஞானரதன், வனஜா நடராஜா ஆகியோர் எழுதிய சிறுகதைகளும் கலாநிதி செ.யோகராசா, பேராசிரியர் செ.கிஸ்ணராஜா, கலாநிதி இ.முருகையன் போன்றோரின் கட்டுரைகளும் , துவாரகன் குறிஞ்சி, இளந்தென்றல் கி.அ.தில்லைதாசன், க.சாரங்கன், கு.வினோதரன், சண்முகன், இளங்கோ முதலியோர் எழுதிய கவிதைகளும் இந்த மலரில் உள்ளன.

இது தவிர சமீபகாலமாக இலக்கிய உலகம் பறிகொடுத்த புலோலியூர் க. சதாசிவம், ஏ.பி.வி. லேமன், மருதூர்கனி, தில்லைச்சிவா, புத்தொனி ந.சிவபாதம், கே.வி நடராஜன் , சொக்கன் போன்ற படைப்பாளிகள் தொடர்பான அஞ்சலிக் குறிப்புக்களும் மலரில் பிரசுரமாகியுள்ளன. அத்துடன் அ.குணேஸ்வரன் அவர்களின் "காலம் ஆகிவந்த கதை" தொடர்பான அறிமுகக் குறிப்பும் கூட இணைக்கப்பட்டுள்ளது.

இந்த மலரின் பிரதான அம்சமும் சிறப்பான விடயமும் ஓவியர் கோ.கைலாசநாதன் அவர்களின் நேர்காணல் ஆகும். மலரின் அட்டை ஓவியம் கூட கோ.கைலாசநாதன் அவர்களால் வரையப்பட்டிருந்தாலும் கூட அட்டையின் அமைப்பும் அச்சும் அவருடைய ஓவியத்துக்கு உயிர்ப்பையும் சிறப்பையும் கொடுக்கவில்லை என்பது இங்கு வருத்தத்திற்குரிய விடயமாகும்.

இனி நேர்காணலுக்கு வருவோம். ஈழத்தில் அகவெளிப்பாட்டாளர்களில் கோ.கைலாசநாதன் முக்கியமானவர். "ஒரு தனித்துவமான அக வெளிப்பாட்டு வெளியில் இவர் தொடர்ந்தியங்கி வருவது கவனத்திற்குரிய[illegible]" எனக் குறிப்பிடும் நேர்காணலைச் [illegible]சய்தவர்,

"ஈழத்தின் முக்கியமான அகவெளிப்பாட்டாளன் என்ற அடிப்படையிற் கேட்கிறேன், அகவெளிப்பாட்டுக்கு முறையான பயிற்றுவித்தல் அவசியமானதா?" எனக் கேள்வி கேட்கிறார்.

இதற்கு கோ.கைலாசநாதன் அவர்கள் கூறும் பதில் மிகவும் சிறப்பானது. கைலாசநாதன் அவர்கள் கூறுகின்றார்.

"பயிற்சி காரணமாகத் 'திறன்' வருகிறது. ஆனால் பயிற்சி காரணமாக 'கலை' என்பது வருமென்று கூறமுடியாது. வெறும் பயிற்சி மட்டும் இருந்து விட்டால் நல்ல படைப்புக்களைப் படைக்கலாம் எனக் கூறமுடியாது. படைப்பாற்றலுக்கும் படைப்புக்களைப் புரிந்துகொள்வதற்கும் மூன்றாவது கண் என்பது அவசியமாகின்றது. நாள் முழுவதும் தாமரைமலர் மேல் தவளை இருந்தாலும் அம்மலரின் அழகையும் அதில் இருக்கும் தேனையும் அதனால் நுகர்ந்து கொள்ள முடியாது. ஆனால் எங்கிருந்தோ வரும் தேனீ இரண்டையும் நுகர்ந்துகொள்வதுடன் பறந்து விடுகின்றது. முறையான பயிற்சி அல்லது பயிற்றுவித்தல் என்பது ஒரு எல்லையுடன் நின்று விடக்கூடியது. தரிசனப் புலத்துக்குள் இவை பெருஞ் செல்வாக்குச் செலுத்தா" என்கிறார்.

புதிய தரிசனம் பகுதியில் பிரசுரமான ஒரு வாசகர் கடிதமும் கருத்தைக் கவருகின்றது. கிளிநொச்சியைச் சேர்ந்த த. சீர்மாறன் என்பவர் எழுதிய கடிதம் அது. அக்கடிதம் பின்வருமாறு அமைகிறது.

தங்களின் புதிய தரிசனம் இதழ் பார்த்தேன். ஏனைய மூன்று இதழ்களைவிட இவ் இதழ் நேர்த்தி. கவிதைகளில் உயிர்ப்பில்லை. சிறுகதை "மூடுபெட்டி"யில் வீடு பாவனை வீடாகக் காட்டப்படுகிறது. சிலந்தி இல்லை. கறையான் இல்லை.வினோ வருவான் என்றும் சொல்லப்படுகிறது. பின் பிரேதமிருப்பதாகவும் அதை மறைப்பதற்கு ஏதோ அச்சத்தில் அடுக்கியிருந்த புத்தகங்கள், சஞ்சிகைகளைக் கொண்டு பிரேதத்தை மூடி ஊதுவர்த்தி கொளுத்தல் ஆனது பாழடைந்த அல்லது இடிந்த வீடாகச் சித்தரிக்கப்படுகிறது. இந்திரனின் நூதனச்சிறுகதைகளிலும் தெளிவிருக்கிறது. மனதில் எழுந்த விடயங்கள் எல்லாம் சிறுகதைகள் அல்ல. மையம் நோக்கிய குவிவுமல்ல சிறுகதை.

தாட்சாயினியின் " ஒரு உரலின் வெட்டு முகம்" கதையிலும் "முடக்கு" என்றும் இடம், ஆட்கள் நடமாடும் இடம் (நடமாடாத இடம் எனக் காட்டப்படவில்லை) தெருவுக்கருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு மிக அருகுப் பற்றையில் சிறுமி மீது பாலியல் வன்புணர்வில் ஒருவன் ஈடுபடுவதாகச் சொல்லப்படுகிறது. யதார்த்தமா? சிலவேளை அந்த இளைஞன் புத்தி சுவாதீனமற்றவன் எனச் சொல்லியிருந்தால் சாத்தியமாகும் "போடா வெளியில்" எனும் வார்த்தைகளை வைத்துக்கொண்டு செய்யப்பட்ட கதை போலத் தெரிகிறது. சிறுகதை என்பது புரிவதல்ல விளக்குவது. இந்தப் பலவீனம் தாட்சாயினி ராகவன் போன்றவர்களின் கதைகளில் பொதுவாகத் தெரியும் ஒன்று.

அடுத்து ராகவன் "[illegible]திர்ப்பிலக்கியம் ஒரு கலாசார ஆயுதம் " என்ற நூல் விமர்சனத்தில் எதிர்ப்பிலக்கியப் போலி எழுத்தாளர்கள் என ச.முருகானந்தன், வளவை வளவன், யோ.கர்ணன் என்பவர்களைக் குறிப்பிடுகிறார். ராகவன் விடுவிக்க[illegible]படாத பிரதேசத்தில் வாழ்பவர்[illegible] அப்படிப்பட்டவருக்கு விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் வாழ்பவர்கள் படைப்பாளர்கள், படைப்புக்கள் பற்றிய முழுமைகள் தெரியாதவர் ஓரிரு கதைகளைப் படித்துவிட்டு அவர்களை வகைப்படுத்தலானது நகைப்புக்குரியது. குறிப்பிட்டவர்களில் ஒருவர் நீண்டகாலம் போராளியாகச் செயற்பட்டு ஒரு காலையும் இந்த மண்ணுக்குக் கொடுத்தவர். அவரின்கள அனுபவங்கள் எத்தனையோ கதைகளில் புலப்பட்டிருக்கின்றன. விமர்சனம் அல்லது ஆய்வுகளுக்கு பரந்த வாசிப்பும் தேடலும் அவசியம். புதிய தரிசனம் சில போலிகளை இனங்கண்டு அவைகளைத் தவிர்த்து ஒரு நேர்வழியில் பயணிக்க வேண்டும் என எனது மடலை முடிக்கிறேன்" எனத்த.சீர்மாறன் குறிப்பிட்டுள்ளார்.

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்



ஹைரோல் நகரில் நடந்த 'மிடில் வெயிட் குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டியில் ஆர்மேனிய வீரர் ஏசன் கசாட்ரியன் (இடது) குத்துக்கு நிலை தடுமாறுகிறார். அர்ஜென்ரீனா வீரர் ஜோஸ்ரோசாகோமஸ். இந்தப் போட்டியில் கசாட்ரியன் வெற்றி பெற்றார்.

# மனித நேயம்

விளையாட்டுத் துறையில் பங்கேற்கும் விளையாட்டு வீர்ர்கள் கோடி கோடியாக சம்பாதிக்கிறார்கள் என்பது என்னவோ உண்மைதான்.

ஆயினும் சில வேளைகயில் இந்த விளையாட்டு வீரர்கள் சமூகத் தொண்டு என்ற அடிப்படையில் உலகில் நலிவுற்றோருக்காகவும் உடலால்



குறைபாடுகளை கொண்டவர்களுக்காகவும் அவ்வப்போது மனிதாபிமான உதவிகளை செய்து வருவது பாராட்டுக் குரியதே.

அந்த வகையில் மனவளர்ச்சி குன்றியோருக்கு நிதி திரட்டும் வகையில் இந்தியாவின் கிரான் மாஸ்டர் விசுவநாதன் ஆனந் ஒரு வித்தியாசமான செஸ் விளையாட்டில் ஈடுபடுகிறார்.

அதாவது ஒரே நேரத்தில் 64 பேருடன் செஸ் விளையாட்டில் ஈடுபடப் போகிறார். இருவர் விளையாடுவதே செஸ் விளையாட்டில் மண்டை வெடித்துவிடும் போல் இருக்கின்ற நிலையில் 64 பேருடன் விளையாடுவதை நினைக்கும்போது பிரமிப்பாகத்தான் இருக்கின்றது.

இந்த விளையாட்டு நாளை சென்னையில் நடைபெறுகின்றது.

---





# ஓடப்போகும் எக்ஸ்பிரஸ்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ஏனைய அணிகளோடு போட்டியிடுவதற்காக எந்த நாட்டிற்குச் சென்றாலும் அந்த பாகிஸ்தான் அணிக்குள் கிரிக்கெட் ரசிகர்கள் தேடும் வீரர் சொகையப் அக்தர் என்றால் மிகையில்லை.

காரணம் சிங்கத்திற்கு சிலிர்க்கும் பிடரி மயிர் போல மயிர்கள் காற்றில் பறக்க எல்லைக் கோட்டிலிருந்து ஓடிவந்து அசுர வேகத்தில் அக்தர் வீசும் பந்து ஒரு தனி அழகுதான்.

ஆயினும் அக்தர் ஒரு



அணி வீரர்களோடும் நடுவர்களோடும் சர்ச்சையில் மாட்டிக்கொள்ளும் வீரர். அண்மைக்காலமாக பாகிஸ்தான் அணியிலிருந்து ஓரங்கட்டப் பட்டிருந்தார்.

இதற்குக் காரணம் அக்தருக்கும் அணியின் தலைவர் இன்சமாம் உல்ஹக்கிற்கும் இடையில் அடிக்கடி ஏற்பட்ட முறுகல்தான்.


இந்த நிலையில் ராவல் பின்டி எக்ஸ்பிரஸ் சொகையப் அக்தர் ஒரு சர்ச்சைமிகு வீரர் அடிக்க?? கோபப்படுவதன் மூலம் தனது அணிக்குள்ளேயும் ஏனைய

கண்டத்திலிருந்து தப்பியுள்ளார்.

அதாவது சொகையப் அக்தர் பாகிஸ்தான் அணியில் தொடர்ந்தும் விளையாடுவதற்கு அவருடனான ஒப்பந்தம் நீடிக்கப்படுமா என்ற சந்தேகம் நீடித்து வந்தது. ஆனால பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அக்தருடனான ஒப்பந்தத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீடித்துள்ளது.

உலகில் அதிக ரசிகர்களைக்கொண்ட சொகையப் அக்தர் இந்த ஒருவருடகால ஒப்பந்தத்துக்குள் தனது எக்ஸ்பிறஸ் வண்டியை எங்குவரை கொண்டுபோகப் போகின்றார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

---



கால்பந்து ரோபோ வருகிறது... ஜப்பானில் உள்ள ஒசாகா நகரில் ரோபோக்களுக்கான 'ரோபோ2005' விளையாட்டுப் போட்டிகள் தொடங்கியுள்ளன. 5 நாட்கள் நடக்கும் இந்தப் போட்டியில் ஜப்பானைச் சேர்ந்த 'விஷன்நெக்ஸ்டா' என்ற 47.5செ.மீ உயரமும், 3.1 கிலோ எடையும் கொண்ட இந்த ரோபோ தனக்கு கிடைத்த பெனால்டிக் வாய்ப்பை கோலாக மாற்ற முயற்சிக்கிறது. வரும் 2005இல் இந்த வகை ரோபோக்கள் கால்பந்து மைதானத்தில் வீரர்களை எதிர்த்து விளையாடக்கூடிய ஆற்றலோடு திகழும் என ராபோ விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். (வருங்கால ரொனால்டோ, பெக்காம்களே உஷார்...)

---

# கற்பிக்கவேண்டிய குருதான்

உலகில் தலைசிறந்த கிரிகெட் வீரர் சச்சின் டெண்டுல்க்கர் தொடர்பாக அவரின் விளையாட்டுத் தொடர்பாக உலகம் எங்கும் பேசிவந்தாலும் மிக அண்மைக் காலமாக அவருக்கு ஏற்படும் உடல் உபாதை தொடர்பாகவும் அவரது மோசமான ஆட்டம் தொடர்பாகவும் பேசப்பட்டு வருகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாகப் போய் அவர் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற வேண்டும் என்று கூட விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக கிரேக் செப்பல் பொறுப்பேற்றதன் பின்னர் சச்சின் தொடர்பாக அவர் கூறிய சில கருத்துக்கள் செப்பலுக்கும் சச்சினுக்கும் இடையில் முறுகல் ஏற்படலாம் என்றுகூட எதிர்பார்க்கப் பட்டது.



கிரேக் செப்பல் பொறுப் பேற்ற சூழலில் சச்சின் உடல் உபாதை காரணமாக ஓய்வில் இருந்ததால் பயிற்சிகளில் சச்சின் கலந்து கொள்ள முடியவில்லை.

ஆனால் கிரேக் செப்பல் சச்சினை விட்டுவிடவில்லை. சச்சினிடமிருந்து இந்திய கிரிகெட்டுக்கு வித்தியாசமான ஒரு பலனைப் பெற்றுக்கொள்ள செப்பல் முடிவுசெய்துகொண்டார்.

இதன் பயனாக பெங்களூர் கிரிக்கெட் பயிற்சி முகாமுக்கு சச்சினை அழைத்த செப்பல் அங்கு பயிற்சிபெறும் இளம் இந்திய வீரர்களுக்கு சச்சினுக்குத் தெரிந்த துடுப்பாட்ட நுணுக்கங்களையும் பந்து வீச்சு நுணுக்கங்களையும் கற்றுக்கொடுக்குமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க சச்சின் இளம் வீரர்களுக்கு கற்றுக் கொடுக்கப் போகிறார்.

உண்மையில் செப்பலின் இந்த முயற்சி பாராட்டுக் குரியது. ஏனென்றால் உலகின் தலைசிறந்த கிரிக்கெட் வீரர் சச்சினிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் ஏராளம் உண்டு.

---

## முதல்வனாகும் கில்கிறிஸ்ட்



அவுஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக் கிடையேயான 3 ஒருநாள் போட்டி கொண்ட நட்வெஸ்ட் தொடரை அவுஸ்தி ரேலியா2-1என்ற கணக்கில் கைப்பற்றியது.

இதில் ஓட்டம் குவிப்பதில் அவுஸ்திரேலிய விக்கெட் காப்பாளர் கில்கிறிஸ்ட் முதலிடத்தில் உள்ளார். 3போட்டிகளில் ஆடி உள்ள அவர் ஒருசதம் உட்பட 192 ஓட்டங்களை எடுத்துள்ளார். அதிகபட்ச ஓட்டம 121 ஆகும். சராசரி 111.62 ஆகும். இதுமட்டுமல்லாமல் அவர் 5 பிடிகளையும் பிடித்துள்ளார்.

---

# பிரமாண்டம்

இப்போதெல்லாம் குறைந்த பட்ஜட்டில் திரைப்படங்கள் எடுப்பது பற்றி திரைப்படத் துறையினர் சிந்திப்பதேயில்லை. இப்படித்தான் எல்லாத்துறையும்.

இப்போது இந்த பட்ஜட் விவகாரம் விளையாட்டுத் துறைக்குள்ளேயும் புகுந்துவிட்டது.

இதன்படி லண்டனில் 2012 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக போட்டியை நடத்த பிரிட்டிஷ் அரசு இலங்கை ரூபாப்படி அண்ணளவாக 885 கோடி ரூபாவை செலவு செய்ய முடிவு செய்துள்ளது.




பிரிட்டிஷ் அரசு லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியை நடத்த வெறும் 83 கோடி ரூபாக்களை மட்டுமே ஒதுக்கியிருந்த சூழலில் பிரிட்டிஷ் விளையாட்டு இயக்குநர்கள் இந்த பிரமாண்டமான தொகையை ஒதுக்க கோரிக்கை விடுத்தனர்.

பிரிட்டிஷ் லண்டனில் நடைபெறப்போகும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை தமது கௌரவ விவகாரமாகவே கருதுகிறது.




கிளி-வட்டக்கச்சி மகா வித்தியாலயம்

**45ம்.நாளில் நெஞ்சம் நெகிழ்கிறோம்**

**அமரர் அமராவதி சரவணமுத்து**

அம்மா.......
என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காமல் உயர்வில்லையே-என்ற
அரும்பதத்தை-தன் அகத்தே கொண்டு
அகமதில் உதித்த பரோபகார சிந்தனையில்
பதினைந்து லட்சரூபா செலவில்
பௌதீக விஞ்ஞான கூடத்தை எம்பரம்பரைக்கென
உருவாக்கித் தந்த மகான் ஆனந்தராசா(கிருபா)அவர்களின்
அன்புத்தாயார் அமராவதி அவர்களின் இழப்பு
எம் இதயங்களை நெகிழ வைக்கிறது

**கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம்**
புங்குடுதீவு 11ம் வட்டாரத்தைச் சேர்ந்த
அமரர் உயர்திரு.
**நாகலிங்கம் சரவணமுத்து**
அவர்களின்
ஞாபகார்த்தமாக இவ்விஞ்ஞான ஆய்வு கூடம்
12-05-2005 அன்று
சரவணமுத்து ஆனந்தராசா (கிருபா)
அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
அன்பளிப்பு
மனைவி ச.அமராவதி
பிள்ளைகள்

அன்னாரின் ஆத்மா சாந்திபெற
இறைவனை இறைஞ்சும்
வட்டக்கச்சி-மக்கள் (6358)

# 22ஆம் ஆண்டு நினைவுத் தடத்தில்



**ஆனந்**
(இராமநாதன் அருள்நாதன்)
பிறப்பு: 25.01.1964
வீரச்சாவு: 15.07.1983



**சீலன்**
(சாள்ஸ் அன்ரனி)
வீரச்சாவு: 15.07.1983




**செல்லக்கிளி**
வீரச்சாவு: 23.07.1983

விடுதலை வேண்டி தடைகளை உடைத்து
தலைவனின் வழியில் தணலென ஆனவரே
விடிவுறும் ஈழம் விரைவினில் என்றே
உயிர்க் கொடைதந்து உறங்கினீர் மண்ணில்
உருப்பெறும் ஈழம் உயர்த்திடும் கொடியில்
வரிப்புலி உங்கள் வதனமும் சிரித்திருக்கும்.

மண்மீட்புக்கான உங்கள் வீரமரணத்தின் 22 ஆவது வருடத்தை நினைவு கூர்ந்து, வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளும். (சி.12356)

ஆனந் குடும்பத்தினர்.




# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 12**

**பகுதி -55**

"மணிகள் அடிக்கத் தொடங்கியதும் போற நேரம் வந்து விடும்" என்று நான் சொன்னேன்.

"ஓ!"என்றான் டிப்ஸ். எனக்கு அருகே நடந்து வந்தான் விரைவாகவும் எதுவும் பேசாமலும் என் கைகளைத் தொட்டான். பிறகு சித்திரம் வரையும் சட்டத்தை நோக்கி நடந்து சென்றான். தீந்தைகளின் ஒழுங்கை வேகமாக மாற்றி விட்டான். பண்ணை மிருகங்கள் இருக்கும் பெட்டியை எடுத்தான். வேலிக்கான துண்டங்களை எடுத்து அவற்றைப் பரிசீலித்தான்.



''நான் அற்புதமான பண்ணை ஒண்டை உருவாக்குவன்" என்று அறிவிப்பது போல் சொன்னான். பின் பாடத் தொங்கினான்.

**நான் ஒரு பண்ணை செய்வேன்.**
**நான் ஒரு பண்ணை செய்வேன்.**
**மகிழ்ச்சியான பண்ணை செய்வேன்.**
**எனக்கும் உங்களுக்கும் ஒரு பண்ணை செய்வேன்.**

நிமிர்ந்து என்னைப் பார்த்தான் "இன்னும் எத்தனை நிமிசங்கள் இருக்குது?" என்று கேட்டான். ஒரு கடதாசித் துண்டை எடுத்து ஐந்து ஒன்றை கீறிவிட்டு அவன் பார்க்கக் கூடியதாகத் தூக்கிப்பிடித்தேன். அவன் அதைப் பார்த்து விட்டு மனம் விட்டுச் சிரித்தான். எனது பென்சிலை எடுத்துக் கொண்டு சில செக்கன்கள் காத்திருந்தான். பின் நாலை எழுதினான். ஒரு செக்கன் கழித்து மூன்றை எழுதினான். இன்னொரு செக்கன் கழிய, இரண்டை எழுதினான். அடுத்த செக்கன் கழிந்ததும் ஒன்றை எழுதினான். பிறகு "வீட்ட போற நேரம் வந்திட்டுது" என்று கத்திச் சொன்னவன், "ஆனா கோயில் மணிகள் தான் ஒலிக்கயில்ல...." என்றான்.

"நீங்கள் கோயில் மணிகள முந்திக் கொண்டு அந்த நேரத்துக்கு போய்ட்டீங்க" என்று நான் சொன்னேன்.

''ஓம் அப்பிடித்தான்'' என்றவன் தரையில் தான் உருவாக்கியிருந்த வேலியை பார்த்தான்.

"பாத்தீங்களா...?" என்றபடி வேலியைச் சுட்டிக் காட்டினான்.

"அது ஒரு நீளமான வேலி" என்று நான் சொன்னேன்.

"ஓம். அது சரியான நீளம்தான்... என்ன?" என்றவன் பாடத் தொடங்கினான்.

**நான் ஒரு வேலி செய்தேன்**
**நீளமாய் வேலி செய்தேன்**
**வேலி முடிவை**
**என்னால்**
**காணவே முடியவில்லை**
**வேலி ஏன் வேண்டும்**
**எங்கே அந்த வேலி?**
**வேலி எதுவுமே**
**எனக்கு**
**தேவையில்லை.**

பாடிவிட்டு மனம் விட்டுச் சிரித்தான்.

"பண்ணை மிருகங்கள வேலிக்குள்ள விடப்போறன்" என்று அறிவிப்பது போல் சொன்னான். ஒரு குதிரை யையும் ஒரு பசுவையும் எடுத்து வேலிக்குள் விட்டான். பிறகு பசுவை எடுத்து நான் பார்க்கும் படி தூக்கிப் பிடித்தான்.

"இந்தப் பசு பால் தரும். நல்ல சிநேகிதமா நடந்து கொள்ளுற பசு. எல்லாப் பசுக்களும் வரிசையில நில்லுங்கோ. பால் குடுக்க ஆயத்தமா நில்லுங்கோ" என்றவன் பிறகு கண்டிப்பான குரலில், "ஏய் பசுவே! வரிசைக்கு பேர்.... நேராக நில். நான் சொன்னது கேட்கேல்லயா? அடி முட்டாள் மாதிரி நடந்து கொள்ளாதே!" என்றான்.

"ஒரு சேவலை தூக்கிப்பிடித்தான். "இது தான் சேவல்" என்றான்.

ஆலய மணிகள் ஒலிக்கத் தொடங்கின.

"டிப்ஸ் கேட்குதோ" என்றேன். "ஓம் ஒரு மணி நாலுமணிக்கு இன்னும் மூண்டு மணித்தியாலங்கள் இருக்குது".

"அப்பிடியில்ல டிப்ஸ் நீங்கள் என்ன முட்டாளாக்கப் பாக்கிறீங்களா? வீட்ட போற நேரம் வரயில்லயோ?" என்றேன்.

"ஓம். வந்திட்டுதுதான். ஆனா அது வரயில்ல யெண்ட மாதிரி நினைப்போம்" என்றான் டிப்ஸ்.

"நினைக்கிறதோ?"

"ஓம். இப்ப ஒரு மணி தான் எண்டு நினைப்பம்" என்றான் டிப்ஸ்.

"அப்பிடி நினைச்சாப் போல நேரம் மாறியிடுமோ?" என்று அவனிடம் கேட்டேன்.

"இல்லை." என்றவன், தொடர்ந்து, "இரண்டு விதமா நினைச்சுக் கொள்ளலாம்" என்றான்.

"என்னென்ன மாதிரி?' நான் கேட்டேன். "நாங்க நினைக்கிறது சரி தான் என்று சொல்லக் கூடிய நினைச்சுக் கொள்ளுதல் ஒரு வகை. வெறும் முட்டாள்தனமாக நினைச்சுக் கொள்ளுறது அடுத்த வகை" என்றான். எழுந்து நின்ற அவன் என்னை நோக்கி வந்தான்.

"சில நேரங்களில எது எதெண்டு சொல்ல முடியாத அளவுக்கு அவை கலந்து போயிரும்" என்றவன், தொடர்ந்து, "இப்ப நான் எங்கட டொக்டர் வீட்டுக்குப் போவன். உண்மையைச் சொல்லப் போனா, இங்க வரயிக்க, டொக்டர் வீட்டுக்குத் தான் போய்க் கொண்டிருந்தனாங்க. ஆனா இஞ்சதான் முதல் வந்தனாங்க. ஏனெண்டா நான் இஞ்ச வாறதுக்குத் தான் சரியா விரும்பினனான். அம்மா உங்கள ஏற்கெனவே கேட்க நீங்க உங்களுக்கு முதலே சின்ன முத்து வந்திட்டுது எண்டு சொன்னனீங்களாம். ஆனபடியா இஞ்ச வாறது பிரச்சினை யில்ல எண்டு அம்மா சொன்னவ. ஆனா டொக்டரிட்ட கேட்டிருந்தா சில நேரம் வர விட்டிருக்க மாட்டார்" என்றான்.

அவன் தனது தொப்பியையும் கோட்டையும் போட்டுக்கொண்டான். "இப்ப எனக்கு நல்ல சுகம். என்னட்ட இருந்து ஒருதருக்கும் சின்னமுத்து பரவாது" என்று மகிழ்ச்சியாய் இளித்தபடி சொன்னான்.

"போயிற்று வாறன். அடுத்த வியாழக் கிழமை உங்கள சந்திப்பன்



## முடுபனிக்குள் ஒரு தேடல்

**மொழியாக்கம் :- வி.பி.யோசப்**

எண்டுதான் நினைக்கிறன்" என்று சொல்லி விட்டுப் போய் விட்டான்.

டிப்ஸிடனான உரையாடல்கள் சிலவற்றில் இருந்து நான் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த ஊகங்களுடனும் எடுகோள் களுடனும் அங்கே தனித்து விடப்பட்டிருந்தேன். அவனது தாயுடனான உறவில் அவன் அதிக இயல்பாக இருப்பதாகத் தோன்றியது. இப்போது, டிப்ஸ் சின்ன வீட்டில் அவனை அதிக முக்கியத்துவம், புரிந்துணர்வு மற்றும் மரியாதையுடன் நடத்துவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. "அப்பா" கூட, ஒரு 'ஆளாக' அதிகமதிகம் வெளிவரத் தொடங்கியிருந்தார். ஆனால் டிப்ஸ் தொடர்பான அவர்களது நடத்தைகளை மாற்றிக் கொண்டிருந்தார்களா? அல்லது தனது தாய் தந்தையர் தன்னை அணுக முயல்வதை அதிக இயல்பான முறையில் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அவர்களுடனான உறவு கொள்ளுதல் என்ற வகையில் டிப்ஸ் தன்னை மாற்றிக் கொண்டிருக்கிறானா?

அவனுடைய கூர்மையான புத்திசீவி இயலுமைகளுக்கு தீனிபோடும் வகையிலான போதியளவு பொருட்களை அவர்கள் பெற்றுக் கொடுத்திருந்தார்கள் என்பதில் எந்த ஐயத்துக்கும் இடமில்லை. அவனோடு தொடர் பாடலைப் பேணவும் அவனுக்கு பல விடயங்களை கற்பிக்கவும் அவர்கள் நிச்சயமாக முயன்றிருந்தார்கள். டிப்ஸின் வயதிலுள்ள சராசரி குழந்தை ஒன்றின் இயலுமைகளை மீறியபொருட்களை அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கையில், உளவளம் குன்றிய பிள்ளையாக அவன் இருப்பது தொடர்பாக அவர்கள் கொண்டிக்கக் கூடிய உணர்வலைகளை புரிந்துகொள்வது மிகவும் கடினமானதாக இருந்தது. டிப்ஸினுடைய பிரச்சினையானது எந்த ஒரு புத்திசீவி இயலுமைக் குறைபாட்டினாலும் ஏற்பட்ட தல்ல என்பதை அவர்கள் அறிந்திருந் தார்கள் என்பது நிச்சயமானதாகும். ஆனால் நற்பேறானதும் மேலாண்மை மிக்கதுமான ஒன்றும், கவலை தருகின்ற அளவில் குறைபாடான ஒன்றுமாக இரண்டு முழுமையாக வேறுபட்ட நடத்தைகளை அவன் ஏன் இன்னமும் வெளிப்படுத்தி வருகிறான்?

(தொடரும்)


## பணிநிலை வேண்டுகை

அரசியல்துறை நிறுவனங்களில் கீழ் குறிக்கப்படும் பணிநிலைகளுக்கு தகுதியுடைய ஆண்,பெண் இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றது.

**பணிநிலைகள்:-**

01.உதவிக்கணக்காய்வாளர்.
02.கணக்காய்வு எழுதுனர்.
03.கணக்கு எழுதுனர்.

**தகைமைகள்:-**

01. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வணிகத்துறை அல்லது முகாமைத்துவப் பட்டம் அல்லது அதற்கு சமனான கற்கை நெறிகள்.
02. க.பொ.த-உயர்தரத்தில் வணிகப்பிரிவில் வேண்டிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
03. க.பொ.த சாதாரணதரத்தில் வணிகப்பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

**அகவை எல்லை:-**
விண்ணப்ப முடிவு நாளில் 18 அகவைக்கு உட்படாமல் இருத்தல் வேண்டும்.

**ஊதியம்:-**
ஊதிய அளவுத்திட்டத்தின் பிரகாரம் வழங்கப்படும்.

**வேண்டுகைக்கடித உறையில் எழுதப்பட வேண்டிய முகவரி:**
பொறுப்பாளர், ஆளணிப்பகுதி, நிதிப்பிரிவு, அரசியல்துறை,தமிழீழம்.

**விண்ணப்ப முடிவு நாள்:- 20.07.2005**

***வேண்டுகைகள் சேர்ப்பிக்கப்பட வேண்டிய முகவரிகள்:-***

| | |
|---|---|
| புதுக்குடியிருப்பு | -திரைப்பட வெளியீட்டுப்பிரிவுத் தொடர்பகம். |
| மல்லாவி | -மின்வழங்கல் சேவை நிறுவனம். |
| முழங்காவில் | -மின்வழங்கல் சேவை நிறுவனம். |
| முள்ளியவளை | -மின்வழங்கல் சேவை நிறுவனம். |
| கிளிநொச்சி | -விளம்பரப் பணிமனை, ஈழநாதம், யாழ்சாலை,கிளிநொச்சி. |
| பொதுஅஞ்சல் | -ஒளிர் காகிதாதிகள் விற்பனையகம், கந்தசாமி கோவிலடி, கிளிநொச்சி. |

ஆளணிப்பகுதி,
நிதிப்பிரிவு,
அரசியல்துறை,
தமிழீழம்.

(சி.12297)

## பொருண்மிய வாசல்



# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

உச்சமான விளைச்சலை பெற்றுக்கொள்ள நாம் பலவழிமுறைகளை கையாளுகின்றோம். அதில் பிரதானமானது மண்வளத்தை பராமரிக்க மண்ணுக்கு சேதனப் பசளைகளையும், இரசாயனப் பசளைகளையும் இடுவது ஆகும்.

எனினும் இவ்வாறு இடப்படும் பசளையானது பயிருக்கு கிடைப்பதை விட வீணாகிப்போவதே அதிகமாகும். இவ்வாறு வீணாவதைத்தடுக்க உரிய வழிமுறைகளைக் கைக்கொள்வதன் மூலம் இரசாயனப் பசளைகளுக்கு செலவழிக்கும் பணத்தினை ஓரளவாவது குறைக்கக் கூடியதாக இருக்கும்.

இவ்வழிமுறைகளில் பிரதானமானது உரிய பருவத்தில் பயிர் செய்வதே ஆகும். உரிய பருவத்தில் அந்த பருவத்திற்குரிய பயிரை பயிரிடுவது ஒரு மிகப் பொருத்தமான நடவடிக்கையாகும். இவ்வாறான பயிருக்கு இடப்படும் பசளை உரிய முறையில் பயிரால் பயன்படுத்தப்படும்.

இது தவிர பயிரிடப்படும் ஒவ்வொரு பயிருக்கும் சரியான ஆழத்தில் நிலத்தைப் பண்படுத்த வேண்டும். குறிப்பிட்ட ஆழத்திற்கு மண்ணை கொத்தி புரட்டாது விடும்போது கீழ்ப்படையிலுள்ள சத்துக்களை மண் உறிஞ்சமுடியாது போய்விடும். அதிலும் நிலத்தை பண்படுத்தும் போதே அடிக்கட்டுப் பசளைகளை இடல் வேண்டும் என்பதையும் கவனிக்க வேண்டும்.

சகல பயிர்வகைகளையும் பயிரிடும்போது கவனிக்க வேண்டிய இன்னுமொரு விடயம் பயிர்களுக்கு இடையேயான இடைவெளி ஆகும். அத்துடன் விதைகளையும் நாற்றுக்களையும் நடல் அவசியமானதாகும். சரியான இடத்தில் உரிய ஒரே அளவான விதைகளை, நாற்றுக்களை நடுவதன் மூலம் பசளைப் பயன்பாட்டில் சீரான தன்மையை பேணமுடியும்.

ஒரு இடத்தில் அதிகமாகவும் இன்னுமொரு இடத்தில் குறைவாகவும் விதைகளை/நாற்றுக்களை நாட்டும்போது பசளைப் பாவனை சரியான விதத்தில் அமையாது போய்விடும்.

விதை அல்லது நாற்று உயரிய வர்க்கத்தில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டும். குறிப்பிட்ட சில வர்க்கங்கள் பசளைக்கு அதிக தூண்டற் தன்மை கொண்டவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சிபார்சு செய்யப்பட்ட பசளைகளை உரிய நேரத்தில் உரிய அளவில் பயிருக்கு இடுவதே மிக முக்கியமான நடவடிக்கையாகும்.

# பனை வளம் காப்போம்

தமிழீழம் அழகான பசுமையான ஒரு தேசம். வளங்கள் பல நிறைந்து வாழ வைக்கும் பூமி. அதனை பாதுகாப்பதுதான் இப்போது எல்லோருடைய முக்கிய கடமையா இருக்கிறது. எமது வளங்களில் முக்கியமாக பனை வளத்தை எடுத்துக்கொண்டால் பனை எங்களின் உயிரான சொத்து. தமிழீழத்தில் மிக நீண்ட காலமாகவே நடுகை செய்யப்பட்டு வருகின்றது. அண்மைக்காலங்களில் கூட பனம் விதைகள் இலட்சக் கணக்காக நடுகை செய்யப்பட்டுள்ளன. பனை என்பது பனம் பொருளின் ஆதாரம். அதன் முக்கியத்துவத்தை உணராதவர் எவரும் தமிழீழ மண்ணிலே இருக்கமுடியாது.

பனையில் இருந்து பெறப்பட முடியாத விலக்கப்படாத பொருள் என்று எதுவுமே இல்லை. எல்லாமே பயன்பாட்டுக்குரியவைதான். எங்கள் பாட்டன் முப்பாட்டன் வாழ்ந்த காலங்களில் பனை அவர்களின் பிள்ளையாகவும் அதில் இருந்து பெறப்படுகின்ற பொருட்களை விலை மதிப்புள்ளதாகக் கருதினார்கள். ஆனால் இன்றைய காலங்களைப் பொறுத்தவரை பனை வளத்தை பாதுகாப்பது என்பது மிக அரிது. பனையில் இருந்து பெறப்பட்ட பொருட்களையே காண முடிவதில்லை. அந்தவகையில் பனையின் முக்கியத்துவம் விளங்கப்படாமையாக தற்போது இருக்கிறது.

பனை ஓலை வேலி அடைக்க, வீடுமேய, பனங்கள்ளிலிருந்து கருப்பணி, நொங்கு, பனம் பழம், பனங்கிழங்கு, பனமட்டை, பனநார், பனமரம் வீடு அமைப்பதற்கு எல்லாமே முக்கியமானதுதான். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை பனைகள் மிகக் கூடுதலாகக் காணப்படுகின்ற மாவட்டம் தற்போது பனைகளின் எண்ணிக்கை குறைந்து காணப்படுகிறது. இதற்கு காரணம் ஒன்று இராணுவம் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களில் தனது பாதுகாப்புக் காவலரண்கள் அமைப்பதற்கு தறித்து அழிக்கிறது. யுத்த காலத்தில் எதிரியால் ஏவப்பட்ட எறிகணைகள் வீழ்ந்து பனை வட்டுடன் இல்லாமல் இருந்தன. இப்போது அவை உக்கி அழிகின்றன. அதோடு நின்றுவிடாமல் ஏட்டிக்குப் போட்டியாக எமது மக்களும் தங்களின் தேவைக்கும், உழைப்புக்கும் பனைமரத்தை தறிக்கிறார்கள்.

இப்படி நாளாந்தம் பனை தறிபடும்போது எங்களின் பனை வளத்தின் முன்னேற்றம் எப்படி இருக்கப்போகிறது. எமது தேசியு சொத்தே பனைமரம் என்றானபொழுது அதைப் பாதுகாப்பது யாருடைய கடமை. பனை அனுமதியின்றித் தறிக்கக் கூடாது என்ற வரைமுறை ஆரம்பத்திலிருந்தே நடைமுறையில் இருக்கிறது. 1995 ஆம் ஆண்டு யாழ் குடாநாட்டை இராணுவம் கைப்பற்றிய பின் அந்த நடைமுறையை எவரும் பின்பற்றத் தவறிவிட்டனர் என்றுதான் கூற வேண்டும். ஏனென்றால் இராணுவத்திற்கு பனையின் பயன்பாடும் முக்கியத்துவமும் தெரியாது. இது தமிழ் மக்களின் வளம் மிகு சொத்து என்பதும் அவனுக்குத் தெரியாது. அதனால் அவன் பனை மரங்களை வெட்டினான். காவலரண் அமைத்தான். அமைத்துக் கொண்டும் இருக்கிறான். எங்களின் பனைமரம் அழிக்கப்படுகிறது. இதைத் தடுப்பவர்கள் யார். இதைத் தடுத்து பனைவளத்தை பேணிப் பாதுகாக்க வேண்டியவர்களே பனைகளை தறிக்க முனைத்தால் காலப் போக்கில் எமது பாரம்பரியமான பனை வாசனையை எப்படி உணர்வது.



கவிஞர்களால் பல பாடல்கள் பனையைப் பற்றி பாடப்பட்டிருக்கின்றன. பனங்காப் பணியாரமே. பனையில் ஆடும் காவோலை சங்கீதம யாழ்ப்பாணம் வந்ததைச் சொல்லும் பனைவாசம் சந்தோசம் என்றும் கவிஞர் காசியானந்தன் எழுதியிருந்த அழகான அந்தப் பனைமரம் அடிக்கடி நினைவில் வரும் என்ற பாடலும் இந்தப் பாட்டின் வரிகளைப் பாருங்கள். யாழ்ப்பாண மண்ணுக்கு ஒரு வாசம் இருக்கெண்டாலே அது பனை வாசம்தான், பனங்காய் பணியாரமும் ஒடியல் கூழும் தான் நினைவுக்கு வருகிறது. எங்களின் பனை ஒவ்வொன்றும் உயிர்ப்புள்ளது. தமிழீழத்துக்கு அழகு சேர்த்து தன்துணிவோடு நிமிர்ந்து நிற்கின்றது பனைமரம்.

அது ஒரு பசுந்தேசம். பனைமரம் தறிக்க நினைப்பது சட்டத்துக்கு விரோதம். அனுமதியின்றி பனை தறிக்கமுடியாது. யாழ்ப்பாணத்தில் அனுமதியின்றி பனைமரம் தறித்து விற்பனையாகிறது. அதைவிட படிப்படியாக அழிக்கப்படுகிறது என்று குறிப்பிடலாம். எதிரியால் அழிவது ஒருபுறமிருக்க, பாதுகாக்கப்படுபவர்களால் அழிக்கப்படுவது மிகவும் வேதனையான விடயம். தமிழீழத்தில் வாழும் அனைவருக்கும் எமது வளங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பிருக்கிறது. அனுமதியின்றி பனை தறிப்பது அனுமதிக்கமுடியாது. வளங்கள் யாவும் தமிழீழத்தின் சொத்தாகப் பேணிப் பாதுகாக்கப்பட வேணும். எமது வளங்களை அழிக்க நினைப்பவர்களையும் அழிக்கப்படுவதையும் தடுத்து நிறுத்தி எமது வளங்களில் முக்கியமான பனை வளத்தையும் பாதுகாக்க வேண்டும். பாதுகாப்போம். இது அனைவரினதும் பொறுப்பும் கடமையுமாக இருக்கின்றது.

**ஜீவநிலா**

(## ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் மூலம் ஒரு கௌரவம் மிக்க வாழ்க்கைக்கான சுதந்திரம் பெறப்படுகின்றது. ஒவ்வொரு மனிதனும் கௌரவமும் பெறுமானமும் மிக்க ஒரு வாழ்க்கைக்கு இட்டுச் செல்லக்கூடிய தெரிவுகளையும், வாய்ப்புக்களையும், விரிவுபடுத்துகின்ற மனித ஆற்றல்களை மேம்படுத்துகின்ற செயல்முறையாக சமூக மாற்றம் வேண்டப்படுகின்றது.

இவையாவும் முன்னெடுக்கப்படும்போது ஒன்றையொன்று உறுதிப்படுத்தும் வகையிலேயே செயல்படுகின்றன. அதாவது மனிதர்களின் ஆற்றல்களை விரிவு படுத்தி, அவர்களது உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் பாதுகாக்கின்றன.

புத்தபெருமானை அடியொற்றியதாகக் கூறப்படும் புத்திஜீவிகள் சுய அனுபவசக்தியை கற்பனைகளால் கச்சிதப்படுத்தி கர்ச்சிக்கின்றார்கள். பீதியஸ் எனும் அறிஞர் கூறுவது, சுய அனுபவச்சக்தியே மனித இனத்தினுடைய கெட்ட குணமாகும். சொந்த சுயநலத்திற்கு மனிதன் தலைவணங்குவது போல், எந்த மிருகமும் அடிபணிவதில்லை. ஆசைப்படுவதில்லை. என்பதாக இவரது கூற்று அமைகிறது.

சமூக, பொருளாதார, அரசியல் சதித்திட்டங்களுடன், பதவி மோகங்களும் பகுத்தறிவு குன்றிய செயல் முறைகளுமாய் பிறர் பாதிப்பிலும் துன்பத்திலும் தமது வாழ்வாய் வாழுகின்ற அன்பானவர்களாக அலட்டிக்கொள்கின்ற அன்பானவர்களும் வாழ்கின்றார்கள். இன்னாதவையைக் கூறி இங்கிதம் குறைக்கப்பட்ட தருணங்களில், உள்வாங்கப்பட்ட வன்முறைகளையும் நயவஞ்சக வேடங்களையும் கோடிட்டுக் காட்டவேண்டிய இனிமைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கசக்கவே செய்யும்.

ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் தன் தேசத்தின், மொழியின் பாலுள்ள உரிமையும் கடமையும், ஒழுங்கும் இன்று தெரிந்திருக்கின்றது. சர்வதேச அங்கீகாரம் வரை உலகத்தின் எல்லாத் திசைகளிலும் எமது உரிமைக்கோஷங்கள் எழுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றன. போலிப் பேரினவாதச் சிற்பிகளின் கைநூல்கள் இன்று சர்வதேசம் வரை அம்பலமாகி, அனைத்து சமூக, பொருளாதார, அரசியல் விடயங்கள் வெளிப்பட்டுத் தெரிகின்றன.

இந்தத் திடமும் உறுதியும் தேசத்தின் விடுதலைக்கான வெளிச்சமாக எல்லாத் திசைகளிலும் தெரிவதை நாம் காண்கிறோம். பாரபட்சங்களையும், தட்டிக் கழித்தல்களையும், நழுவல்போக்குகளையும் நாளாந்தம் காணும் வேலைகளில் எம் நடத்தைகள் புரட்சிகளை ஏற்படுத்துகின்றன.

சமூக மாற்றமும் மானிட விடுதலையும் கருத்தியலிலும், செயலிலும் சமாந்தரமான பாதைகளிலே செல்வன. ஒரு பாதை பொருளியல் அறிஞர்கள், சமூக விஞ்ஞானிகள், கொள்கை வகுப்போர் ஆகியோரால் ஆதிக்கம் செலுத்தப்பட, மற்றப் பாதையில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களும், சட்ட வல்லுனர்களும், தத்துவ ஞானிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றார்கள்.

பகுப்பாய்விலும் செயற்பாட்டிலும் வெவ்வேறு முறையியலைக் கடைப்பிடிக்கின்றனர். சகல மக்களினதும் மனித உரிமைகளை மதித்தல், பாதுகாத்தல் மற்றும் நிறைவு செய்தல் ஆகியவற்றுக்கான வகை கூறலின் சார்பாகவே சமூக மாற்றம் முன்னெடுக்கப்பட்டு மக்களின் கவனத்தை ஈர்க்கவேண்டுமென்றும் கூறப்படுகிறது.

சட்டங்கள், நீதித்துறை, வழக்காடுதல் செயல் முறை முதலிய சட்டவியல் கருவிகள், நிறுவனங்கள் சமூக மாற்றத்தில் முக்கிய கவனத்தில் கொள்ளப்படுவன. இவை உண்மைகள், காரண, காரியங்களுக்கு அழுத்தம் கொடுக்கும் கட்டாயமும் கடப்பாடுமுடையவை. அநீதியாக செயற்படுவோரின் தலைக்குள் ஒருவரும் செல்ல முடியாது. ஆனால் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க பொருள் விளக்கமும் உள்ளுணர்வும் அடிப்படையாகக் கொள்ளவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தலாம்.

ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட மனித வளங்கள் வளப்படுத்தலாய் சமூக மேம்பாட்டுச் சுட்டிகளாக பயனுடையவை. இன்று மனித ஆற்றலில் உலகெங்கிலுமுள்ள முன்னேற்றமானது ஈடிணையற்றது. ஆனால் சர்வாதிகாரப் போக்குகளும் சுரண்டல்களும் பாகுபாடுகளும் பல பாரபட்சப் பட்டாளங்களிடையே அவர்களுக்கே உரித்தான பட்டினியாக எம்முன்னே காட்சியளிக்கிறது. டேவிட். எச். லாரன்ஸ் எனும் அறிஞர், தாங்கள் தேவன்களைப் போன்றவர்கள் என்று எண்ணிக்கொள்ளும் மனிதர்கள், அகந்தை கொண்ட முட்டாள்களாதலால் சாதாரண மனிதர்களையும் விடத் தாழ்ந்தவர்கள் என்பார்.

சமூகமாற்றம் என்பது சமூகத்தில் செயற்படுவோரின் அனுபவத்தினுள்ளே புகுந்து செல்லல் எனும் கருத்தாக்கத்தினுள்ளே பொதிந்திருக்கின்றது. எப்பொழுதெல்லாம் ஒரு சமூகம் சுயவிமர்சனத்தையும் மறுவிசாரணைகளையும் கைவிடுகின்றதோ, அப்பொழுதே கேள்விகளை விரும்பாத கருத்துக்களை ஒரு வித அராஜகத்தன்மையோடு பேணத்தொடங்குகிறது. அந்தச் சமூகம் இந்நிலையில் வீழ்ச்சியின் திசையில் விரைந்து செல்கின்றது என்பது அதனர்த்தமாகி விடுகின்றது. ஆனால் தேக்கங்களை உடைக்கவும் தீர்க்க தரிசனமான அடியெடுத்து வைப்புகளுமான மறுவிசாரணைகளின் மூலமே சமூக மாற்றம் துளிர்விட முடியும்.


தனிநபர் மட்டுமன்றி, சிறுவர், பெண்கள், பெரியோர் எனும் சமூக அனைத்துத் தளங்களிலும் சுபீட்சமான, சுதந்திரமான விடுதலை இன்றைய தேவையாகின்றது.

எமது உழுத்துப் போன மரபுகள், பண்பாட்டு மூட நம்பிக்கைகள் மீளாய்வு செய்யப்பட வேண்டியன. உருப் போடலை அடிப்படையாகக் கொண்ட தகவல் வங்கியாக (Databank) உண்மை மனிதர்கள் உருவாகவும், சமூக முன்னேற்ற, முற்போக்குச் சிந்தனைகளின் தரிசனமும் (vision)பிரயோசனமற்ற தன்முனைப்பு உளப்பாங்குகளைத் தகர்த்தெறிவதற்கான உத்திகளும் சமூக மாற்றத்தின் தேவையாகின்றது. மானிடம் வலிமையான எதிர்கொள்ளலை, சவால்களை முனைப்புடன் கட்டியாள மிகவும் அவசியமாக, காணாமல் போதலும், சித்திரவதைகளும், வன்முறைகளும், வன்கொலைகளும், வதைத்தெடுக்கும் எதிர்ப்புணர்வுகளும் இல்லாதொழிப்பனவாய் உணர்வெழுச்சியுடன் எமது உரிமைகளை, கடமைகளை நிலைநாட்ட மானிட விடுதலை அவசியமாகின்றது.

சமூகத் தேர்வின் பயன் மதிப்பை தெளிவாக புரிந்துகொள்வதிலும் மானிடப் பண்பை வளர்த்தெடுப்பதிலும், தத்தம் உரிமைகளை, கடமைகளை கருத்திலேற்றுவதிலுமான சமூக விழிப்புணர்வை மையப்படுத்திய சமூகப் பொறுப்புக்களும் மானிட நேயத்தை, மனிதப் பண்புகளை, உரிமைகளை, பாரபட்சமற்ற குண நலன்களைக்கொண்ட வேட்கையுமாய் தத்தம் உரிமைகளை வென்றெடுக்கும் சாத்வீகப் பணியாக சமூக மாற்றமும் அதனைத் தொடர்ந்த மானிட விடுதலையும் அமைந்து விடுகின்றதெனலாம்.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



*பாவலா!*

*தற்கொலை செய்பவர்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்?*

*சாதனா,*
*ஜெயந்திநகர்.*

அவர்கள் கோழைகளாக தற்கொலை செய்யாது வீரர்களாக தற்கொடை செய்ய முன் வந்து இருப்பார்களேயானால் வரலாற்றை படைத்திருப்பார்கள்.

*பாவலா!*

*வியாபாரம்-விளம்பரம் பிரித்தால் எது நடக்கும்?*

*கார்த்திகா*
*யாழ்ப்பாணம்.*

விளம்பரமின்றி வியாபாரம் இல்லை வியாபாரம் இன்றி விளம்பரமும் இல்லை.

*பாவலா!*

*சேதுக் கால்வாய் பற்றி உமது பங்கிற்கும் ஏதாவது சொல்லும் பார்ப்போம்.*

*க.றஜித்தா,*
*திருவையாறு.*

சேது கால்வாய் எமக்கு பல சேதங்களை ஏற்படுத்தப் போகும் கால்வாய் என்பது மட்டும் உண்மை.

*பாவலா!*

*சினிமாவும் இன்றைய சமூகமும் பட்டிமன்றம் செய்வோமா?*

*த.அன்பு,*
*புதுக்குடியிருப்பு.*

அந்தப்பட்டி மன்றத்தையும் சினிமாவில் செய்தால் நல்லது. எங்களுடைய சமூகத்தவர்கள் அப்போதுதான் அதைப்பார்ப்பார்கள்.

*அன்பின் பாவலனே!*

*ஒன்று சேர்ந்த இதயங்களை பிரிக்காமல் பிரிப்பது இறைவனா? விதியா? இதற்கு உங்கள் பதில் என்ன.*

*ஜெயா,*
*ஜெயந்திநகர்.*

இந்தக் கேள்விக்கான விடையை
கண்களின் தண்டனை காட்சிவழி
காட்சியின் தண்டனை காதல் வழி
காதலின் தண்டனை கடவுள் வழி
கடவுளை தண்டிக்க என்ன வழி
என்று எழுதிய கண்ணதாசனிடம் தான் கேளுங்கள்.

*பாவலனே!*

*அமசடக்காய் இருப்பவரை பற்றி என்ன நினைக்கிறாய்?*

*மோகன்ராஸ்,*
*முத்துஜயன்கட்டு.*

அச்சத்தின் தோற்றுவாயின் அமசடக்கமே... ஞானத்தின் வெளிப்பாடும் அமசடக்கமே....!

*பாவலா!*

*இந்தக் காலத்தில் சில நண்பர்கள், நண்பிகள் நல்லவர் மாதிரி நடித்துவிட்டு துன்பம் வரும்போது விலகி விடுகிறார்கள் அது ஏன்?*

*மோகன்ராஸ்,*
*முத்துஜயன்கட்டு.*

உண்மையான நண்பர்களால் நல்வர்களாக நடிக்க முடியாது. வாழத்தான் முடியும். நீங்கள் குறிப்பிட்டுள்ளவர்கள் போலிகளே.

*பாவலா!*

*எங்களது வகுப்பில் ஒரு மாணவனை ஆசிரியர்களுக்கு பிடிக்காது அதைப் பற்றி நீர் என்ன நினைக்கின்றீர்?*

*மோகன்,*
*முத்துஜயன்கட்டு.*

ஆசிரியர்கள் பற்றற்ற பணிபுரிவர்களாக இருக்க வேண்டியது அவசியம்.... நீங்கள் குறிப்பிடும் ஆசிரியர்கள் அந்த பக்குவத்திற்கு இன்னும் வரவில்லையென்றே நினைக்கிறேன்.

*பாவலனே!*

*நான் ஒரு நண்பியோடு கதைப்பது ஒரு நண்பனுக்கு பிடியாது அது ஏன்?*

*ராஸ்,*
*மு/கற்சிலைமடு,*
*அ.த.க.பாடசாலை.*

உங்கள் நண்பியை உங்கள் நண்பருக்கு பிடிக்கவில்லை போலும்.

*பாவலா!*

*எந்தவொரு விஷயத்திற்கும் அவசரப்படுபவர்களைப் பற்றி கூறும்?*

*செல்வி.கஜந்தி முருகையா,*
*அளவெட்டி.*

வினாடி முற்றாக துடி துடித்து ஓடுபவர் ஆறு தடவைகள் சுற்றி வந்து கடக்கும் ஒருமணி நேரப் பொழுதே.... நிதானமாக நகர்வை மேற்கொள்ளும் மணித் தியால முள் மெல்ல அசைந்து கடந்து விடுகிறதே...!

*பாவலா!*

*சமாதானத்தின் ஆயுட் காலம் முடிந்து விட்டதாகக் கூறுகிறார்களே முடிந்து விட்டதா? அல்லது இன்னும் எவ்வளவு காலம்?*

*சாரங்கா,*
*கிளிநொச்சி.*

சமாதானத்தின் ஆயுள் ரேகையை விதி ரேகையில் இருந்து பிறப்படும் கிளை ரேகைகள் அடிக்கடி குறுக்கறுத்தவண்ணம் உள்ளதால் அதன் நிலை நித்திய கண்டம் தான்....பூரண ஆயுசுக்கு வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை.

*பாவலா!*

*உண்மைக்கும் பொய்க்கும் வேறுபாட்டை விளக்கிக் கூறமுடியுமா?*

*யாழினி,*
*புதுக்குடியிருப்பு.*

உண்மை போல் உள்ள பொய்களால், பொய்யாகிப் போகின்ற உண்மைகள்.

*பாவலா!*

*சோம்பேறி எதைச் செய்வான் எதைச் செய்யமாட்டான்.*

*தர்மினி,*
*கிளிநொச்சி.*

தொடர்ந்து தூங்குவான்... தூங்கிச் சாகமாட்டான்.

*பாவலா?*

*ஐ.தே.கட்சியின் பேரணியின் முடிவில் அடுத்த சனாதிபதித் தேர்தலில் தமக்கு வெற்றியென கோஷம் எழுப்பியுள்ளார்களே வெற்றிபெறுவார்களா?*

*விஜி,*
*புதுக்குடியிருப்பு.*

தெரிவிப்பது அவர்கள்... தீமானிப்பதோ மக்கள்.... அவ்வளவு தான்.

*பாவலா!*

*நல்ல மனநிலையில் இருக்க வேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும்?*

*பிரியா,*
*வவுனியா.*

தெளிவான சிந்தனையுடன் செயற்பட வேண்டும்.

*பாவலா!*

*அலட்சியப் போக்குடையவர்களுக்கு நீர் கூறும் அறிவுரை என்ன?*

*ரூபி,*
*கிளிநொச்சி.*

தயவு செய்து இலட்சியம் பேசாதீர்கள் என்று மட்டுமே...

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –128



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.


## படத்திற்கு மெருகூட்டுங்கள் –128

..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

பெயர் : ..........................................................................
முகவரி : ..........................................................................
..........................................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –127



கி.உதயா,
வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு.

### பரிசுக்குரிய வரிகள்

*தமிழ் மகனே தளராது தலை நிமிர்ந்திடு*
*துயர் தந்த இடம்பெயர் வாழ்வு இனி இல்லை*
*மண் மீட்பர் மண்மீட்டிடும் வேளை!*
*உன் சொந்த ஊரும் உன்கரம் வரும்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*சுனாமி அலைவந்து சுடுகாடாய் ஆனாலும்*
*சுதந்திர ஈழமதில் சுதந்திரமாய் வாழ்ந்திட*
*துவளாது எம் கால்கள்*
*தொடர்ந்து பணிசெய்யும்.*

விழியரசி,
புதுக்குடியிருப்பு.

*மனச் சுமையை மனதினுள் அடக்கி*
*பொருட் சுமையை ஈருருளியில் ஏற்றி*
*தொடர் இடம் பெயர்வில் நகரும் மனிதா!*
*தேச விடியல் உதிக்க துயர் அஸ்தமனமாகும்.*

ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*"ஆலமரமாய்" விசாலித்திருந்தது உன் குடும்பம்*
*ஆமியால் அரைவாசி போக சுனாமியால் மிகுதி போனது*
*ஆறுமாதமாகியும் உனை ஆற்ற அரசு தயாரில்லை.*
*உன்கையே உனக்குதவி புறப்படு!*

எஸ்.ராஜி,
வட்டக்கச்சி.

*வலுவாக தங்கள் உடல் இருக்கையில்*
*வழியிலே பயமெதற்கு அண்ணா*
*எத்தடைவரினும் தகர்த் தெறியும் பரம்பரை நாம்*
*ஏறி மிதியுங்கள் துணிவோடு-துவிச்சக்கர வண்டியை*

சு.சி. தமிழினி,
புதுக்குடியிருப்பு.


இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்




அருச்சுனா புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு






மல்டிலக் நிறுவனத்தினர் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வழங்கவென ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வர்ண வகைகளை வணிக ஒன்றியத்தலைவர் வெற்றியரசனிடம் மல்டிலக் நிறுவனத்தின் நிர்வாக முகாமையாளர் வழங்குவதை படத்தில் காணலாம். (படம்-செல்வா)













இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது